

கொலம்பியா
ரிகார்டுகளில் கேளுங்கள்
ஜுபிடர் பிக்சர்ஸாரின்
கஞ்சன்
டாக்கிப்-பாட்டுகள்
M.M. மாரியப்பா
GE. 6445:
..இந்த வுலகினில்..
2 பாகங்கள்
திருச்சி லோகநாதன்
GE. 6446:
பிச்சைக்காரன் ஆனேன்
திருச்சி லோகநாதன் & K.V. ஜானகி
...நீல வானிலிலே.
திருச்சி லோகநாதன் & K.V. ஜானகி
GE. 6447:
..ஆஹா! இனியாரே..
K.V. ஜானகி
..கள்ளன் ஒருவன்..
T.G. கமலா தேவி
GE. 6448:
..வாராயோ முருகா...
வாழ்க தமிழ்நாடு-கோரஸ்
திருச்சி லோகநாதன் & S. செல்வா
GE. 6449:
..அத்தை மகளே...
S. செல்வா
..என்னை வாங்குங்கோ
T.G. கமலா தேவி & M.M. மாரியப்பா
GE. 6450:
தெய்வலோக ஊர்வசி
M.M. மாரியப்பா
நீர் சூழ்ந்த நாடெல்லாம்
G.H. RAO
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்-2.

கல்கி

பொருளடக்கம்

மலர் 7
இதழ் 23

ஜனவரி 4

சர்வசித்து
மார்கழி 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.


For Whiter Brighter Washes
சலவை செய்ய
"கேரளா வாஷ்வெல்
பார் சோப்" என்று
கேளுங்கள். அது மிக
எளிதாகவும் சிக்கன
மாகவும் சலவை
செய்கிறது. அதன்
யதேஷ்டமான
நுரை துணிகளைக்
கஷ்டமின்றி சுத்தப்
படுத்துகிறது. குறை
ந்த நேரத்தில் துணி
யை துவைப்பது
மின்றி துணிகளும்
நீண்டு உழைக்கின்
றன. உங்கள் வீட்டுக்
குச் சிறந்த சோப்பு
அதுவே. உபயோகித்
துப் பாருங்கள்.
Kerala
WASH WELL BAR
Manufacturers
FAS-KS 2
Kerala Soap Institute, Calicut

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 23

என்ன சேதி?

போராட்டம் எதற்கு?

உலகிலே அடிமையாகக் கிடந்து பின்னர் சுதந்திரம் பெற்ற நாடுகள் பல. ஆனால், அவையெல்லாம் பல ஆண்டுகள் வரையில் கோர யுத்தம் புரிந்தே சுதந்திரத்தைப் பெற முடிந்தது. போர்த் தளவாடங்களின்றி, ஆத்ம சக்தியினால் மாத்திரம் சுதந்திரம் பெற்ற தனிப் பெருமை நம் பாரதநாடு ஒன்றுக்கே உரியதாகும்.

அதுபோலவே, பல நாடுகளிலும் பெண்கள் பல வருஷங்கள் வரையில் போராடியே சம உரிமைகளைப் பெற்றார்கள். ஆனால், இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் போராட வேண்டிய அவசியமே இல்லை. பெண் தெய்வங்களான சீதையும் சாவித்திரியும் அவதரித்த நாட்டில், — தாய்க்கு முதல் ஸ்தானம் கொடுத்துள்ள உயர்ந்த உபநிடதர் தோன்றிய நாட்டில், பெண்கள் ஆடவர்களுடன் சம உரிமைகளுக்காகப் போராடுவதென்ற பேச்சே எழுவதற்கில்லை.

சுதந்திரம் இழந்திருந்த இந்தியாவில் எத்தனையோ அழுக்குகள் படர்ந்திருந்தது போன்று, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையும் படர்ந்திருந்தது உண்மையே. சுதந்திர இந்தியாவில் அத்தகைய மடமைக்கு இடமில்லை யென்பது, இந்தியப் பெண்கள் இன்று உயர்ந்த நிர்வாக பீடங்களில் வீற்றிருப்பதிலிருந்து நிதர்சனமாகத் தெரிந்த விஷயம்.

இன்று இந்தியப் பெண்மணிகள் இன்னும் அதிகமாக உயர்ந்த ஸ்தானங்களில் இராததற்குக் காரணம் இந்தியாவின் பொதுவான துர்ப்பாக்கிய நிலைமையே யாகும். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை பத்து சத விகிதம்கூட இல்லாத நாட்டில், உயர்ந்த பதவிகளில் பெண்களின் தொகை அதிகமிருப்பது எவ்வாறு சாத்தியம்? எனவே, சுதந்திர இந்தியாவில் அத்தகைய நிலைமைக்குப் பரிகாரம் ஏற்படுவது பெண்களின் ஒத்துழைப்பையே பொறுத்திருக்கிறது.

வழிகாட்டி யிருக்கிறது

இந்த உண்மையைப் பாரத நாட்டுப் பெண் திலகங்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பது சென்னையில் நடந்துள்ள அகில இந்திய மாதர் மகாநாட்டின் நடவடிக்கைகளிலிருந்து நன்கு தெரிகிறது. இந்தியாவை நோக்கி நிற்கும் பல்வேறு பிரச்னைகளும் வெற்றிகரமாகத் தீருவதற்குப் பெண்களின் ஒத்துழைப்பு அவசியமென்று அந்த மகாநாட்டின் தலைவரான ஸ்ரீமதி அனசூயாபாய் காலே குறிப்பிட்டிருக்கிறார்.

சுதந்திர இந்தியாவில் சுமார் பத்துக் கோடி பெண்களுக்குமேல் வோட்டுரிமை பெறுவார்களாதலால், அவர்களுடைய பொறுப்பு மகத்தானது. எனினும், சுதந்திரப் போராட்டத்திலும், நிர்வாகப் பொறுப்பிலும் தங்களுடைய கீர்த்தியை நிலைநாட்டியுள்ள இந்தியப் பெண்மணிகள், எதிர்காலத்திலும் தங்களுடைய கடமையை வழுவின்றி நிறைவேற்றுவார்கள். அவ்வாறு நிறைவேற்றுவதற்கு மேற்படி மகாநாடு வழிகாட்டி யிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

எதில் வந்து முடியுமோ?

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்ததாக ஒரு கதை உண்டு. ஜுனாகாத் சமஸ்தானத்

தின் மன்னர் ஒரு முஸ்லிம், ஆகையால் அது பாகிஸ்தானில் சேர வேண்டும்! ஹைதராபாத் சமஸ்தானத்தின் மன்னர் ஒரு முஸ்லிம், ஆகையால் அது இந்தியாவுடன் சேரக் கூடாது! திருவாங்கூர் சமஸ்தானத்தின் மன்னர் ஒரு ஹிந்து, அங்குள்ள ஜனங்களும் ஹிந்துக்கள், ஆகையால் அந்தச் சமஸ்தானம் எதில் வேண்டுமாயினும் சேரலாம், அல்லது எதிலும் சேராமல் சுயேச்சையாகவும் இருக்க அதற்கு உரிமையுண்டு! காஷ்மீர சமஸ்தானத்திலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள், ஆகையால் அது பாகிஸ்தானில் சேர்ந்துதான் தீர வேண்டும்!

இப்படியாகப் பாகிஸ்தான் சர்க்காரின் சுயநலவாதம் எல்லையன்றிப் போய்க் கொண்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, கூடிய சீக்கிரம் பாகிஸ்தான்—இந்தியா யுத்தத்திலும் வந்து முடியும்போலிருக்கிறது.

பாம்புக்குப் பால்வார்த்த கதை

காஷ்மீரத்தின் மீது படையெடுத்துள்ள கொள்ளைக்காரர்களும் கொலைகாரர்களும் பாகிஸ்தான் வழியாகவே வருகிறார்கள். அவர்களுக்குப் பாகிஸ்தான் சர்க்காரே போர்த் தளவாடங்களைக்கொடுத்துத் தூண்டி வருகின்றனர். அவற்றைக் கொண்டு கொள்ளைக்காரர்கள் பல கிராமங்களை அழித்து விட்டதால், நிரபராதிகளான ஜனங்களில் மாண்டவர்கள் போக மீதியுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் ஜம்மு முதலிய பிரதேசங்களில் தஞ்சம் புகுந்த வண்ணமாக இருந்து வருகிறார்கள்.

மேற்படி அக்கிரமங்களை நிறுத்தும்படி இந்திய சர்க்கார் விடுத்த வேண்டுகோள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகி விட்டன. பாகிஸ்தான் தன்னுடைய நேர்மையற்ற போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்திய சர்க்கார் தாராளமாக விட்டுக் கொடுத்து நிதி, ராணுவ தளவாடங்கள் முதலியவைகளை யொட்டிப் பாகிஸ்தானுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அத்தகைய ஒப்பந்தத்தின் மூலம் இந்திய சர்க்கார் பாகிஸ்தான் விஷயத்தில் தங்களுடைய சிநேக பாவத்தைக் காட்டினர்.

ஆனால், பின்னர் நிகழ்ந்துள்ள சம்பவங்கள் பாகிஸ்தானின் விபரீதமான மனோ நிலையை வெளிப்படுத்தியிருக்கின்றன. அதாவது, இந்திய சர்க்காரிடமிருந்து கோடிக்கணக்கான தொகையையும் ராணுவ தளவாடங்களையும் பெற்று அவற்றைக் கொண்டே காஷ்மீர யுத்தத்தை நடத்தப் பாகிஸ்தான் துணியாதென்று கூறுவதற்கில்லை. எனவே, இந்தியாவின் சிநேகபாவமானது பாம்புக்குப் பால் வார்த்த கதையாக முடிந்திருக்கிறது.

காஷ்மீரப் பிரச்னை முற்றி விட்டதால், அவ் விஷயத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பரிசிலனைக்குக் கொண்டு வருவதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். காஷ்மீரத்தில் படையெடுத்துப் பட்டணங்களைக் கொள்ளையிட்டும் பாமர ஜனங்களைப் படுகொலை செய்தும் வரும் கூட்டத்தை அறவே ஒழிக்கும் வரையில் வாளா விருப்பதில்லையென்றும் இந்திய சர்க்கார் திடசங்கல்பம் செய்திருக்கிறார்கள். ஆம்; விரோதிகளுக்கும் விட்டுக் கொடுக்கலாம். ஆனால் அக்கிரமங்களுக்கு அடிபணிவது ஆண்மையுள்ளவர்களுக்கு அழகாகுமா?

காலம் காட்டும் பாதை!

படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்!


வல்லரசுகள் பேசுவது ஜனநாயக வாதம், அனுஷ்டிப்பது சுயநல வாதம். தங்களுடைய நலனுக்கு முரணாக இருக்குமிடத்து வல்லரசுகள் ஜனநாயகத்தைக் காற்று வாக்கில் விட்டு விடுவதற்குத் தயங்குவதில்லை. அது எப்படியாயினும் ஒன்றுமாத்திரம் நிச்சயம். ஜனநாயக முறையின் சக்தி நாளுக்கு நாள் பெருகி வருகிறது என்பது கண்கூடான விஷயம். காலக்கிரமத்தில் வல்லரசுகளும் தடுக்க முடியாதவாறு ஜனநாயகத்தின் சக்தி பெருகினாலும் அதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

ருமேனிய மன்னர் மைக்கேல் ராஜ்யத்தைத் துறந்துவிட்டதாயும், ருமேனியாவில் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு விட்டதாயும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. இதற்கு முன் உலகில் பல மன்னர்கள் துறவு பூண்டிருக்கிறார்கள். ராஜ்யத்திலிருந்து ஓடிய அல்லது விரட்டப்பட்ட மன்னர்களும் உண்டு. முடியரசு மறைந்து குடியரசு ஏற்படுவது தான் சகஜமாக இருக்கிறதேயன்றி, குடியரசு மறைந்து முடியரசு ஏற்படுவது என்பதற்கு இடமேயில்லை.

குருடனும் சந்தேகமின்றி அறிந்து கொள்ளும்படியாகக் காலம் காட்டும் இந்தப் பாதையை இந்திய மன்னர்களில் சிலர் இன்னும் பார்க்க மறுத்து, குடியரசு என்பது வெறும் கனவென்றும், கலப்பற்ற ஏதேச்சாதிகாரம்தான் நிரந்தரமானதென்றும் மதிமயங்கிக் கிடப்பது வேடிக்கையல்லவா?


அமெரிக்கா - ருஷ்யா
பல்லவி.
1948
அமெரிக்கா தலைவர் பதவிக்குப் போட்டி
முடியாது, நானும் பாடப் போகிறேன்.
அவுங் ஸான் கொலை வழக்கு முடிவு
பர்மா மாஜி பிரதம மந்திரி யூ சாவுக்கு மரணத்தை அறிவிக்கும் டமாரம்
பாலஸ்தீனத்தில் அராபியர்கள் வீடுகளின் மாடியிலிருந்து கூட வெடிகுண்டுகளைத் தூக்கிப் போட ஆரம்பித்திருக்கிறார்கள்

சங்கீத ஸீஸன்!



கொம்பு ஊதுவதில்
கை தேர்ந்த சர் முகமது
ஜப்ருல்லாகான்.
ஜப்ருல்லாகான்
தேசத்துச் சிறுவர்கள் தேர்ச்சி பெற்று வருகிறார்கள்.
அருமையான சங்கீதக் கச்சேரி
சென்னையில் நடந்து வருகிறது.
அகில இந்திய மாதர் மகாநாடு
தீர்மானங்கள்

கடைத்தேறட்டும்!

'லெக் - நௌ' என்ற ஆங்கில வார்த்தைகளுக்கு 'அதிர்ஷ்டம் இதோ (வருகிறது)' என்று அர்த்தம்.

1916-ம் வருஷம் லக்னௌவில், அதாவது லக்ஷ்மணபுரியில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் பாலகங்காதர திலகர் பேசியபோது, 'லக் - நௌ' என்ற வார்த்தைகளைக் குறிப்பிட்டு இந்தியாவுக்கு அதிர்ஷ்டம் இதோ வருகிறது என்று சொன்னார்.

ஏனெனில், காங்கிரஸின் சரித்திரத்திலே அது ஒரு முக்கியமான வருஷம்.

அந்த வருஷத்தில் தான் இந்திய தேசிய மகா சபையான காங்கிரஸுக்கும் இந்திய முஸ்லிம் லீகுக்கும் ஐக்கிய இந்தியாவை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமரசம் ஏற்பட்டது.

அதே வருஷத்தில்தான் சுயாட்சித் திட்டமொன்று உருவான முறையில் வகுக்கப்பட்டது.

1907-ம் வருஷத்திலிருந்து துர்ப்பாக்கிய வசமாகப் பிரிந்திருந்த காங்கிரஸின் இரண்டு கிளைகள் 1916-ல் ஒன்று சேர்ந்தன.

எனவே, அத்தனை சுப சூசகங்களுடன் நடந்த காங்கிரஸில், 'லக்-நௌ' அதாவது அதிர்ஷ்டம் இதோ வருகிறது என்று பாலகங்காதர திலகர் கூறியது பொருத்தமானதுதான்.

ஆனால், ஐக்கிய இந்தியாவை ஆதாரமாகக் கொண்ட காங்கிரஸ் — லீக் சமரசத் திட்டம் பின்னர் நிறைவேறாததால், சுதந்திரத்தை அடைந்தும்கூட இந்தியா துரதிர்ஷ்டமான சம்பவங்களிலிருந்து தப்ப முடியவில்லை.

அந்தத் திட்டத்தை ஒப்புக்கொண்ட முஸ்லிம் லீக் இறுதி வரையில் அதை நிறைவேற்றியிருக்குமாயின், எண்ணிக்கையற்ற இன்னல்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஆனால், லீக் திடீரென்று பாகிஸ்தான் பிரச்னையைக் கிளப்பி விட்டதால், இந்திய அரசியல் நிலைமையே அல்லோல கல்லோலமாகி இந்தியா இரண்டாகவும் பிளக்கப்பட்டது.

பாகிஸ்தான் கிடைத்து விட்டால் தங்களுடைய கஷ்டங்களெல்லாம் பறந்து போய்விடும் என்று கனவு கண்டு வந்த இந்திய முஸ்லிம்கள், இப்போதுதான் தங்களுடைய உண்மையான நிலைமையை உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

நேற்று வரையில் முஸ்லிம் லீகின் பரம பக்தர்களாக இருந்தவர்கள் கூட, லீக் இந்திய முஸ்லிம்களை நடு ஆற்றில் விட்டு விட்டது என்றும், இனி காங்கிரஸில் சேருவதே கரையேறும் வழி என்றும் அறிக்கைமேல் அறிக்கை விடுத்து வருகிறார்கள்.

இவ்வாறாக, பாகிஸ்தானிலும் வரவேற்பார் யாருமின்றி, இந்தியாவிலும் நம்பிக்கை வைப்பார் எவருமின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கு, எதிர்காலத்தில் அவர்கள் சீரும் சிறப்பும் அடைவதற்கேற்ற வழியைக் காட்டியுள்ள அரும் பெருந் தலைவரும், முஸ்லிம் உலகத்தின் மாணிக்கமுமான மௌலானா அபுல் கலாம் ஆஸாதுக்கு இந்தியாவிலுள்ள ஆறு கோடி முஸ்லிம்களும் என்றென்றும் கடமைப் பட்டவர்களாகின்றார்கள்.

• • •

சென்ற வாரம் லக்ஷ்மணபுரியில் நடந்த மகாநாட்டில், மௌலானா ஆஸாத், இந்திய முஸ்லிம்கள் செய்ய வேண்டிய கடமையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

"இந்தியாவைப் பிரித்தது ஒரு பெரும் தவறு. எனினும், செய்தது செய்தாகி விட்டது. இனி அதைக் குறித்து அழுது கொண்டிருப்பதால் எவ்வித பலனும் ஏற்படப் போவதில்லை.

"ஆனால், இந்தியாவைப் பிரித்த பின்னரும் முஸ்லிம் லீகை வைத்துக் கொண்டிருப்பது அர்த்தமற்ற காரியம். முஸ்லிம் லீக் இந்தியாவில் இருப்பது ஆபத்தானது. விஷத் தன்மை பொருந்தியது. நாசகரமானது. இந்தியாவின் க்ஷேமத்துக்கு முற்றிலும் புறம்பானது.

"இன்று தேசத்தின் முன்னேற்றத்துக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது வகுப்புவாதமேயாகும். அதன் விளைவாக எல்லா சமூகத்தினரின் கைகளும் இரத்தக் கறையாகி விட்டன.

"முஸ்லிம்கள் வகுப்புவாத அரசியலை விட்டொழித்து, ஜனநாயக அரசியலில் ஈடுபட வேண்டும்.

"ஹிந்துக்களின் தேசம், முஸ்லிம்களின் தேசம் என்ற இரு தேசக் கொள்கைக்கு இடமே இருக்கக் கூடாது.

"ஒரே தேசத்திலுள்ளவர்கள் எந்த மதத்தினராயினும் அவர்கள் சம உரிமையுடையவர்கள் என்ற சகோதர பாவம் வளர வேண்டும்.

"அவ்வாறு வளர்வதற்கு முதற் படியாக, வகுப்புவாதமும் துவேஷமும் உருவாகி வந்துள்ள முஸ்லிம் லீகைக் கலைத்து விடவேண்டியது அத்தியாவசியம் ஆகும். அதே சமயம் சகல முஸ்லிம்களும், இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையில் சேரவேண்டும்.

"காங்கிரஸ்தான் வகுப்புவாதக் கலப்பற்றது, சகல சமூகங்களையும் வரவேற்பது, ஜாதிபத வேற்றுமையின்றி எல்லோருடைய நலன்களையும் பாதுகாப்பது."

அறுபதினாயிரம் முஸ்லிம் பிரதிநிதிகள் கூடியிருந்த மாபெரும் மகாநாட்டில் மௌலானா ஆஸாத் அவ்வாறு ஐயம் திரிபுக்கு இடமின்றிக் கூறியிருக்கிறார்.

அறிஞர் ஆஸாதைத் தொடர்ந்து பேசிய மற்ற முஸ்லிம் பிரமுகர்களும் அவரது அபிப்பிராயத்தை ஆதரித்திருக்கிறார்கள்.

"எனது மூதாதையர் ஹிந்துக்கள்தான். அவர்கள் இருநூறு வருஷங்களுக்கு முன் இஸ்லாம் மதத்தைத் தழுவினார்கள். எனவே, எனது மதம் எதுவாயினும் நான் இந்தியனே" என்று மகாநாட்டில் ஒரு முஸ்லிம் தலைவர் கூறினார்.

• • •

ஒரு நாடு அரசியல் சுதந்திரம் கோருவது பொருளாதார சுபிட்சத்துக்காகவே யாகும்.

பொருளாதார சுபிட்சம்தான் ஜனங்களைப் பஞ்சம், பிணி முதலிய கஷ்டங்களிலிருந்து காப்பாற்ற வல்லது.

எனவே, அதற்கும் மதத்துக்கும் சம்பந்தமில்லை.

உலகிலே மதத்தை ஆதாரமாகக் கொண்ட அரசாங்கம் இருந்ததில்லை. குறிப்பிட்ட மதத்தினர் என்பதற்காக சிறுபான்மையோரைத் துன்புறுத்திய நாடு உருப்பட்டு முன்னேற்றம் அடைந்தது மில்லை.

இதற்கு ஸ்பெயின் தேசம்தான் உதாரணமாகும்.

சுமார் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்பெயின் தேசம் சிறுபான்மையோரைத் துன்புறுத்தி விரட்டியும் அடித்தது. அதன் விளைவாக அந்த நாடு இன்றளவும் பல்வேறு பூசல்களுக்கும் இலக்காகிப் பிற்போக்கான நிலையிலேயே இருந்து வருகிறது.

உலகிலுள்ள பல்வேறு நாடுகளிலும் பல்வேறு மதத்தினர் இருக்கிறார்கள்.

எனவே, மதத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளைப் பிளப்பதாயின், இந்த உலகத்தில் ஐம்பது நாடுகளல்ல, ஐந்நூறு நாடுகள் ஏற்பட வேண்டியதுதான்!

ருஷியாவில் பல மதத்தினர் இருக்கின்றனர். எனினும் அங்குள்ளவன் தன்னை ருஷியன் என்றே கூறுகிறான்.

சீனாவில் பல மதத்தினர் இருக்கின்றனர். எனினும், அவர்கள் தங்களை பௌத்தர்கள் என்றோ, முஸ்லிம்கள் என்றோ அல்லது கிறிஸ்துவர்கள் என்றோ சொல்லிக் கொள்வதில்லை. தங்களைச் சீனர்கள் என்றே சொல்லிக் கொள்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள சகலரையும் வெளிநாட்டினர் இந்தியர்களென்றே கூறுகிறார்கள்.

அப்படியிருக்க, இந்தியாவில் முஸ்லிம்கள் எல்லோருமாகச் சேர்ந்து தங்களை மாத்திரம் ஒரு தனி நாட்டினர் என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தமில்லை.

இந்த உண்மையை அகில இந்திய முஸ்லிம் மகாநாட்டுப் பிரதிநிதிகள் தங்களுடைய பிரசங்கங்களின் மூலமாகவும் தீர்மானங்களின் மூலமாகவும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஆராய்ச்சியாளரும் அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலையில் சரித்திரப் பேராசிரியருமான முகமது ஹபீப், ஒரு குறிப்பிட்ட சமூகத்தையோ அல்லது மதத்தையோ ஆதாரமாகக் கொண்ட சர்க்கார் சரித்திரத்திலே கண்டறியாத ஒரு ராக்ஷஸப் பிறவி என்று அப்பட்டமாகக் கண்டித்திருக்கிறார்.

இந்தியாவிலுள்ள முஸ்லிம் பிரமுகர்களில் பெரும்பாலோரும் முஸ்லிம் லீக் இந்திய முஸ்லிம்களுக்கு அனர்த்தமாகவே முடிந்திருக்கிற தென்பதை வியக்தமாக விளக்கி யிருக்கிறார்கள்.

* * *

மற்றும், இப்போது காஷ்மீரத்தில் நடந்து வரும் போராட்டம் மதப் போராட்டம் என்று பாகிஸ்தானியர்கள் கூறுகின்றனர்.

அது முற்றிலும் தவறென்பதைக் காஷ்மீர கேசரி ஷேக் அப்துல்லா விளக்கியிருக்கிறார்.

''காஷ்மீர யுத்தம் ஒரு மதப் போர் அல்ல, இரண்டு கொள்கைகளுக்குள் நடக்கும் போராட்டமாகும். அதாவது ஒரு மதத்தினர் அடங்கியது ஒரு தேசம் என்ற கொள்கைக்கும், ஒரு தேசத்திலுள்ள சகல மதத்தினருக்கும் அங்கு சம உரிமைகள் உண்டு என்ற கொள்கைக்கும் நடக்கும் போராட்டம். காஷ்மீரத்தில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் சகலரும் ஒற்றுமையுடன் வாழ முடியுமென்பதையும், பாகிஸ்தான் சர்க்காரின் கூக்குரல் வெறும் பித்தலாட்டம் என்பதையும் நிரூபிப்பதே காஷ்மீர யுத்தத்தின் கருத்து'' என்று ஷேக் அப்துல்லா கூறுகிறார்.

பாரத நாட்டிலுள்ள பல்வேறு மதத்தினரும் சகோதரர்களைப் போன்று வாழ்வதற்காக மகாத்மா காந்தி முதலிய தலைவர்கள் செய்துவரும் அருந்தொண்டை ஜாமியித்-உல்-உலமாவின் பொதுக் காரியதரிசி மௌலானா ஹபீபூர் ரஹ்மான் மனப்பூர்வமாகப் பாராட்டி யிருக்கிறார்.

அந்தப் பிரமுகர் இந்திய முஸ்லிம்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் இதுதான்:

''கராச்சியிலிருந்து வரும் கட்டளைகளைக் கண்ணெடுத்தும் பாராதீர்கள். இந்தியாதான் நம்முடைய தேசம். இந்தியாவினிடமே நாம் விசுவாஸம் காட்டவேண்டும். மகாத்மா காந்தியினிடத்திலும் மற்ற காங்கிரஸ் தலைவர்களிடத்திலும் நம்பிக்கை வைத்தால் தான் எதிர்காலத்தில் நாம் க்ஷேமம் அடைய முடியும்'' என்று மேற்படி தலைவர் முஸ்லிம்களுக்குப் புத்திமதி கூறி யிருக்கிறார்.

* * *

கராச்சியில் கூடிய முஸ்லிம் லீகை, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என்றும் இந்தியா முஸ்லிம் லீக் என்றும் பிரித்தபோது, மற்ற மாகாணங்களிலுள்ள லீக் பிரமுகர்கள் அதை உற்சாகத்துடன் வரவேற்கவில்லையாம்.

ஏனெனில், லீகினுடைய துவேஷப் பிரசாரத்தின் வினையை அவர்கள் நேரில் அனுபவித்தவர்களல்லவா?

ஆனால், சென்னையிலுள்ள ஒருவர் மாத்திரம் பெரும்பாலோரும் வேண்டாத லீகைச் சென்னையில் ஸ்தாபிக்க முற்படுவது ஆச்சரியமாக இருக்கிறது.

சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் ஹிந்து — முஸ்லிம்கள் பல வருஷங்களாகச் சகோதரர்கள் போல வாழ்ந்து வருகிறார்கள்.

ஹிந்து — முஸ்லிம் ஒற்றுமைக்குச் சென்னை மாகாணம் மற்றெல்லா மாகாணங்களுக்கும் வழி காட்டியாக இருந்து வருகிறது.

அப்படியிருக்க, வகுப்பு வாதத்தையும் துவேஷத்தையும் அடிப்படையாகக் கொண்ட லீகின் தலைமைப் பீடத்தை இங்கு ஸ்தாபிப்பதன் மூலம் சென்னையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படலாம்.

பின்னர், 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்ற கதையாக முடிந்தாலும் அதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆகையால், இந்திய முஸ்லிம்கள் ஒன்று காங்கிரஸில் சேரவேண்டும். இல்லையேல் வேறெந்த அரசியல் கட்சியில் சேர்ந்தாலும் சேரட்டும்.

ஆனால், மௌலானா ஆஸாத் கூறியிருப்பது போல், வகுப்பு வாதத்தையும் துவேஷத்தையும் ஆதாரமாகக் கொண்ட லீகில் முஸ்லிம்கள் இருப்பதால், அவர்களுக்கு எக்காலத்திலும் க்ஷேமம் ஏற்பட முடியாது.

இஸ்லாம் மதத்தைப் பாதுகாப்பதில் மௌலானா ஆஸாதைக் காட்டிலும், ஷேக் அப்துல்லாவைக் காட்டிலும் தங்களுக்குத் தான் அதிகப் பொறுப்பு என்று சில முஸ்லிம்கள் கூறுவார்களாயின், அது பெரும் நகைப்பிற்கு இடமாகும்.

எனவே, இந்தியாவின் தவப் புதல்வர்களில் ஒருவரும் முஸ்லிம்களின் தனிப்பெரும் தலைவருமான மௌலானா அபுல்கலாம் ஆஸாத் காட்டியுள்ள சீரிய வழியைப் பின்பற்றி இந்திய முஸ்லிம்கள் கடைத்தேறட்டும்!

இருட்டாம் இருட்டு!



லக்னோவில் மௌலானா ஆஸாதின் தலைமையில் கூடிய மாபெரும் முஸ்லிம்களின் கூட்டத்தில் இந்திய முஸ்லிம்கள் லீக்கைக் கலைத்து விட்டுக் காங்கிரஸில் சேரவேண்டுமென்று தீர்மானம் ஆகியிருக்கிறது. ஆனால் சென்னை மாகாணத்து லீக் தலைவர் ஜனாப் முகம்மது இஸ்மேயில் சென்னை மாகாணத்தில் புதிய முஸ்லிம் லீக்கின் தலைமைக் காரியாலயத்தை ஸ்தாபிக்கப் போகிறாராம்!



ஹிந்தி மீரா

இந்த இதழின் அட்டைப் படத்தில் ஜொலிக்கிறவர்கள் யார் யார் என்று தெரிகிறதல்லவா? ஒருவர் சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரி, பண்டித ஜவஹர்லால் நேரு. பாரதத் தாயின் சேவையிலிருந்து அவருடைய கவனத்தைச் சிறிது நேரத்துக்குக் கவர்ந்து இழுத்து, தன்னுடைய அன்பு வலையில் சிக்கவைத்த ஸ்ரீமதி ... வேறு யாருமில்லை; பத்து வயதுக்குள் பாத நாட்டியக் கலையின் கரை கண்டு புகழ்பெற்ற குழந்தை ராதா.

புது டில்லியில் 'பிளாஸா' தியேட்டரில் ஹிந்தி மீரா படம் பார்த்து முடிந்ததும், ஜவஹர்லால்ஜி குழந்தை மீராவாக நடித்த ராதாவைத் தேடிக் கண்டு பிடித்துக் கட்டித் தழுவிக் கொண்டு மனமார்ந்த ஆசிகளைப் பொழிந்தார். அவருடைய கண்களிலே ததும்பும் கரைகாணாக் கருணை வெள்ளத்தைக் கவனியுங்கள்.

"தீரமான புலமை எனில்
வெளிநாட்டார் அதை வணக்கம்
செய்தல் வேண்டும்!"

என்று கவியரசர் பாரதியார் கூறினார். தமிழ் நாட்டின் கலைச் சிறப்பு உலகெல்லாம் பரவி ஒளி செய்ய வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு சொன்னார்.

பாரதியாரின் மனோரதத்தைச் சென்ற 1947-ம் ஆண்டில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் அவருடைய செல்வப் புதல்வி குழந்தை ராதாவும் நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள். இவர்களுடைய அரும் பெரும் கலைப் பணியானது பாரதி மண்டப வைபவத்தைக் காட்டிலும் சொர்க்கவாசியான மகா கவியின் உள்ளத்தை மகிழ்வித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

* * *

தமிழில் வெளியான "மீரா" படத்துக்கு ஹிந்தி உருவம் கொடுப்பதற்காக ஸ்ரீ சதாசிவம் ஒரு வருஷ காலமாகப் பிரயத்தனம் செய்து வந்த விவரத்தை நேயர்கள் அறிவார்கள். அவருடைய பெரும் பிரயத்தனம் 1947-ல் பூர்த்தி பெற்றது.

ஹிந்தி 'மீரா'வில் காட்சிகள் — தோற்றங்கள் — பாத்திரங்கள் — நடிப்பு ஆகிய எல்லாம் பெரும்பாலும் தமிழ்ப் படத்தில் உள்ளன போலவேதான்.

குழந்தை மீராவாக நடித்த செல்வி ராதாவும், ராணி மீராவாக நடித்த ஸ்ரீமதி எம். எஸ். ஸும் ஹிந்தி படத்தில் தாங்களே சுயமாக ஹிந்தி பாஷையில் பேசியிருக்கிறார்கள்; பாடியிருக்கிறார்கள்.

* * *

ஹிந்தி மீரா படத்துக்கு வடநாட்டார் அளித்த வரவேற்பு எத்தகையது என்று கேட்டால், அதை "1947-ம் ஆண்டில் கலை உலகில் நிகழ்ந்த இணையில்லா அற்புதம்" என்றே சொல்ல வேண்டும்.

படம் ஹிந்தியில் பெரும்பாலும் உருவான உடனேயே ஸ்ரீமதி சரோஜினி தேவி அதைப் பார்த்து விட்டு ஒரே ஆனந்த பரவசமாகி விட்டார். மீரா படத்தையும் ஸ்ரீமதி சுப்பலக்ஷ்மியையும் வடநாட்டாருக்கு அறிமுகப் படுத்துவதற்காகத் தாமே படத்தின் ஆரம்பத்தில் திரையிலே தோன்றிப் பேசவும் மனமுவந்தார். அவ்விதம் பேச முன்வந்தபிறகு, "அதெல்லாம் முடியாது; எம். எஸ். ஸை வட இந்தியர்களுக்கு மட்டும் அறிமுகப் படுத்த மாட்டேன்; உலகத்துக்கேதான் அறிமுகப் படுத்துவேன்!" என்று கூறி ஆங்கிலத்தில் அமுதநிகர மொழிகளைப் பொழிந்தார். ஹிந்தி மீராவின் தொடக்கத்தில் ஸ்ரீமதி சரோஜினி திரையிலே தோன்றிப் பேசுவதைக் காணலாம்; கேட்கலாம்.

படம் முற்றும் உருவான பிறகு ரஸிக சிகாமணியான பம்பாய் பிரதம மந்திரி ஸ்ரீ பி. ஜி. கேர் அவர்களும், 'ஹோம்' மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்களும், ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி முதலிய கலைஞர்களும் படத்தைப் பார்த்தார்கள். "இவ்வளவு சிறந்த தூய்மையான படத்தையும், இவ்வளவு இனிய கீதத்தையும் இது வரை நாங்கள் பார்த்ததில்லை; கேட்டதில்லை" என்று சொன்னார்கள்.

ஹிந்தி ஸினிமாவைத் தூய்மைப் படுத்துவதற்காகப் பம்பாய் மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய் செய்துவரும் பெரு முயற்சியை நேயர்கள் அறிவார்கள். "இந்தமாதிரியே எல்லாரும் படம் எடுத்தால் ஸினிமா

தணிக்கை போர்டே வேண்டியதில்லை'' என்பது அவருடைய அபிப்பிராயம்.

* * *

முன்னொரு சமயம், அதாவது சுமார் ஆறு மாதத்துக்கு முன்பு, லார்ட் மவுண்ட் பேட்டன் இங்கிலாந்துக்குப் புறப்படும் தறுவாயில் அவருக்கும் ஜவாஹருக்கும் நடந்த சம்பாஷணையைப் பற்றிக் ''கல்கி'' இதழ் ஒன்றில் குறிப்பிட்டிருந்தோம்.

இந்தியாவின் அரசியல் சிக்கல்களைப் பற்றி மவுண்ட்பேட்டன் பிரபு தமது கவலைகளைத் தெரிவித்தார். அதற்கு ஜவாஹர் லால்ஜி ''உங்களுடைய கவலைகளைக் கொஞ்சம் மறந்திருப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. தென்னாட்டிலிருந்து எம். எஸ். சுப்புலக்ஷ்மி வரப்போகிறார். அவருடைய கீதங்களைக் கேட்டால் எல்லாக் கவலைகளையும் சற்று நேரத்துக்கு மறந்திருக்கலாம். ஆனால் நீங்கள்தான் நாளைக்கே சீமைக்குப் புறப்படுகிறீர்களே?'' என்றார்.

இந்தச் சம்பாஷணையை ஒருவித அதிசயோக்தி யென்றும், மிகை செய்த கற்பனை என்றும் சிலர் எண்ணியிருக்கக் கூடும்.

எனினும், சென்ற வருஷக் கடைசியில் டிசம்பர் 5உ யன்று புதுடில்லியில் என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொண்டு பிறகு நிர்மாணிக்கக் கோருகிறோம்.

மேற்படி தேதியில் புதுடில்லி 'பிளாஸா' தியேட்டரில் ஹிந்தி மீரா திரையிடப் பட்டது. காஷ்மீரத்துத் தொல்லை மிகவும் நெருக்கடியான உச்ச நிலையை அடைந்திருந்த கட்டம் அது. ஆயினும், பண்டித ஜவாஹர்லால் நேரு தாம் ஊரில் இருந்தால் மீரா ஆரம்ப விழாவுக்கு அக்கிரஸனம் வகித்து விஜயம் செய்து தலைமை வகிப்பதாக ஒப்புக் கொண்டிருந்தார். அந்தப்படி அவர் விஜயம் செய்தது மட்டுமல்ல; முன்னொரு தடவை நாம் கூறியதை நிரூபித்துக் காட்டுமாறு கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டனையும் லேடி மவுண்ட் பேட்டனையும் அழைத்துக் கொண்டு தியேட்டருக்கு வந்தார்.

இன்னும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், அவருடைய குமாரிகள், யுத்த மந்திரி சர்தார் பலதேவ் ஸிங், நிதி மந்திரி ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியார் ஸ்ரீ என். கோபாலசாமி ஐயங்கார், பெல்ஜிய நாட்டுத் தூதர் முதலிய பிரமுகர்களும் மீரா படத் திறப்புக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

கடைசிக் காட்சி முடியும் வரையில் ஒருவரும் எழுந்திருக்கவில்லை. ஒரே பரவசத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கியிருந்தார்கள்.

கவர்னர் ஜெனரல் தம்பதிகளுக்குப் பண்டித ஜவாஹர்லால்ஜி கதைப் போக்கையும், சம்பாஷணைகளின் நலத்தையும், நடிப்புத் திறத்தையும் அடிக்கடி எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். உதாரணமாக, மீராவுக்கும் மேவார் ராணாவுக்கும் கலியாணம் நடக்கும் காட்சியின்போது, ''மணப் பெண்ணின் முகபாவத்தைப் பாருங்கள். இந்தக் கலியாணத்தில் தனக்கு விருப்பமில்லை என்பது எவ்வளவு திறமையாக முகபாவத்திலேயே காட்டப்படுகிறது?'' என்று எடுத்துச் சொன்னார்.

படம் முடிந்ததும், பார்த்தவர்கள் அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு ஸ்ரீ சதாசிவம் தம்பதிகளையும் குழந்தை ராதாவையும் வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

படத்தைப் பார்த்த தமிழர்களோ, பெருமித மகிழ்ச்சியினால் நிமிர்ந்த மார்புடனே தான் வெளியே வந்தார்கள்.

நிதிமந்திரி ஸ்ரீ ஆர். கே. சண்முகம் ஒரு வடநாட்டு நண்பரிடம் கூறினார்:— ''பதினைந்து வருஷம் தவணை தருகிறேன். உங்கள் வடநாட்டு நட்சத்திரம் யாரை யாவது தமிழும் தமிழ் இசையும் கற்றுக் கொண்டு இந்தமாதிரி தமிழ்ப் படத்தில் நடிக்கச் சொல்லுங்கள், பார்க்கலாம்!''

புதுடில்லித் தமிழர்கள் எல்லாரும் இத்தகைய பெருமிதம் கொண்டார்கள்.

படத்தைப் பார்த்து அளவிலாத மகிழ்ச்சி அடைந்த லேடி மவுண்ட் பேட்டன் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்குத் தம் பாராட்டுதல்களைச் சொல்லிவிட்டு, மறுநாள் கவர்னர் ஜெனரல் மாளிகைக்கு அவசியம் வந்து போகவேண்டும் என்று கூறினார். அந்த மாளிகையின் தோட்டத்தில் எடுக்கப்பட்ட படத்தை இந்த இதழில் உள்ள ஹிந்தி மீரா படத் தொகுதியில் காணலாம்.

* * *

சென்ற டிசம்பர் மாதக் கடைசியில் ஹிந்தி மீரா படம் கல்கத்தாவில் திரையிடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு இரண்டு மாகாண கவர்னர்கள் விஜயம் செய்தார்கள். அச்சமயம் கல்கத்தா வந்திருந்த ஸ்ரீமதி சரோஜனி தேவியும் ராஜாஜியும் மீரா படம் காட்டப்படும் கொட்டகைக்கு விஜயம் செய்யும் காட்சியை இந்த இதழில் வேறிடத்தில் பார்க்கலாம். 'மீரா படத்தை

நூறு தடவை வேணுமானாலும் நான் சலியாமல் பார்ப்பேன்!" என்று சொன்னவர் அல்லவா ஸ்ரீமதி சரோஜனி? எனவே, இரண்டாவது தடவையாக அவர் கல்கத்தாவில் பார்த்ததில் வியப்பு ஒன்றுமில்லை.

• • •

பாரத நாட்டின் தலை சிறந்த தலைவர்களும் அறிஞர்களும் ஹிந்தி மீராவைப் பார்த்து மகிழ்ந்தது ஒருபுற மிருக்கட்டும். வடநாட்டுப் பொது மக்கள் எப்படி ஹிந்தி மீராவை வரவேற்கிறார்கள் என்பதல்லவா முக்கியமான விஷயம்?

முதன் முதலில் ஆகஸ்டு 15உ யன்று நாகபுரியில் ஹிந்தி மீரா திரைக்கு வந்தது. சென்ற வாரம் வரை அதாவது பத்தொன்பது வாரங்கள் நாகபுரியில் படம் ஓடிற்று. இது நாகபுரிக்கு ஒரு ரிகார்டு.

பம்பாயில் நவம்பர் 21-ம் தேதி "சென்ட்ரல் டாக்கீஸ்" என்னும் பிரபலமான கொட்டகையில் வெளியிட்டார்கள். "துக்காராம்" முதலிய வடநாட்டு முதல் தரமான படங்கள் ஓடிய கொட்டகை இது. "துக்காராம்" படத்துக்கு வந்த ஜனங்களைக் காட்டிலும் அதிகமாக "மீரா"வைப் பார்க்கப் பம்பாய் வாசிகள் வருகிறார்கள். வெளியாகி ஏழு வாரம் ஆகியும் இன்னும் ஜனங்கள் டிக்கட் இல்லாமல் திரும்பிப் போகும் நிலையில் இருக்கிறது. மீரா கீதங்களை இப்போது பம்பாய் நகரில் எங்கெங்கும் கேட்கலாம்.

கல்கத்தாவில் 'வஸுஸ்ரீ' என்னும் தியேட்டரில் ஹிந்தி "மீரா" முதலில் திரையிடப் பட்டது. படத்தைப் பார்க்கப் பொது ஜனங்களின் ஆர்வம் அளவு கடந்திருந்தது. கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல் நாலு நாளைக்குள்ளே 'வீணு' என்னும் இன்னொரு தியேட்டரிலும் படத்தைக் காட்டத் தொடங்கினார்கள்! இப்போது இரண்டு இடங்களிலும் படம் ஓடுகிறது. அப்படிச் செய்தும் நாலு நாளைக்கு முன்னதாகவே உயர்ந்த வகுப்பு டிக்கட்டுகள் எல்லாம் விற்றுப் போய் விடுகின்றன!

கல்கத்தாவிலிருந்து டிசம்பர் 27உ வந்த தந்தியைப் பாருங்கள்:—

"Meera broke a'l India Box Office record at Basusree. Weeks collections exceed Thirtytwo Thousand. Next weeks collections including simultaneous Bina run will exceed Fiftysix Thousand Hearty congratulations."

கல்கத்தாவில் முதலில் மீரா வெளியான தியேட்டருக்கு 'வஸுஸ்ரீ' என்று பெயர். முதல் வாரத்தில் இந்தத் தியேட்டரில் ஹிந்தி மீராவுக்கு ரூபாய் முப்பத்து இரண்டாயிரம் வசூல் ஆயிற்று. இரண்டாவது வாரத்தில் 'வீணு' என்னும் தியேட்டரிலும் சேர்த்து படம் காட்டப் பட்டதில் மொத்த வசூல் ரூபாய் ஐம்பத்தாறாயிரம்.

இந்தியாவிலேயே எந்தப் படத்துக்கும் முதல் வாரத்தின் வசூல் இவ்வளவு ஆனது கிடையாதாம்.

ஆக, வடநாட்டில் ஹிந்தி "மீரா" திரையிடப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் படத்துக்கு அமோகமான வரவேற்புக் கிடைத்திருக்கிறது.

பக்தி உணர்ச்சியுள்ள ஜனங்களை மீரா கீதங்கள் வெறிகொள்ளச் செய்கின்றன. சங்கீத ரஸிகர்கள், "இவ்வளவு உயர்ந்த இனிமையான சங்கீதம் இதுவரையில் வடநாட்டில் வெளியான எந்தப் படத்திலும் கேட்டதில்லை" என்று சொல்கிறார்கள். காட்சிகளின் அமைப்பு, கதைப் போக்கு, பாத்திரங்களின் சம்பாஷணை எல்லாம் பாராட்டப் படுகின்றன. இவையெல்லாம் இருக்க, ராதா, எம். எஸ்., இவர்களுடைய நடிப்புத் திறன் எல்லாராலும் சிறப்பாகப் பாராட்டப் படுகின்றது. சித்தூரை விட்டு மீரா தம்பூர் ஒன்றே துணையாக பிருந்தாவன யாத்திரை கிளம்பும்போது மனமுருகாதவர் யாரும் இல்லை.

"உண்மையான மீராவே நம் எதிரில் தோன்றி பக்தி பரவசமாகப் பாடி ஆடிப் பேசித் தன் தெய்விக வாழ்க்கையை நடத்துவது போலிருக்கிறது" என்று ஸ்ரீமதி சரோஜினி தேவி சொல்லி யிருப்பதை வடநாட்டுப் பொது மக்கள் பரிபூரணமாக ஆமோதிக்கிறார்கள்.

சில விஷயங்களில் பொது ஜனங்களின் அபிப்பிராயமும் பத்திரிகைகளின் அபிப்பிராயமும் ஒற்றுமைப் படுவது அபூர்வம். பத்திரிகைகள் "உயர்தரம்" என்றும், "அற்புதம்" என்றும் அபிப்பிராயம் கொடுக்கும் படங்களுக்கு ஜனக் கூட்டம் சேருவதில்லை. பத்திரிகைகள் பலமாகக் கண்டனம் செய்யும் படங்களுக்கு ஜனக் கூட்டம் அலைமோதிக் கொண்டு வருவதுண்டு. ஸினிமாக் கலைத் துறையில் இந்த மாறுபாட்டை நாம் பல முறை பார்த்திருக்கிறோம்.

ஹிந்தி "மீரா" படத்தைப் பற்றிய வரையில் வடநாட்டுப் பத்திரிகைகளின்

அபிப்பிராயமும் பொதுஜனங்களின் அபிப்பிராயமும் ஒத்திருக்கின்றன.

பம்பாய்ப் பத்திரிகைகள் — ஆங்கிலம், குஜராத்தி, மராட்டி பாஷைப் பத்திரிகைகள் — தினத்தும், ஒருமுகமாக "மீரா"வைப் பாராட்டியிருக்கின்றன. பாராட்டுதல் என்றால் ஏதோ சம்பிரதாயமான பாராட்டுதல் அல்ல.

"சென்ட்ரல் சினிமா ஒரு யாத்திரை ஸ்தலமாகி விட்டது. இசைப் பிரேமை கொண்ட பம்பாய் வாசிகள் நாள் திரளாகக் கூடி சென்ட்ரல் சினிமாவை முற்றுகை போடுகிறார்கள். பக்தியுள்ள ஜனங்கள் தெய்வீக 'மீரா'வைத் தரிசனம் செய்வதற்காக வந்து கூடுகிறார்கள்" என்று ஒரு பத்திரிகை விமரிசனம் ஆரம்பமாகிறது.

"படம் ஆரம்பமானதும் தியேட்டரில் உட்கார்ந்திருக்கிறோம் என்பதையே மறந்து விடுகிறோம். காட்சியும் ஒலியும் நம்மைக் கவர்ந்து ஏதோ மந்திரம் போட்டதுபோல் மயக்கச் செய்கின்றன. காட்சி முடிந்த பிறகுதான் இவ்வளவு நேரமும் சினிமா பார்த்தோம் என உணர்கிறோம்!" என்று பிரீபிரஸ் விமரிசகர் எழுதுகிறார்.

மேலும் அவர் கூறுவது:—"ஹிந்தி சினிமாக்களில் இத்தகைய இனிய குரலை நாம் கேட்டதில்லை; இவ்வளவு சங்கீதத் திறமையையும் பார்த்ததில்லை. சினிமாப் பாட்டுக்கள் எல்லாம் மட்டரகமாக இருக்க வேண்டுமென்ற குருட்டு நம்பிக்கையை இந்த 'மீரா' படம் தகர்த்து விடுகிறது. ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி ஒரு சங்கீத நட்சத்திரம் மட்டும் அல்ல; மிகச் சிறந்த நடிகை. 'டெக்னிக்' ஒன்றும் இல்லாமலே அவர் நடிக்கிறார். மீராவின் உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிகள் எல்லாவற்றையும் அவரே உணர்ந்து அநுபவிக்கிறார். எனவே அவருடைய நடிப்பு, சாதாரண நடிப்புக் கலையின் 'டெக்னிக்'கையெல்லாம் கடந்து மேலே போய் விடுகிறது!"

புது டில்லியில் வெளியாகும் "இண்டியன் நியூஸ் க்ரானிகல்" பத்திரிகையின் சினிமா கிரிடிக், "நாஸ்திகர்களுக்கு ஓர் எச்சரிக்கை" என்ற தலைப்பில் 'மீரா'வைப் பற்றிய விமரிசனம் எழுதியிருக்கிறார். "எப்பேர்ப்பட்ட பிடிவாதமான நாஸ்திகராயிருந்தாலும் சரி, இந்த 'மீரா' படத்தைப் பார்த்து, மீராவின் கீதங்களையும் கேட்டால் கட்டாயம் பக்திமான் ஆகிவிடுவார்!" என்று அவர் அறை கூவுகிறார்.

இன்னொரு புது டில்லிப் பத்திரிகை, "மீராவில் எம். எஸ். ஹிந்தி பேசுவதைக் கேட்ட பிறகு, மதராஸிலிருந்து இந்திய சட்டசபைக்கு வரும் பிரதிநிதிகள் ஹிந்தி பேசுவதற்கு ஏன் தயங்கவேண்டும் என்பது வியப்பாயிருக்கிறது!" என்று எழுதுகிறது.

மிகப் பெரும்பாலான வடநாட்டுப் பத்திரிகைகளின் விமரிசனங்கள் இந்த முறையிலேயே அமைந்திருக்கின்றன.

• • •

நவம்பர் மாதத் தொடக்கத்தில் பம்பாயில் ஹிந்தி 'மீரா' வெளியான சமயத்தில் நான் பம்பாய்க்குப் போயிருந்தேன். மூன்று நாள் தங்கியிருந்தேன். மீராவைப் பார்க்க வந்த சாதாரண ஜனங்களும், மேல் வகுப்பு ரசிகர்களும், பத்திரிகை விமரிசகர்களும் எப்படிப் படத்தை அநுபவிக்கிறார்கள், என்ன பேசிக் கொண்டு போகிறார்கள் என்பதையெல்லாம் கவனித்தேன்.

சாதாரண ஜனங்கள் படத்தைப் பார்த்து விட்டு ஒரே பரவசமாகப் போகிறார்கள். (மறுபடியும் திரும்பி வரவேண்டும் என்னும் உறுதியுடனேதான்!) மேல் வகுப்புகளுக்கு வரும் ரசிகர்களுக்கோ ஆனந்தத்தோடு ஆச்சரியமும் ஏற்படுகிறது. "ஒரு தமிழ் தேசத்துப் பெண் இவ்வளவு நன்றாக ஹிந்தியில் பேசவும் பாடவும் முடியுமா? தமிழர்கள் இவ்வளவு நல்ல ஹிந்தி படம்—வட நாட்டுப் படங்களையெல்லாம் தூக்கி அடிக்கக் கூடிய சிறந்த படம் — தயாரிக்க முடியுமா?" என்று அவர்கள் ஆச்சரியப் பட்டுக் கொண்டு போகிறார்கள். சினிமா விமரிசகர்களோ, தங்கள் செவிகளையும் கண்களையும் நம்பமுடியாமல், "இந்தப் படம் தமிழில் தயாரித்து ஹிந்திப் படுத்தியது உண்மைதானா? நாம் பார்ப்பதும் கேட்பதும் உண்மைதானா?" என்ற அவநம்பிக்கையுடன் "மறுபடியும் ஒருமுறை பார்த்துத்தான் நிர்மாணிக்க வேண்டும்!" என்று சொல்லி விட்டுச் செல்கிறார்கள்.

ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் சந்தேகமே இல்லை. சென்ற 1947-ம் ஆண்டில் ஹிந்தி மீராவின் மூலமாகத் தமிழகத்தின் பெருமை வட இந்தியாவில் மிக உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணமான ஸ்ரீ டி. சதாசிவம் தம்பதிகளையும் குழந்தை ராதாவையும் தமிழ் மக்களின் சார்பாக வாழ்த்தி நன்றி செலுத்துகிறேன்.

இவ்வளவு உயர்தரமான படத்தை — தமிழ் நாட்டுக்கே புகழ் அளிக்கும் படத்தை — தமிழிலும் ஹிந்தியிலும் டைரக்ட் செய்த எல்லிஸ் ஆர். டங்கனைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

வாழ்க குதிரைப் பந்தயம்! வீழ்க விவசாயம்!



"விவசாயி"

சிவசங்கர முதலியாருக்கு ரயில் பாதை ஓரமாகக் கொஞ்சம் புன்செய் நிலம் இருந்தது. வெகு காலமாக அந்த நிலம் சாகுபடி செய்யப்படாமல் தரிசாகக் கிடந்தது.

"பஞ்சத்தைத் தீர்க்க ஒத்துழையுங்கள்!" என்றும், "உணவு உற்பத்தியை அதிகமாக்குங்கள்!" என்றும் நாடெங்கும் செய்யப்படும் பிரசாரம் சிவசங்கர முதலியாரின் காதிலும் விழுந்தது. தேசம் சுதந்திரம் அடைந்திருக்கும் இந்த வருஷத்தில் தம்மாலான கைங்கரியத்தைச் செய்வதென்று முதலியார் தீர்மானித்தார்.

உணவு உற்பத்தியைப் பெருக்கும் காரியத்தில் சர்க்கார் அசாத்தியமான சிரத்தை கொண்டிருக்கிறார்கள் என்றும், விவசாய இலாகா வேண்டிய உதவிகள் செய்யுமென்றும் அவர் கேள்விப்பட்டிருந்தார்.

இதை நம்பிச் சிவசங்கர முதலியார் மூன்று ஜதை உழவு மாடு வாங்கினார். பத்து ஏக்கரா நிலத்தை உழுது பண்படுத்தினார். செப்டம்பர் மாதத்தில் அந்தப் பத்து ஏக்கரா நிலத்திலும் நெல் விதைத்தார். நெல் விதைப்பதற்குப் பட்டணம் படி நூறு படி நெல் செலவாயிற்று.

அந்தப் பிரதேசத்தில் ஆற்றுத் தண்ணீர் பாய்ச்சும் நீர்ப்பாசன வசதி கிடையாது. ஏரிப்பாசனமும் இல்லை. மானம் பார்த்த பூமி. எனவே, நெற்பயிருக்கு நாற்றுவிட்டு நடும் வழக்கம் இல்லை. நிலத்தை உழுது நெல்லை விதைத்து விடுவார்கள். மழை பெய்தால் பூமியின் வளத்துக்குத் தக்கபடி பயிர் செழிக்கும். நன்செய் நிலத்தில் சாதாரணமாகக் கிடைக்கும் மகசூலில் நாலில் ஒரு பங்கு நெல் தான் கிடைக்கும்.

சிவசங்கர முதலியார் நிலத்தை நன்றாக உழுது பண்படுத்தி யிருந்தபடியால் பயிர் நன்றாக வந்தது. ஆரம்பத்தில் பயிரைப் பார்த்த அனுபவசாலிகள், "பத்து ஏக்கரா நிலத்திலும் இருபது வண்டி நெல் கிடைக்கும்" என்று சொன்னார்கள்.

முதலியாரும் அப்படியே நம்பிச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் எதிர்பாராத பல ஏமாற்றங்கள் அவருக்குக் காத்திருந்தன.

இந்த வருஷத்தில் ஐப்பசி கார்த்திகையில் மழையில்லாமல் போய்விட்ட விவரம் எல்லாருக்கும் தெரியுமே? அக்டோபர் மாதக் கடைசி வரையில் சிவசங்கர முதலியார் தினம் தினம் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டேயிருந்தார். கொஞ்சம் கரிய மேகத்தை வானத்தில் எந்த மூலையிலாவது பார்த்து விட்டால் உடனே அவருடைய உள்ளம் குளிரும். "எப்படியும் இன்னும் நாலு நாளில் மழை பெய்யாமலா போகிறது?" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

மழைக்குப் பதிலாக இரவு நேரங்களில் பனி பெய்ய ஆரம்பித்தது. "ஐயையோ! பனி வந்துவிட்டதே? இனி மழை ஏது?" என்று சிலர் துக்கிரி வாக்குச் சொன்


ஞர்கள். அவர்களைப் பார்த்து முதலியார், "அதெல்லாம் இல்லை. 'ஐப்பசிப் பனி அப்போதே மழை' என்று பழமொழி இருக்கிறதே! கட்டாயம் இரண்டு நாளில் மழை கொட்டப் போகிறது!" என்றார். மேற்படி பழமொழியை அவர் ஆயிரம் தடவை உருப் போட்டார். ஆனால் முதலியாருக்குத் தெரிந்திருந்த பழமொழி அந்தப் பொல்லாத மழைக்குத் தெரியவே தெரியாது போலிருக்கிறது! மழை அப்போதேயும் பெய்யவில்லை; இரண்டு நாளிலும் பெய்யவில்லை.



• • •

பத்து நாள்வரை இப்படிப் பழமொழியை நம்பிப் பயிரைக் காயவிட்டபிறகு சிவசங்கர முதலியார், "பயிரைக் காப்பாற்ற இனி வேறு ஏதாவது செய்ய வேண்டியது தான்!" என்று நிர்மானித்தார். முதலியாரின் நிலத்தில் நல்ல கிணறுகள் இரண்டு இருந்தன. உணவு உற்பத்திக்காக இப்போதெல்லாம் விவசாய இலாகா ரொம்ப ரொம்ப உதவி செய்கிறார்கள் அல்லவா? பெட்ரோல் பம்பு (அதாவது பெட்ரோல் சக்தியினால் தண்ணீர் இறைக்கும் பம்பு) மாதம் பத்து ரூபாய் வீதம் வாடகைக்குத் தருகிறார்களே! அதை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று எண்ணினார்.

"பெட்ரோல் பம்பு வைத்துத் தண்ணீர் அடித்தால் செலவு என்ன ஆகும் தெரியுமா? பெட்ரோலின் பாதி விலைக்குக்கூட நெல் விளையாதே!" என்று முதலியாரின் சிநேகிதர்கள் சொன்னார்கள். "பெட்ரோல் செலவைத் தேசத்துக்கு நன்கொடை என்று எண்ணிக் கொள்கிறேன். எப்படியாவது முளைத்து வளர்ந்த நெற் பயிர் காய்ந்து போகாமல் விளைந்தால் போதும்" என்று முதலியார் பதில் சொன்னார்.



• • •

நவம்பர் 4ல் சுபயோக சுப லக்னத்தில், ராகு காலம் தியாஜ்யம் இல்லாத நேரம் பார்த்து, சிவசங்கர முதலியார் பெட்ரோல் பம்புக்கு விண்ணப்பம் எழுதி ஜில்லா விவசாய ஆபீஸில் நேரே கொண்டுபோய்க் கொடுத்தார். ஜில்லா விவசாய ஆபீஸில், "பெட்ரோல் பம்பு கைவசம் இருக்கிறது. ஆனால் கொடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை. மாகாண விவசாய டைரக்டருக்கு விண்ணப்பம் போடுங்கள். அவர் அநுமதி கொடுத்தால் நாங்கள் தருகிறோம்" என்று சொன்னார்கள்.

உடனே முதலியார் மாகாண விவசாய டைரக்டருக்கு விண்ணப்பம் எழுதினார். பத்து நாள் வரையில் கிணற்றிலே கல்லுப் போட்ட மாதிரி இருந்தது.

பயிர் காய்வதைப் பார்த்த முதலியாருக்கு நெஞ்சு உலர்ந்தது. உடனே ரயில் செலவு பண்ணிக்கொண்டு சென்னை நகருக்குச் சென்றார். நேரில் விவசாய டைரக்டர் ஆபீஸுக்குப் போய் விசாரித்தார். டைரக்டர் நகரில் இல்லையென்றும் 'காம்ப்' போயிருக்கிறார் என்றும் தெரிய வந்தது. "ஐயோ! பயிர் காய்கிறதே!" என்று ஆபீஸ் குமாஸ்தாவிடம் முறையிட்டார். குமாஸ்தா, "டைரக்டர் வந்ததும் உத்தரவு அனுப்புகிறோம்" என்றார்.

கடைசியாக, நவம்பர் 18ல் பெட்ரோல் பம்புக்கு உத்தரவு வந்தது.

டைரக்டர் ஆபீஸில் பதினாலு நாள் தாமதம் ஆகியிருக்கும்போது, ஜில்லா விவசாய ஆபீஸில் ஏழு நாளாவது தாமதம் ஆக வேண்டாமா? 25ல் "பெட்ரோல் பம்பு தயார்; எடுத்துப் போகலாம். ஆனால் பெட்ரோலுக்கு மனுப் போட்டீர்களா?" என்று கேட்டார்கள்.

"அது வேறே மனுவா?" என்றார் சிவசங்கர முதலியார்.

"பின்னே என்ன? மனுப் போடாமல் பெட்ரோல் கிடைத்து விடுமா?" என்றார்கள்.

"இங்கேயே மனு எழுதிக் கொடுக்கிறேன். நீங்களே அநுமதி கொடுத்துவிடுவீர்கள் அல்லவா?"

"எங்களுக்குப் பெட்ரோல் கொடுக்கும் அதிகாரம் இல்லை. மாகாண ரேஷனிங் அதிகாரி கொடுக்க வேண்டும். உங்கள் விண்ணப்பத்தில் நாங்கள் சிபார்சு எழுதிக் கொடுக்கலாம்."

"சரி, அதையாவது கொடுங்கள்!" என்றார் முதலியார். ஜில்லா விவசாய அதிகாரியின் சிபார்சுடன் பெட்ரோலுக்கு நவம்பர் 25௳ மனுப் போட்டார். அறுபது காலன் பெட்ரோல் கொடுக்கலாம் என்று ஜில்லா விவசாய அதிகாரி சிபார்சு செய்திருந்தார்.

பிறகு, தினம் தினம் தபாலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். வானத்திலிருந்து மழையை எதிர்பார்த்து ஏமாந்தது போலவே பல நாள் ஏமாந்தார். மறுபடியும் நேரில் பெட்ரோல் ரேஷனிங் ஆபீஸுக்குப் போனார். "எத்தனையோ மனுக்கள் வந்திருக்கின்றன. பார்த்துத்தானே அனுப்ப வேண்டும்? சப்பட்டை கட்டிக்கொண்டு பறக்க முடியுமா?" என்றார்கள்.

கடைசியாக, டிசம்பர் 4௳ பெட்ரோலுக்கு ஆர்டர் கையில் வந்தது. எத்தனை காலனுக்கு ஆர்டர் வந்தது தெரியுமா? இருபது காலனுக்கு!

* * *

ஏதோ, பயிரில் ஒரு பகுதியாவது பிழைக்கட்டும் என்று முதலியார் அவசரமாகப் பெட்ரோல் 'பங்'குக்கு ஓடினார். உத்தரவை நீட்டிப் பணமும் கொடுத்தார். பெட்ரோலைக் கையோடு வாங்கி எடுத்துப் போகலாம் என்று ஆசையோடு நம்பினார்.

"உடனே கொடுக்க முடியாது. விவசாயப் பெட்ரோலுக்கு ஸ்பெஷலாக 'இண்டெண்டு' செய்து வரவழைக்க வேண்டும். இரண்டு நாள் ஆகும்." என்றான் பெட்ரோல் 'பங்க்' முதலாளி. இரண்டு நாள் என்று சொன்னது ஆறு நாள் ஆயிற்று. டிசம்பர் 10௳ பெட்ரோலுடன் நிலத்துக்குப் போனார் முதலியார்.

பார்த்தால், வயிறு பகீர் என்றது. பயிர் பெரும்பாலும் உலர்ந்து போயிருந்தது.

"அடாடா! ஒரு மாதத்துக்கு முன்னால் தண்ணீர் இறைக்க ஆரம்பித்திருந்தால், இருபது வண்டிக்குப் பதில் பத்து வண்டி நெல்லாவது கிடைத்திருக்குமே?" என்று பெருமூச்சு விட்டார்.

பிறகு இயந்திரத்தை முடுக்கித் தண்ணீர் இறைக்க ஆரம்பிக்கும்படி சொன்னார். விவசாய ஆபீஸிலிருந்து பம்பு இயக்

திரத்தை முடுக்கி ஆரம்பித்து விடுவதற்காக ஒரு மெக்கானிக்கும் ஒரு உதவி ஆளும் வந்திருந்தார்கள். இரண்டு பேரும் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். அரை மணி நேரத்துக் கெல்லாம் அவர்கள் இருவருக்கும் சண்டை மூண்டுவிட்டது. "நீ ஏன் பிட்டரை எடுத்து வரவில்லை?" "நீ ஏன் ஸ்க்ரு முடுக்கி கொண்டு வரவில்லை?" என்று ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லிச் சண்டை பிடித்தார்கள்.

"அப்படியானால் பம்பு இன்றைக்கு வேலை செய்யாதா?" என்று முதலியார் பரிதாபமாகக் கேட்டார்.

"வேலை செய்யும், ஸார்! இந்தப் பயல் ஸ்க்ரு முடுக்கி எடுத்து வராமல் வந்துவிட்டான். நான் ஆபீஸுக்குப் போய் இவனிடம் கொடுத்து அனுப்புகிறேன். இனிமேல் இவனே பம்பை சரிப்படுத்தி ஓட்டி விடுவான்!" என்று சொல்லி மெக்கானிக் கம்பி நீட்டினான்.

ஸ்க்ரு முடுக்கி மறுநாள் வந்தது. ஆனாலும் பம்பு வேலை செய்யவில்லை.

"ஏதனால்?" என்று முதலியார் கேட்டார். "இந்தப் பம்பு ரிப்பேர் ஸார்! இது பிரயோஜனமேயில்லை!" என்றான் மெக்கானிக்கின் உதவி ஆள். முதலியார் மறுபடியும் விவசாய ஆபீஸுக்குப் போனார். ரிப்பேர் ஆன பம்புக்குப் பதில் நல்ல பம்பு வருவதற்கு மேலும் ஒரு வாரம் ஆயிற்று.

* * *

கடைசியாக, பம்பு தண்ணீர் இறைக்க ஆரம்பித்தபோது முதலியார் அளவிலாத மகிழ்ச்சி அடைந்தார்!

மூன்று காலன் பெட்ரோல் செலவு செய்து தண்ணீர் இறைத்ததில் அரை ஏக்கரா நிலம் நனைந்தது.

காய்ந்த பயிருக்கு ஒரு தடவை தண்ணீர் இறைத்தால் போதுமா? மாதத்தில் நாலைந்து தடவையாவது இறைக்க வேண்டும்.

ஆகவே இருபது காலனைக் கொண்டு முக்கால் ஏக்கரா பயிரைத்தான் காப்பாற்ற முடியும் என்று ஏற்பட்டது. "அடாடா! அறுபது காலன் பெட்ரோல் இருந்தால் இரண்டு ஏக்கரா நெற்பயிராவது பிழைக்கலாம். பெட்ரோல் பஞ்சமும் இந்தச் சமயம் பார்த்து வந்துவிட்டதே! மதராஸுக்குப்போய் மறுபடியும் ஒரு முயற்சி செய்வோம்!" என்று முதலியார் சென்னைக்குப் பஸ்ஸில் பிரயாணமானார்.

கிண்டி தாண்டி சைதாப்பேட்டை நெருங்கியபோது எதிரே சாரிசாரியாக மோட்டார் வண்டிகள் வருவதைக் கண்டார். "இது என்ன, இவ்வளவு மோட்டார் வண்டிகள்?" என்று அதிசயித்துப் பக்கத்தில் வந்த மனிதரைக் கேட்டார்.

"தெரியாதா? இன்று சனிக்கிழமை. கிண்டியில் குதிரைப் பந்தயம்!" என்று பதில் வந்தது.

முதலியார் சென்னை மௌண்ட் ரோட்டுக்கு வரும் வரையில் எதிர்ப்புறம் வந்த கார்களை எண்ணிக் கொண்டு வந்தார். ஆயிரத்துக்கு மேல் ஆயிற்று! அவர் எண்ணியது ஆயிரம் என்றால், இரண்டாயிரம் மோட்டார் கார்களாவது அன்று மதராஸிலிருந்து கிண்டிக்குப் போக வேண்டும்! இரண்டாயிரம் கார்கள் கிண்டிக்குப்போய்த் திரும்பச் சராசரியில் மொத்தம் 3000 காலன் பெட்ரோல் செலவாகும்.

"பலே சபாஷ்!" என்றார் முதலியார். கிண்டி குதிரைப் பந்தயத்துக்காக அன்று ஒரு நாளைக்கு மட்டும் 3000 காலன் பெட்ரோல் செலவு! மிகவும் அவசியமான காரியம் அல்லவா?

ஆனால் உணவுப் பொருள் உற்பத்தி செய்ய மாதம் இருபது காலனுக்குமேல் கொடுக்க முடியாது! ஏனென்றால், பெட்ரோலுக்குப் பஞ்சம்! சர்க்கார் கட்டுப்பாடு!

எனவே, சிவசங்கர முதலியார் மோட்டார் பஸ்ஸிலிருந்து கீழே இறங்கியபோது "வாழ்க குதிரைப் பந்தயம்!! வீழ்க விவசாயம்!!!" என்று பலமாகக் கோஷித்ததில் வியப்பு ஒன்றுமில்லை அல்லவா?



தேவ தரிசனம்



சிவஞானம்

"ஏ, ஆத்தா! அப்பா எப்ப வருவாரு?"

"காத்தாலே கோழி கூவறதுக்குள்ளே வந்துடுவாரு!"

"எதிரிலே தண்ணியே தெரியல்லியே!"

"எல்லாம் அவனுக்குத் தெரியும். நீ போய்த் தூங்குடி!"

"அப்பா வராட்டிப் போனா......!"

"எல்லாம் வந்துடுவாண்டி! அந்த ஈஸ்வரி இருக்கா, எல்லாத்தையும் பார்த்துக்க!"

"எந்த ஈஸ்வரி?"

"கோயில்லே இருக்கிறவ!"

"எந்தக் கோயில்லே?"

"சீ, சும்மாயிரு!—ஐயமாரு இருக்கிற தெருவிலே இருக்கிற அந்தக் கோயில்லே தான்"

"அவ அங்கிட்டு இருந்து அப்பாவை எப்படிப் பாத்துக்குவா?"

"எல்லாம் அவ நெனச்சாலே போதுமடி! எப்படியாவது பார்த்துக்குவா. நீ போய்த் தூங்கு; அப்பா வந்ததும் எழுப்பறேன்!"

★

சமுத்திரத்திற்கு அடுத்தாற்போல் இருக்கும் கிராமம். அந்தக் கிராமத்தில் கடற்கரையோரத்தில் இருக்கும் செம்படவர்களின் சேரி, அலை உடைந்து கரையைத் தொடுகின்ற மணற் கட்டியிலிருந்து கூப்பிடுகின்ற தூரத்தில் குடிசை. மண்ணால் கட்டி, பனை யோலையால் மூடப்பட்ட அம்மனிதக் கூண்டு வெய்யிலையும் பனியையும் ஒரு வேளை எதிர்த்தாலும், மழைக்கும் காற்றுக்கும் உள்ளத்தைத் திறந்து காட்டிவிடும். பக்கத்தில் வளரும் நூறே சவுக்கு மரக் காடு.

இரவு பதினொரு மணி. 'சோ' என்று கொட்டும் மழை. இருளைச் சவுக்கடிக்கும் மின்னல். ஊளையிட்டுச் சக்கூடும் காற்று; ஓலைக் கூரையைப் பிய்த்துக்கொண்டு வரும் காற்றில் அலைந்தாடும் ஒரு மண்ணெண்ணெய் விளக்கு. அதனருகில் ஒரு பழைய சாக்கைப் போர்த்திக்கொண்டு ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள். அவள் பேத்தி பயத்தினால் நடுங்கிய வண்ணம் பாட்டியை அணைத்துக் கொண்டு, தாழ்ப்பாளில்லாத கதவு மூட்டுக் கொடுத்த கல்லின் எல்லையையும் மீறிக்கொண்டு ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அச்சிறுமியின் மனதில் ஒரு ஆவல்; பயம் தோய்ந்த ஆவல். சூரியன் அஸ்தமிக்கும் பொழுது மீன் பிடிக்கச் சென்ற தனது தந்தை ஆபத்தில்லாமல் திரும்பி வரவேண்டுமே என்று! அவளுக்குத் தன்னைப் பற்றிக்கூடக் கவலையில்லை. சூறைக் காற்றோடு பேயாட்டமாடும் தன் குடிசையைக் கடல் விழுங்கிவிட்டாலும் சரி, தன் தகப்பனை திருப்பி விட்டுவிட வேண்டும். அவ்வளவுதான்!

தாயற்ற, ஆதரிப்பாரற்ற அச் சிறுமியின் மனதில் அந்த வேளையில் வேறு என்னதான் தோன்ற முடியும்?

★

அன்று இரவெல்லாம் அந்தச் சிறுமி தூங்கவே இல்லை. காற்றின் வேகம் அதிகரித்துக் கொண்டே வந்தது. பக்கத்திலுள்ள சவுக்குத் தோப்பு அதை இன்னும் பயங்கரப் படுத்தியது. இடியும் மின்னலும் ஒலியும் ஒளியுமாகச் சேர்ந்து உலகையே அதிரச் செய்தன. எங்கோ தூரத்தில் அழும் நாயின் ஓசை, பிரளய காலத்தின் கடைசி ஆத்மாவின் ஓலம் போல் தொனித்தது.

சிறுமியின் உள்ளத்தில் ஒரே எண்ணம்; பாட்டி சொன்ன ஈஸ்வரியைப் பற்றித் தான். இரவெல்லாம் ஈஸ்வரியை நோக்கித் தன் தந்தையை ஆபத்தில்லாமல் அனுப்பி விட வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

அப் பச்சிளம் மனத்தில் ஒரு அபார நம்பிக்கை; எப்படியும் தன் பிரார்த்தனை ஈஸ்வரியின் காதில் கேட்கும் என்ற ஒரு தீவிர ஆசை!

கதைகளில் ஈஸ்வரியைப் பற்றி அடிக்கடி கேட்டிருக்கிறாள். அந்த ஈஸ்வரியின் உருவம் அவள் மனக்கண் முன் வந்து நின்றது. கையில் சூலம் ஏந்தி, நெற்றியில் நீர் பூசி, தீப் பிழம்பெனத் திலக மிட்ட அழகு பொழியும் அந்தத் தேவியின் திருமுகத்தை அவளால் எப்படி மறக்க முடியும்?

★

பொழுதும் விடிந்தது. ஆனால் கவிகள் வர்ணனை செய்யும் அந்த அழகுடன் விடியவில்லை; வேறு விதமாக விடிந்தது. அன்று பறவைகள் கீதம் பாடவில்லை; மலரும் மலரவில்லை; வண்டும் இசை பாடி மலரைத் தேடிச் செல்லவில்லை. இருண்ட இரவு விடிந்த பகலாக மாறிற்று. அவ்வளவுதான்!

இன்னும் காற்றின் வேகம் குறைந்த பாடில்லை. அதிகரித்துக்கொண்டேவந்தது.

சிறுமி தேவியை நோக்கி வேண்டிய வேண்டுகோள் வெற்றி யடையவில்லை. காற்றின் வேகமும் நாளின் வளர்ச்சியும் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஆனால் தந்தை வந்த பாடில்லை. என்ன பிரயோஜனம்? ஈஸ்வரியின் மனம் கல்லோ?

சிறுமி கனவொன்று கண்டாள்; அன்று இரவுதான்!

ஐயமார் தெருவிலிருக்கும் அந்தத் தேவியின் கோவிலில் தீபங்கள் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன. மணிகள் குலுங்குகின்றன. உலகையே அதிரச் செய்யும் இடியோசையையும் மீறுகின்ற கண்டா மணியின் ஓசை கேட்கிறது. எங்கும் தெய்வீக மணம் வீசுகிறது.

எங்கோ எல்லையில்லாத, பொருளில்லாத, பிறப்பும் அறிவும் இல்லாத ஒரு இடத்திலிருந்து கேட்கும் இன்னொலி. உள்ளமும் உடலும் சிலிர்க்கும் ஒரு சந்தர்ப்பம்.

அவ்வளவுதான்; கண்ணைப் பறிக்கும் ஒரு ஜோதி. தேவியே சிறுமியின் எதிரில் நின்று கொண்டிருந்தாள். சிறுமி ஆச்சரியப்படவில்லை. அவளுக்கு ஆச்சரியமடையவே தெரியாது. தேவி தரிசனமளிப்பது யுக யுகாந்திரங்களிலும் ஒரு சிலருக்குத் தான் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?



சிறிது நேரம் தேவியின் அழகில் மயங்கி யிருந்தாள் சிறுமி. பின்பு தேவியே, "ஏனம்மா, பேசாமல் நிற்கிறாய்?" என்று ஆரம்பித்தாள்.

சிறுமி உள்ளத்தையே உருக்குகின்ற அக் குரலைக் கேட்டதும், தன் பிரமை தெளிந்து தேவியைக் கேட்டாள்.

"அப்பா வரவே யில்லையே! எவ்வளவு நேரமா உன்னைக் கேட்டுக்கிட்டே யிருக்கேன்! ஏன் இன்னும் வரல்லே?"

"பொழுது விடிந்ததும் நீ என் கோவிலுக்கு வா அம்மா! எல்லாவற்றையும் சொல்லுகிறேன்!" என்றுசொல்லி மறைந்தாள்தேவி.

அதற்குப் பிறகு, தேவகானம் கேட்க வில்லை; கண்டாமணிகள்

அசைந்தாட வில்லை; ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்குகின்ற அந்தத் தெய்வீக மணத்தையும் காணோம்!

'ஓ'வென்ற இரையும் காற்றின் இரைச்சல்தான் கேட்டது. இருண்ட இரவில் மின்னலின் ஒளிதான் காணப்பட்டது.

சிறுமி விழித்துக் கொண்டாள்.

★

மறுநாள் காலை.

"என்ன, இன்னும் குருக்கள் வரவேயில்லையே! ஏ, சாத்தாணி! நீ ஓடிப் போய்க் குருக்களை முதலியாரய்யா கூப்பிடுறாருன்னு கூட்டிக்கிட்டு வா!"

"ஒரே காற்று மழையா யிருக்கேன்னு தாமதமா யிருக்கலாமுங்க!"

"காற்றாவது, மழையாவது! தேவி திருப்பணியிலே இதெல்லாம் பார்த்தா நடக்குமா? எல்லாம் வேளையோடு நடந்தாக வேண்டும்!"

"சரி, இதோ போய் அழைச்சுக்கிட்டு வந்துடறேனுங்க!"

"அப்படியே அபிஷேகத்திற்குப் பாலையும் வாங்கிட்டு வந்திடு. இன்றைய அபிஷேகத்தில் தேவி மனதிற்கு ஒரு குறையும் ஏற்படக் கூடாது, தெரியுமா?"

★

இரவிலே தன்னையழைத்த தேவியை நோக்கி அந்தக் காற்றிலும் மழையிலும் சிறுமி கிளம்பி விட்டாள். கிளம்புவதற்கு முன் பாட்டி கேட்டாள்.

"ஏண்டி, இந்த அடைமழையிலே எங்கே கிளம்பிவிட்டே?"

"பாட்டி! ராத்திரி என் கனவிலே நீ சொன்ன அந்த ஈஸ்வரி வந்தா. அவ என்னைத் தன் கோவிலுக்கு வரச் சொன்னு!"

"எந்த ஈஸ்வரி?"

"நீ சொன்னையே, அதே ஈஸ்வரிதான்!"

"என்னடி உளறிக் கொட்டறே! ஈஸ்வரியாவது, கனவிலாவது, வர்ரதாவது!"

"இல்லே, பாட்டி! நிசமாகவே வந்தாள்! நீதான் அவளை வேண்டிக்கிட்டா எதை வேணுமானாலும் செய்வான்னு சொன்னையே!"

"சீ, பைத்தியம்! இருக்கிற வயத்தெரிச்சல் போதாதுன்னு இது வேறேயா? யாராவது சிரிக்கப் போறாங்கடி. குளிரிலே போய்த் தூங்குடி!"

பாட்டியின் தடையையும் மீறிக்கொண்டு கிளம்பி விட்டாள் அந்தச் சிறுமி; தேவியின் கோவிலை நோக்கினாள்!

எல்லோருக்கும் அன்னையாகிய அந்தத் தேவியை வணங்குவதற்குக் கூடச் சமூகத்தில் ஒரு சிலருக்குத்தான் உரிமையுண்டு என்பது அப் பச்சிளம் குழந்தைக்கு எப்படித் தெரியும்?

★

தேவியின் சிலைமீது குடம் குடமாகப் பாலைக் கொட்டி அபிஷேகம் நடக்கிறது. முதலியாரய்யாவுக்கு வெகு திருப்தி. அவருடைய இருளடைந்த மனத்தில், பாலாபிஷேகம் செய்தாவது தேவியின் திருவருளைச் சம்பாதித்து விடலாமென்ற ஒரு நம்பிக்கை.

சிறுமியின் ஆவல் அளவு கடந்துவிட்டது. தன்னுடைய உணர்ச்சிப் பெருக்கில் அவள்



தேவியின் கர்ப்பக் கிரகத்தையே அடைந்து விட்டாள்.

கிழிசல் துணியும், பரட்டைத் தலையும் கொண்ட சேரி சிறுவனுக்கா தேவியின் கர்ப்பக் கிரகத்தில் இடம்? சட்! இன்னும் சமூகம் அவ்வளவு கேவல நிலைக்கு வந்து விடவில்லை!

முதலியாரய்யா கண்களில் பட்டு விட்டாள் அந்தச் சிறுமி.

"ஏ, குட்டி! நீ எங்கே இருப்பது?"

"செம்படவச் சேரியிலே!"

"என்டி, பற சாதியே! கோவிலுக்குள்ளே வர உனக்கு எவ்வளவு தைரியம்? அடே, சாத்தான்! இவளை வெளியிலே இழுத்துப் போய்த் தள்ளிட்டு, தலையே முழுகிட்டு உள்ளே வாடா!"

"நான் வெளியே போகமாட்டேன்! என்னைத் தேவிதான் உள்ளே வரச் சொன்னா!"

"எந்தத் தேவிடி, அவள்?"

"எல்லாம் இந்த ஈஸ்வரிதான்!"

"உள்ளே வந்தது மில்லாமே பொய் வேறே சொல்லறியா? என்ன, அண்டப் புளுகு! உன்னை நன்னு உதைச்சி வெளியே தொரத்திப் புடுவேன்! மரியாதையா ஓடிடு!"

"ஐயோ! மெய்யாத்தான்! ராத்திரி என்னை ஈஸ்வரி தன் கோவிலுக்கு வரச் சொன்னா! இல்லாட்டி நான் ஏன் வரப் போறேன்?"

"என்ன திமிரு, பறக் கழுதைக்கு! கலியுகமில்லே — தேவியைக் கண்டாளாம் தேவியை! எங்களுக்கெல்லாம் தெரியாத தேவி அவ எவடி அவள்! என்டா, நிக்கிறே? அடே, சாத்தானி இவளை இழுத்துக்கிட்டு போய் வெளியிலே தள்ளு! பூசை ஆகணும்!"

★

சாத்தானி தள்ளிய வேகத்தில் மழையில் கால் வழுக்கி அந்தச் சிறுமி கீழே விழுந்தாள். இரண்டு நாளாகக் கண் விழிப்பு; சரியான ஆகாரம் இல்லை. தலையில் அடி விழுந்ததும் அவள் பிரக்ஞையை இழந்து விட்டாள்.

அடிக்கின்ற காற்றையும் கொட்டுகின்ற மழையையும் தாங்கிக்கொண்டு அவள் உடல் சுருண்டு கிடந்தது.

இருட்டியும் பேத்தியைக் காணாத கிழவி, எங்கெல்லாமோ தேடிவிட்டு, "ஒரு வேளை கனவு கினவுன்னு உளறிக்கிட்டிருக்காளே கோயிலைப் பார்க்கத்தான் போயிட்டாளோ!" என்று யாருக்கும் தெரியாமல் கோவிலை யடைந்தாள்.

தன் பேத்தியின் சுருண்டு கிடக்கும் உடலைக் கண்டதும் கிழவியின் உள்ளம் நெகிழ்ந்துவிட்டது. தன் உள்ளத்தின் ஆத்திரத்தை உதிரமாக வெளியில் கொட்டினாலும் தீராது போலிருந்தது.

அடுத்த நிமிஷம் அவள் தளர்ந்த உடலில் எங்கிருந்தோ ஒரு புது பலம் தோன்றியது. தன் பேத்தியின் உடலைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு குடிசையை அடைந்து விட்டாள்.

அந்தச் சிறுமிக்கு ஒரே ஜுரம். பால் வடியும் அந்தப் பச்சிளம் முகம் ஜுரத்தின் வேகத்தில் கன்னிப் போய்விட்டது. பாலையும் தேனையும் கொட்டி அபிஷேகம் செய்கின்ற அந்தப் புண்ணியாத்மாக்கள் குழந்தை மழையில் கிடப்பதைப் பார்க்காமலா சென்றிருப்பார்கள்! தொட்டால் தீட்டு வந்து விடுமே! பிறகு யார் குளிப்பது?

சே! உலகத்தில் என்ன புண்ணியம் வேண்டி யிருக்கிறது!—கிழவி அந்த ஊரையே சபித்தாள்; சமூகத்தையே—ஏன் உலகத்தையே சபித்தாள்!

★

புயல் ஓய்ந்தது. கடலின் அலைகளும் களைத்து ஓய்ந்தன; சண்ட மாருதமும் ஓய்ந்தது; எங்கும் சாந்தம் நிலவிற்று. ஆகாயத்தில் பஞ்சு பஞ்சாகச் சிதறுண்டு கிடந்தன மேகங்கள். காலைச் சூரியனின் ஒளியில் வீட்டுக் கூரைகளெல்லாம் முத்தார்ந்தன.

இரவெல்லாம் ஜுர வேகத்தில் பிதற்றும் சிறுமியின் அருகில் கிழவி உட்கார்ந்திருந்தாள். விடிவதற்குச் சிறிது நாழிகைக்கு முன்புதான் கண்ணயர்ந்து விட்டாள்.

சிறுமியின் தகப்பன் காலைச் சூரியனோடு தன் குடிசைக்குத் திரும்பி விட்டான். சிறுமி சொன்னதைத் தேவி செய்து விட்டாள். ஆனால்......என்ன பிரயோஜனம்? சிறுமியின் சில்லிட்ட உடலைத்தான் அவள் அப்பனால் காண முடிந்தது. தேவி அவளைத் தன்னிடம் அழைத்துக்கொண்டு விட்டாள்!



பம்பாய்ப் பிரதம மந்திரி ஸ்ரீ பி. ஜி. கேர், உள்நாட்டு மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய், ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி முதலியவர்கள் ஹிந்தி மீரா படம் பார்க்கிறார்கள்.



பம்பாயிலிருந்து மீரா டில்லிக்குச் சென்றாள். அங்கு இந்தியாவின் பிரதம மந்திரியும், அவருடைய சகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியும் மீராவுக்கு நல்வரவு கூறுகிறார்கள்.



இதுவரையில் கவர்னர்—ஜெனரலின் மாளிகைக்குள்ளேயன்றி வெளி தியேட்டருக்குச் சென்று அந்த கவர்னர் ஜெனரலும் படம் பார்த்தது கிடையாது. அந்த சம்பிரதாயத்தைத் தகர்த்தெறிந்து விட்டு லார்ட் மவுண்ட் பேட்டனும் லேடி மவுண்ட் பேட்டனும் புது டில்லி பளாஸா தியேட்டரில் மீரா படம் பார்க்கிறார்கள்.



படம் பார்த்த லேடி மவுண்ட் பேட்டன் பெரிய பெரிய பூமாலைகளை அணிந்துகொண்டு, மீராவாக நடித்த ஸ்ரீமதி எம். எஸ். ஸுக்கும் குழந்தை ராதாவுக்கும் புகழ் மாலைகளைச் சூட்டுகிறார்.

★ ○ ★

எல்லாருமாக நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளுகிறார்கள்.





ராஜாஜியைக் கவர்னராகப் பெற்றுள்ள கல்கத்தா நகருக்கு மற்றொரு மாகாண கவர்னரான ஸ்ரீமதி சரோஜினி தேவியும், மேவார் மகாராணி மீராதேவியும் சேர்ந்தாற்போல் விஜயம் செய்திருக்கள்.



இரண்டு கவர்னர்கள் சேர்ந்தாற் போல் ஸினிமாப் பார்க்க வந்தால், அவர்களைப் படம் பிடிக்காமல் படத்தைப் பார்க்க விட்டு விடுவார்களா?

மலர்ந்த புஷ்பங்களுடனே மலர்ந்த முகங்களும் போட்டி போடுகின்றன.






*

குழந்தை மீராவை இந்தியப் பிரதம மந்திரி அன்புடன் ஆசீர்வதிக்கிறார்.

*



கவர்னர் ஜெனரலின் மாளிகையைச் சேர்ந்த தோட்டத்தில் என்றும் காணாத காட்சி.



நவபாரதி நூல்கள்

திருநெல்வேலி நவபாரதி பிரசுராலயத்தார் சில சிறந்த தமிழ் நூல்களைச் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றுள் தலைமை தாங்குவது ஆசிரியர் பி. ஸ்ரீ. அவர்களின் கம்பசித்திரம் — சுந்தர காண்டம். சென்ற இருபத்தைந்தாண்டு காலமாகத் தமிழ் நாட்டில் கம்பரின் மகிமையைக் குன்றிடை விளக்குப்போல் ஒளி வீசச் செய்து வரும் தமிழ்க் கவிதா ரஸிகர்களில் ஆசிரியர் பி. ஸ்ரீ. ஒருவர். பற்பல தமிழ்ப் பத்திரிகைகளில் பலப்பல கட்டுரைகள் கம்ப ராமாயணத்தின் கவிநயங்களைப் பற்றி எழுதி யிருக்கிறார். கம்பருடைய சுந்தர காண்டத்தைப் பற்றிய விமரிசனக் கட்டுரைகள் ஆங்காங்கே எடுத்துக் காட்டான கவிதைகளுடனும் விளக்கங்களுடனும் இந்நூலில் வெளியாகி யிருக்கின்றன. பி. ஸ்ரீ. யின் வசன நடை கம்பர் கவி இன்பத்துடன் கலந்து சிறந்து விளங்குகிறது. தமிழ் நாட்டில் உள்ள சிறந்த கவிதா ரஸிகர்களில் ஒருவரான திரு ந. கந்தசாமிப் பிள்ளை (கரந்தைத் தமிழ்ச் சங்கம்) இந்நூலுக்கு விரிவான முன்னுரை தந்திருக்கிறார். புத்தகத்தின் அச்சும், பைண்டும் உயர்தரம். பக்கம் 440. விலை ரூ. 7–8–0.

சென்ற பத்தாண்டு காலமாகச் சென்னைச் சர்வகலாசாலையில் தமிழ் ஆராய்ச்சித் தலைவர் (ரீடர்) பதவி வகித்தவரும், அதற்கு முன் நெடுங்காலம் தமிழ் அகராதி (லெக்ஸிகன்) தொகுக்கும் தொண்டு செய்தவருமான மற்றொரு கம்பர் கவி ரஸிகர்,— ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் பல கட்டுரைகள் "தமிழின் மறுமலர்ச்சி" என்ற பெயர் தாங்கி வெளி வந்திருக்கிறது. தமிழ் மறுமலர்ச்சியிலே பூத்த தலை சிறந்த மலரான கவியரசர் பாரதியார் தட்டைப் படத்தில் கையில் செங்கோலுடன் சிங்காதனத்தில் கொலு வீற்றிருக்கிறார். வளரும் தமிழைப் பற்றிய பல அரிய விஷயங்களை இந்நூலின் மூலம் தெரிந்து கொள்ளலாம். பக்கம் 178. விலை ரூ. 2—8—0

ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் மற்றொரு கட்டுரைத் தொகுதி "இலக்கிய சிந்தனைகள்". இதில் பெரும் பாலும் பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றிய ஸ்ரீ பிள்ளை அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. பக்கம் 198. விலை ரூ. 3—0—0.

மகாகவி பாரதியாரைப் பரம குருவாகக் கொண்டு அவருக்குப் பல தொண்டுகள் புரிந்துவந்த புதுச்சேரி ஸ்ரீ ரா. கனகலிங்கம் அவர்களின் "என் குருநாதர்" என்னும் புத்தகம் இதயத்திலிருந்து பொங்கும் உணர்ச்சி பெருக்குடன் எழுதப்பட்டிருக்கிறது. பாரதியாரின் புதுச்சேரி வாழ்க்கையைப் பற்றிய பல ரஸமான விவரங்கள் அடங்கிய நூல். பக்கம் 122. விலை ரூ. 2—0—0.

புதுயுக நூல்கள்

சுவாமி சுத்தானந்த பாரதியார் தமிழ்த் தாய்க்குச் செய்து வரும் தொண்டுகளைப் பற்றி அறியாத தமிழர்கள் இருக்க மாட்டார்கள். இதுவரை சுவாமிகளின் நூல்கள் ஏறக்குறைய இருநூறு வெளியாகி யிருக்கின்றன. அவை பெரும்பாலும் "அன்பு நிலைய"த்தின் வெளியீடுகள்.

இப்போது சுவாமிகள் தங்கித் தவம் செய்யும் புதுச்சேரியிலேயே "புது யுக நிலையம்" என்ற பிரசுராலயம் சுவாமிகளின நூல்களை வெளியிடுவதற்காகவே அமைக்கப்பட்டிருக்கிறது. "கவிக் கனவுகள்" "புது யுகப் பாட்டு" என்னும் நூல்கள் இப்போது வெளிவந்திருக்கின்றன.

சுவாமிகளின் பாடல்கள் இனிய எளிய தமிழ்ச் சொற்களில் அமைந்தவை. அவற்றைப் பாடினாலும் படித்தாலும் நா இனிக்கும்; கேட்டால் செவி இனிக்கும்.

கருத்துக்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்துக்கும் சமூகத்தின் மேன்மைக்கும் உகந்தவை. கவியரசர் பாரதியாரின் சாயை பல பாடல்களில் பரிமளிக்கின்றன. சந்தங்களிலும் அவ்வாறே.

"காற்றுடன் கதிரும்—ஆழக்
கடலும் ஆறு மலையும்
போற்றுகின்ற உலகே—பரம்
பொருளின் ஆடரங்கம்"

"கொஞ்சும் பசுங்கிளிபோல்-மழலை
கொட்டும் குழந்தையைப்போல்
வஞ்சமில்லா திருந்தால்—உலகம்
வானகமாகுமம்மா!"

என்பன போன்ற பாடல்களைப் படிக்கும் போது, அட்சர லட்சம் கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. ஆனால் லட்சம் கொடுக்க வேண்டிய அவசியம் நமக்குக் கிடையாது. புத்தகங்களின் விலை தனித் தனி ரூ 1—8—0 தான்.

பாரி நிலைய வெளியீடு

தற்காலத் தமிழாசிரியர் குழாத்தில் மறுமலர்ச்சிக் கூட்டத்தில் சேர்க்கப்பட வேண்டியவர் ஆசிரியர் மு. வரதராசனார். பழந் தமிழ்நாட்டுத் தினைப்புனம் ஒன்றில் பழந்தமிழ்க் கவி கபிலர் ஓர் அழகிய இரக்கம் தரும் காட்சியைக் கண்டு பாடல் ஒன்று புனைந்தார். அதை அடிப்படைக் கருத்தாகக்கொண்டு தற்கால சமூக வாழ்க்கைச் சித்திரம் ஒன்றைச் சித்திரித்திருக்கிறார். நல்ல தமிழ் நடை; சுவை நிறைந்த கதை. புத்தகத்துக்குக் "கள்ளோ? காவியமோ?" என்னும் பொருள் பொதிந்த பெயர். பக்கம் 246. விலை ரூ. 3—8—0.

வெண்மதி


பூரண சந்திரன் வானத்தில் தோன்றி வெண்ணிலவை அள்ளி வீசினால் அதை வேண்டாமென்று யார் சொல்லுவார்கள்? அழகிய பெயருடன் வெளியாகி வரும் இந்த மாதப் பத்திரிகை பெண்மணிகளுக்காக என்று ஒரு பெண்மணியினால் வெளியிடப் பட்டாலும் ஆண் மக்கள் படிக்கக் கூடாது என்பதில்லை. ஆசிரியை, எம். ஏ., பி எச்டி. பட்டங்கள் பெற்ற டாக்டர் D. S. ராஜலக்ஷ்மி அவர்கள். டிசம்பர் மாதத்து ஐந்தாவது இதழ் ராஜாஜியின் உருவப்படத்தை அட்டையில் தாங்கி வெளி வந்திருக்கிறது. தலையங்கமும் அவரைப் பற்றியதுதான். மற்றப்படி ரஸமான கதைகளும், சுவையுள்ள துணுக்குகளும் பத்திரிகையில் நிரம்பியிருக்கின்றன. "வெண்மதி" தனிப் பிரதியின் விலை அணா 6.

கதை மலர்

திங்களுக்கு ஒன்றாக மலரும் இந்தச் சிறு கதைத் தொகுதியைத் தமிழ்நாட்டின் சிறந்த சிறுகதை ஆசிரியர்களில் ஒருவரான 'குலி' ஆரம்பித்திருக்கிறார். முதற் கதையான "லைலா" இரண்டு மகா கவிகளின் முத்திரை வாய்ந்தது. கதை எழுதியவர் மகா கவி டாகூர்; மொழி பெயர்த்தவர் கவி பாரதியார். மற்றும் "குலி"யின் கதைகளும், அண்டன் செகாவ், மாப்பஸான் கதைகளின் மொழி பெயர்ப்பும் அடங்கியிருக்கின்றன. பக்கம் 112. வருஷச் சந்தா ரூ. 6-0-0. தனிப் பிரதி அணா எட்டு. 94, தாண்டமனைக்காரத் தெரு, சென்னை.

THE FIRST BOOK OF KURAL

வான் புகழ் கொண்ட வள்ளுவர் குறளுக்கு மதிப்புரை எழுதக் கூடியவர் யார் உண்டு? திருக்குறள் அறத்துப் பாலிலிருந்து சில அருமையான குறள்களைப் பொறுக்கி எடுத்து ஆங்கில மொழி பெயர்ப்புடன் இந்நூலில் வெளியிடப் பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார் தெரியுமா? ராஜாஜி அவர்கள்தான். வள்ளுவரின் பெருமை இந்த மொழி பெயர்ப்பின் மூலம் உலகமெல்லாம் பரவக் கூடும். தமிழ் நாட்டில் ஆங்கிலம் படித்த கூட்டத்திலேயும் ஓரளவு பரவலாம். பிரசுரம்: ராக் ஹவுஸ் அண்டு சன்ஸ், சென்னை; விலை ரூ. 1-4-0.



"சிரஞ்சீவி சின்னத்தம்பி அவுகளுக்கு,

தம்பி நெனெச்ச காரியமெல்லாம் தவறாமே கைகூட வேணும். தம்பியோட பேரும், பெருமையும், நெலமும், பொளமும் பத்தி எல்லாரும் சொல்லிக்கிடறது, என் காதுலேயும் வுளுந்து, மனசு நீர்மோரு மாதிரி குளுந்து போச்சு. தம்பியைப் பார்க்க வேணும்னு ரொம்ப ஆசை. எதுக்காவ என்கிறதை, இந்தக் கடுதாசியிலேயே எளுதக் கூச்சமாயிருக்குது. ரெண்டு மூணு கடுதாசு எளுதிப் பளக்கப்பட்டாத்தான் துணிச்சலு ஏற்பட்டுப் போவும்.

சோப்பனாங்கிபுரம் சொமைதாங்கி சோலையப்பப் புள்ளேன்னு தம்பி எப்போதுக்கும் கேள்விப்பட்டிருக்கலாம். அவுக பேரப் புள்ளேதான் நானு!

பதிலுக்காகக்
காத்துக்கிட்டுக் கெடக்கிறெ.
சோப்பனாங்கிபுரம் பெரியந்தம்பி."

கடிதத்தைக் கண்டதும் சின்னத் தம்பிக்குத் தன்னையுமறியாமல் ஒரு பெருமை, தேள் விஷம்போல் உச்சத் தலைக்கு ஏறிற்று. அன்றையச் சாயங்காலமே சின்னத்தம்பியின் பதில் கடிதம், பெரியத் தம்பி என்று சொல்லப்பட்டவரின் இடத்தை நோக்கிப் பிரயாணமாயிற்று.

2

"தேவரீர் சோப்பனாங்கிபுரம் பெரியந்தம்பி அவுகளுக்கு,

என்னேயும் ஒரு ஆளா மதிச்சு, உச்சாணிக் கொப்புலே தூக்கி வச்சுத் தவாறு எளுதிப்புட்டீங்க. நானு நாலஞ்சு ஜன்மமாக் கொடுத்து வச்சதுதான், இந்தச் ஜன்மத்துலே இந்த அதிர்ஷ்டம் எங்க ஊட்டைத் தேடி வந்திருக்குது. ஒங்கக் கடுதாசியைக் கண்டு என் மனம் பானகம் மாதிரி குளுந்து போச்சு. எந்த வெசயமானாலும் நீங்க தாங்காமே எளுதுங்க. நீங்க வேறெ, காலமாய்ட்ட எங்கய்யா வேறென்னு நானு நெனெக்கலே!

ஒரு சந்தேகம். சொமைதாங்கி சோலையப்பப் புள்ளேன்னு என் பேரு வந்துச்சுன்னு அக்காவுக்கு வெளங்கலே.

தங்க தயவுலே,
சுக்குப்பட்டி சின்னத்தம்பி."

சின்னத்தம்பியின் பதிலைக் கண்டதும், "வீசி எறிஞ்ச கல்லு வீணாப் போவலே!" என்று சொல்லிக் கொண்டே, பெரியத் தம்பி என்று சொல்லப்பட்ட அந்த ஆசாமி, உடனே ஒரு பதிலை எழுதி, தானே நேரில் போய்த் தபால் பெட்டியில் போட்டுவிட்டு, 'ரேஷன்' கடையில் துணி வாங்கிக் கொண்டு திரும்பும் வெற்றி வீரனைப்போல் வீடு திரும்பினான்.

3

"சிரஞ்சீவி சின்னத்தம்பி அவுகளுக்கு,

கடுதாசு கெடைச்ச வொடனேயே பதிலு எளுதணும்னு கை வொறுங்க துடிச்சுப் போச்சு. சந்தோசம் தாங்கப்படலே. தைப் பொங்கலு மாதிரி மனசு அப்படியே பொங்கிப் போச்சு!

வெசயம் வேறொண்ணு மில்லே. தம்பியோட கொணமும், கொலமும், பணமும், நெலமும் எங்களை யெல்லாம் அப்படியே தூக்கி வாரிப் போட்டுடுச்சு. தம்பியோட சொந்தகம் நெனெக்க வேணும்னு எனக்கு ஆசை. தம்பியோட ஒறவு வேணும்னு ஊட்டிலே ஆசை. அதனாலே நம்ம குட்டி வள்ளியைத் தம்பிக்குக் கண்ணாலம் செஞ்சு வக்கப்படணும்னு......

எங்க பாட்டன் மாரியப்பன் கோயிலு வாசல்லே நாலு சொமை தாங்கி கட்டி வச்சாரு. அதான் அவருக்கு அப்படிப் பேரு!

கடுதாசுலே குத்தங்கொறை யிருந்தா மன்னிக்கப் போடணும்.

சோப்பனாங்கிபுரம் பெரியந்தம்பி."

"கண்ணாலம் பேசவா அடி போடறாரு! ஆளு பெரிய கைதான் போலேருக்கு. என்னமோ, நமக்கு இப்ப நல்ல காலம் தான்!" என்று சொல்லிக் கொண்டே, மாப்பிள்ளையாகப் போவதாக மனக் கோட்டை கட்ட ஆரம்பித்த சின்னத் தம்பி, மாமனாராக மனுப் போடும் 'பெரியத் தம்பி' என்று சொல்லப் பட்டவருக்குப் பதில் எழுதினான்.

"தேவரீர் சோப்பனாங்கிபுரம் பெரியத்தம்பி மாமா அவுக சமூகத்துக்கு.

நானு 'மாமா'ன்னு ஒறவை ஒட்ட வச்சு எளுதறதுலேருந்தே என் மனசை நீங்க தெரிஞ்சுக்கிடலாம். ஏதோ நம்ம ஊட்டு ராசிதான், உங்கஊட்டுச் சம்பந்தம் நமக்குக் கெடைக்குது. இப்படித் தேடி வந்து கண்ணாலம் பேசறதெல்லாம் அக்கா சொல்ற மாதிரி 'வுட்ட கொறை, தொட்ட கொறை'தான்.

இது வெசயமா மேக்கொண்டு பேச்சுப் பேச எனக்கு ரொம்ப சம்மதம்.

வீட்லே எல்லாரும் நல்லாருக்காங்களா?

கக்குப்பட்டி சின்னத்தம்பி."

கடிதத்தைக் கண்டதும் பெரியத் தம்பிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "நெல்லாவது வெளையணும்னு வெளைச்சேன்; அரிசியாவே வெளைஞ்சுடுச்சு!" என்று சொல்லிக் கொண்டே, உள்ளூர்ப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயரிடம் எழுதி வாங்கி, தந்தி ஒன்றை அனுப்பினான் சின்னத் தம்பிக்கு!

5

"'கண்ணாலம் பேச பொதன் கௌமை நல்ல நாளு......வரலாமா'ன்னு தந்திலே எளுதி இருக்குதாம்" என்று சின்னத்தம்பி, 'எட் கிளார்க்'கய்யா மொழிபெயர்த்துச் சொன்னபடி தன் தமக்கையிடம் ஒப்புவித்தான்.

"உம் வரச் சொல்லிப்புடு. 'நல்ல காரியங்களை யெல்லாம் கடிய முடிச்சுப் போடணும்'னு ஆயா சொல்லுவாங்க" என்று அக்கா கூறினாள்.

அதே 'எட்கிளார்க்'கய்யாவிடம் தந்தியை எழுதி வாங்கி, பெரியத் தம்பிக்கு அனுப்ப ஓடினான் சின்னத் தம்பி.

6

"'எந்த நாளானாலும் சரி......ஒடனே வந்து சேருங்க. ஊட்லே எல்லாரும் நல்லாருக்காங்களா?—சின்னத் தம்பி'ன்னு தந்திலே எளுதியிருக்குது" என்று உபாத்தியாயர் மொழி பெயர்த்துச் சொன்னதைக் கேட்டான் 'பெரியத் தம்பி.'

"சரிதான், இதென்ன தந்தியா, கடுதாசா? தந்திலே இப்புட்டு எளுதினா அந்தக் கம்பிக்கதான் தாங்குமா?...... பாவம்... தாலி களுத்துலே கட்டலே. அதுக்குள்ளாற 'ஊட்லே எல்லாரும் நல்லாருக்காங்களா?'...அடே யப்பா!... என்ன கரிசனமுங்கறேன்! அந்த மூணு வார்த்தேக்கிக் கொசுறு துட்டு வேறெ! இப்படியெல்லாம் காசை வாரி எறைச்சுப்பிட்டு......" என்று முணுமுணுத்தான் பெரியத்தம்பி.

7

சின்னத்தம்பி வீட்டில் யாரோ கதவைத் தட்டினார்கள்.

"தம்பி, கதவை யாரோ தட்றாங்க! 'கதவைத் தட்னா கடியப் போய்த் தொறக்கணும்'னு ஆயா சொல்லுவாங்க!" என்றாள் தமக்கை.

சின்னத்தம்பி போய்க் கதவைத் திறந்தான்.

தங்கவேலு வாசற்படியில் நின்றான்.

"ஏ, தங்கவேலு! வாங்கறேன் உள்ளே! வாசப்படியிலேயே கடன்காரன் மாதிரி நின்னுகிட்டு......" என்றான் சின்னத் தம்பி.

"கடன்காரனைப் பத்தித்தான் ஒங்கிட்ட சொல்லிப்புட்டுப் போவலாம்னு வந்தேன். ஆனாலும் நீ ரொம்ப அடாவடிதானப்பா!" என்றான் தங்கவேலு.

சின்னத்தம்பி மாப்பிள்ளை முறுக்குடன் தங்கவேலுவை ஒரு பார்வை பார்த்தான். "ஏ, தங்கவேலு! இதோ பாரு. இன்னும்



ஒரு நாலஞ்சு நாளு, நாளு கோவம் கீவம் இல்லாமே மூஞ்சியைக் கொஞ்சம் தெளிவாவே வச்சுக்கிட்டிருக்கணும்னு பார்க்கறேன். நீ இப்படியெல்லாம்......" என்று சின்னத் தம்பி 'படபட' வென்று பேசிக் கொண்டு போவதை இடை மறித்தான் தங்கவேலு.

"இதோ பாரு. நீ நம்ம மேலே சீறி வினறதுலே பெரயோசனமில்லே. காதாலே கேட்டேன்; நம்ம கூட்டாளி யாச்சே, சொல்லிப்புட்டுப் போவலாம்னு வந்தேன். எனக்கென்ன வந்துச்சு? நாளிக்கு சம்மனு வந்தா பதிலு எழுதத் தெரியாமே முழிக்கப் போவறது நீயா, நானு?" என்று உரக்கப் பேசிவிட்டு ஒரு அடி எடுத்து வைத்தான் தங்கவேலு.

"ஏ, தங்கவேலு! இரப்பா, இரு! கதைலே வர்றுங்களே, சபிச்சுப் போடற ரிஷிங்க, அந்தக் கணக்கால்ல என்னுன் கொன்னும் வெடிச்சுக்கிட்டுப் போறே! சங்கதியைச் சொல்லேன்!" என்று சின்னத் தம்பி தணிவாகக் கேட்டான்.

"நான் என் சொல்லணும்? நாளைக்கு அந்தக் காளியாப் புள்ளே வந்து சத்தம் போடணும். ஊரு முழுதும் தெருவிலே கூடிப் போவணும். சந்தி சிரிக்கணும்!" என்று தங்கவேலு இரைந்தான்.

"காளியாப் புள்ளேயா? அந்தப் பய மறுபடியும் வாலாட்டத் துவங்கிட்டானா! ஊஹூம்" என்று குதித்தான் சின்னத் தம்பி.

"வூட்டுக்குள்ளாற இருந்துக்கிட்டு நீ கையைக் காலே ஆட்டறே! வெளியே போனால்ல தெரியும், ஒன் பாடு! கூடப் பொறந்த பொறப்பு மாதிரி நெனைக்கிற எங்கிட்டத்தான் ஒன் வீறாப்பெல்லாம்! நமக்கேன் அந்தப் பாடு, தம்பி! நீயா தெரிஞ்சுக்கிடுவே, நான் ஏஞ் சொல்லணும்?" என்று அதே அரைகுறை பாணியில் சொல்லி நிறுத்தினான் தங்கவேலு.

சின்னத் தம்பிக்கோ, ஆவலும் ஆத்திரமும் அவன் விழிகளையும், மனதைடம் வெளியே இழுத்துக் கொண்டு வந்து விடும் போல் ஆகிவிட்டது. "தங்கவேலு, காளியாப்புள்ளே சங்கதின்னு, 'டக்'குனு பாக்கு கடிக்கற மாதிரி சொல்லிப்புடு. பொவையிலே மெல்லற மாதிரி இழுத்துக் கிட்டு நிக்காதே" என்று தன் கோபத்தை மறைக்க வேடிக்கையாகப் பேசுவதுபோல் பேசினான் சின்னத் தம்பி.



"அட, நான் என் அந்தே சொல்லணும்?" என்றான் தங்கவேலு.

அதற்குள் இடைகழிக்கு வந்து விட்ட சின்னத் தம்பியின் தமக்கை, தம்பிக்குப் பரிந்து கொண்டு, "பரவாயில்லே, சொல்லு தங்கவேலு! என்னமோ சின்னத் தம்பி அறியாத புள்ளே; தவறிப் போய் ஏதோ சொல்லிப்புட்டான். 'செறுகப் புள்ளேங்க குத்தமா நடந்துக்கிட்டாலும் வயசுப் புள்ளேங்க அதைக் குத்தமா எடுத்துக்கப்படாது'ன்னு ஆயா சொல்லுவாங்க!" என்று ஆயாளை மேற்கோள் காட்டி வாதித்தாள்.

"ஆயா சொன்னது சின்னத் தம்பிக்கு எப்படித் தெரியப் போவுது?" என்று தங்கவேலு முணுமுணுத்தான்.

"அது சரி, நீ வெசயத்தைச் சொல்லேன்! ஆயா.........'' என்று அக்கான் முடிப்பதற்குள், 'ஆயா' என்ற அணுகுண்டுக்குத் தப்பும் எண்ணத்துடன் தங்கவேலு விஷயத்தைச் சொல்லி விட்டான்.

"வேறே ஒண்ணுமில்லே. இந்தக் காளியாப் புள்ளே பய ஒங்க வளவுக்கு நடையா நடந்து, காலு பேந்துப் போச்சாம்; ஆனா காசு பேரலியாம். சின்னத்தம்பி அவன் கண்ணுலேயே படமாட்டேங்குதாம். 'வூட்டுக்குப் போனா கதவு அடைச்சுக் கெடக்குது. கதவைத் தட்டினா உள்ளே இருக்கிறவங்களுக்கு வாய் அடைச்சுக் கெடக்குது'ன்னு சந்தே பூராவும் சொல்லிக்கிட்டுத் திரியுறான். சம்மனு அனுப்பப் போறானாம்!''

"அட எது, பச்சைப் புள்ளேங்களுக்குப் பூச்சி காட்றாப்போலேல்ல காட்டிப் போடறான்!'' என்று சின்னத்தம்பி சீறினான்.

"அவங் கடனைக் குடுத்து ஒளிச்சுப் போடறதுதானே?'' என்று தங்கவேலு கேட்டான்.

"குடுத்துப் போடலாம்; பெரமாதமில்லே. அவன் பேசிய பேச்சை நெனைக்கிறப்பத்தான் எனக்கு ஆத்திரமா வருது. மருவாதைக் கொறைவா பேசறான். கேக்கறபடி சுயமா கேட்டா கொடுக்காமே இருப்பாங்களா?'' என்று சின்னத்தம்பி தன் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் பேசினான்.

"ஏலே, சின்னத்தம்பி! 'குதிரே கீழே தள்ளினது மல்லாமே குழியும் பறிச்சுச்சாம்......'' என்று, உள்ளூர் காங்கிரஸ்காரர் ஒருவருடைய பிரசங்கத்தில் கேட்ட பழமொழியை முன்னால் தூக்கிப் போட்டு, தங்கவேலு பேச ஆரம்பிப்பதற்குள் தமக்கையின் மொழிகள் இடைமறித்தன.

"நம்மை என்னமோ இன்னுக்கிறேன்னு நெனைச்சுக் காளிப்புள்ளே துள்ளிக்கிட்டுக் கெடக்குது! தம்பி நாளைக்கிச் சோப்பனாக்கிபுரம் சொமைதாங்கிப் புள்ளேமாரு வூட்டு மருமவப்புள்ளே ஆயிட்டா, அப்பல்ல தெரியப் போவுது! காளிப்புள்ளேயே காலிப்புள்ளேயா அடிச்சுப்புடாதா, தம்பி! ஆயா சொல்ற மாதிரி......''

'ஆயா என்ன சொல்லுவது!' என்று சின்னத்தம்பி நினைத்தானோ என்னமோ, "ஆயா கெடக்குது, அக்கா! நானே சொல்லிப்போடறேன். நாளைக்கி நாலு பெரிய மனுசன் வூட்டு மருமவப் புள்ளே ஆயிட்டா, இந்தக் காளியாப்புள்ளே இப்படி தெருவெல்லாம் நம்மைத் தூத்திக்கிட்டுக் கெடப்பானா, இல்லே குடுத்த கடனைத் திருப்பிக் கேக்கத்தான் துணிஞ்சு வருவானா?'' என்று சின்னத் தம்பி சொல்லும்போது, அவன் மனது அவனை, குளத் தங்கரையில் இருக்கும் ஐயனார் சிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தது.

"அது யாரப்பா, பெரிய மனுசரு? சின்னத்தம்பிக்கு கண்ணாலமா? ...பேஷ்! ......எனக்குத் தெரியாமே!......'' என்று தங்கவேலு 'கொறைப்'பட்டுக் கூறினான்.

"ஒனக்குத் தெரியாமேயா! எல்லாம் தீர்மானம் செஞ்சப்பறம் சொல்லிப்போடலாம்னு நெனைச்சேன். நம்ம சோப்பனாக்கிபுரம் சொமைதாங்கி சோனியப்பப் புள்ளேயோட பேரப்புள்ளே பெரியதம்பி அய்யாவோட மவளை......''

"நில்லப்பா, நில்லு! சோப்பனாக்கிபரத்துலே சோனியப்பப் புள்ளேன்னு யாரும் இருந்தாங்கன்னு நானு கேள்விப் படலியே?'' என்று தங்கவேலு சொன்னான்.

"அதாம்ப்பா! மாரியம்மன் கோயிலு எதிரே கூட, சொமைதாங்கி கட்டிவச்சிருக்குதாமே, அந்தச் சோனியப்பப் புள்ளே!'' என்று சின்னத்தம்பி சொல்லியும் தங்கவேலு நம்பவில்லை.

"மாரியம்மன் கோயிலு எதுருலே சொமைதாங்கியே கெடையாதே! சொமைதாங்கி வைக்கணும்னுதான் புல்லுக்கட்டுக்காரங்கள்ளாம் பஞ்சாயத்தாருகிட்டே மனு செஞ்சுக்கிட்டு ஏகக் கெடுபுடியா யிருக்குது!'' என்றான் தங்கவேலு.

சின்னத்தம்பிக்கு ஒன்றும் புரியவில்லை. "நீ சோப்பனாக்கிபுரத்தையா சொல்றே?'' என்று குறுக்கு விசாரணை செய்தான்.

"எங்க மாமனாரு வூடும் அங்கேதானே இருக்குது? எனக்குத் தெரியாதா?'' என்று தங்கவேலு பதில் சொன்னான்.

"எது, மாமனாரு வூடுங்கள்ளாம் சேந்தாப்போலே ஒரு வரிசேலே கெடக்குது. மருமவப் புள்ளேங்கெல்லாம் ஒரு வரிசேலே கூடிக்கிட்டுக் கெடக்காங்க. ஆயா சொல்றது போல்...'' என்று அக்கான் ஆரம்பித்த போது, சின்னத்தம்பி குறுக்கிட்டான். மாரியம்மன் கோவில் எதிரில் சுமைதாங்கி இல்லை என்ற செய்தியானது, அவன் மனக் கோட்டையையே தகர்த்துப் போடும் பீரங்கிக் குண்டாய் வந்துவிட்டது.

"ஏன், தங்கவேலு! என்ன இருந்தாலும் அப்படிப்பட்ட பெரிய மனுசரு பொய்

ளுதுவாரா?'' என்று ஈன சுரத்தில் கேட்டான்.

"அப்படிப்பட்ட பெரிய மனுசரு அங்கே இல்லியே தம்பி!'' என்று தங்கவேலு விஷமச் சிரிப்புடன் பதில் கூறியது, தன்னைப் பழி வாங்குவதுபோல் பட்டது சின்னத்தம்பிக்கு.

"நீ என்னமோ தெரியாமெத்தான் சொல்றே!'' என்றான் சின்னத்தம்பி.

"நீதான் என்னமோ தெரியாமெ கேக்கறே?'' என்றான் தங்கவேலு.

இந்த வாக்குவாதத்திற்கு இடைவேளை அளிப்பதுபோல் வாசலில் யாரோ கதவைத் தட்டினார்கள். தங்கவேலு போய்த் திறந்தான். வேறு யாருமில்லை; தந்திச் சேவகன்தான் வந்திருந்தான். தங்கவேலு தந்தியைக் கையில் வாங்குவதற்குள்ளாகவே, "பொண்ணு ஆட்டுக்காரங்களாத்தான் இருக்கணும்'' என்றாள் தமக்கை.

"ஏது, நீங்க அதுக்குள்ளாற அவுகளைப் பொண்ணு ஆட்டுக்காரரா ஆக்கிப்புட்டீங்க?'' என்றான் தங்கவேலு.

"'ஒறவுன்னு மனசிலே வெளைச்சாப் போதும். அது நடக்கணும்னு இல்லே' என்று ஆயா சொல்லுவாங்க!'' என்று அக்கா கூறி முடிக்கும்போது, தந்தியை மொழி பெயர்த்துக் கொண்டு வரப்போன சின்னத்தம்பி பரபரப்புடன் உள்ளே நுழைந்து, "அக்கா! அவரு மத்யான வண்டியிலே வர்ராரும்!'' என்றான்.

"யாரு தம்பி?''

"அதான் பெரியத் தம்பி மாமா!''

"போடு நமிடின்னும்! அதுக்குள்ளாற மாமாவா?'' என்று கேலி செய்தான் தங்கவேலு.

"முத்தையாவை ரயிலடிக்கி வண்டி கட்டிக்கிட்டுப் போகச் சொல்லு!'' என்று தமக்கை உத்தரவிட்டாள்.

தங்கவேலு, "தம்பியே போவட்டுமே!'' என்று சிபாரிசு செய்தான்.

சின்னத் தம்பியும் "நானே போய் வாரேனே, அக்கா!'' என்று கெஞ்சாத வண்ணமாய்க் கேட்டான்.

ஆனால் தமக்கையோ, "மனசிலே ஆசை இருந்தாலும், மதிப்பை விட்டுக் கொடுக்கப்படாது!'' என்று ஆயா சொன்னதை எடுத்துக்காட்டித் தடுத்துவிட்டாள்.



"அட, பாவப் பயலே! இங்கே கூடவா கடன் கேட்டு என் உசிரை வாங்க வந்துட்டே!''

8

பிற்பகல் வேளை நெருங்க நெருங்க, சின்னத்தம்பியின் மனது முறுக்கேறிக் கொண்டே போயிற்று. தங்கவேலுவோ அவனைக் கேலிசெய்து கொண்டேயிருந்தான். கேலி தாங்காமல் சின்னத்தம்பி வாசல் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

"நல்ல காரியமெல்லாம் நம்மைக் கேட்டுக்கிட்டா நடக்குது?'' என்று ஒரு 'வசனத்'தைத் தூக்கிப் போட்டாள் தமக்கை.

"இதுவும் ஆயாதானே சொன்னது?'' என்றான் தங்கவேலு.

"ஒனக்குப் பரியாசமாத்தான் இருக்கும், தங்கவேலு!'' என்று தமக்கை தோரணையுடன் சொல்லவே, தங்கவேலு பேச்சைத் திருப்ப எண்ணி, "கண்ணுலப்புள்ளே எங்கே?'' என்றான்.

"திண்ணையிலே குந்திக்கிட்டுக் கெடப்பான்!'' என்றாள் அக்கா.

"மாமனாரு வண்டியை விட்டு எறங்கறப்போ, மருமவப்புள்ளே வாசல்லே நின்னு அவரை அழைச்சுக்கிட்டுப் போவலாமா?'' என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினான் தங்கவேலு.

"அது மொறையில்லே, அதான் ஒன்னை இருந்து சொன்னேன். என்னமோ...'' என்று அக்கா கூறிக்கொண்டே வரும்போது, எங்கிருந்தோ துக்கம் வந்து அவள்

இதற்குள் வந்தவர், "தம்பி, எத்தினி காளுதான் கண்ணுலே மண்ணை அள்ளிப் போடலாம்னு பார்த்தே? உம்.........எங் கடனை ஒரு சொடியிலே தீத்துப்புடலாம் நீ! வெனுமுன்னே வீம்புக்காவ என்னை என் இளுத்தடிக்கனும்! பணத்தை எண்ணிக் கீனே வச்சடு!" என்றார்.

அவர்தான் காயலாவரம் காளியாப் பிள்ளை!

"தம்பி! இவன் தொந்தரவு நமக்கு வாணும்; பேசாமே பணத்தைக் குடுத்து அனுப்பிடு. சோப்பனாங்கிபுரத்தாரு இங்கே வந்தப்போ, இவனும் இங்கே இருந்தா நல்லாயிருக்காது!" என்று அக்கா உப தேசம் செய்தாள்.

இந்த உபதேசம் காளியாப் பிள்ளையின் காதிலும் விழுந்தது. அவருடைய தடித்த உதடுகள் சிரமப்பட்டு ஒரு புன்னகையைச் சிருஷ்டித்தன.

சின்னத் தம்பி உள்ளே போய்ப் பணத் தைக் கொண்டு வந்து எண்ணிக் கொடுத் தான். வந்தவர் அதை வாங்கி எண்ணிப் பார்த்து இடுப்பில் முடிந்து கொண்டதும், சின்னத்தம்பியை நோக்கினார்.

"தம்பி, ரயிலடியிலேருந்து ஊடு வரையிலே ஒன் புண்ணியத்துலே வில்லுவண்டி சவாரி கெடச்சுச்சு; ரொம்ப சந்தோஷம். யாரோ வர்றதாக யாரோ சொன்னுங் களே, அது யாரு?" என்று கேட்டார் காயலாவரம் காளியாப் பிள்ளை.

அக்காவுக்கு ஆத்திரம் பொங் கிற்று. "இவன் இங்கே நிக்க வாணும். போவச் சொல்லு கடிய!" என்றாள்.

"ஓ.........சோப்பனாங்கிபுரம் ஆளா? இன்னுமா அந்தச் சொப் பனம் கண்டுக்கிட் டிருக்கிங்க...? அதான் கடனை யெல்லாம் ஜாடாவா கொடுத்துப் புட்டிங் களே! இனிமே என் சொப்ப னாங்கிபுரத்துலேருந்து கடுதாசு வருது?" என்று அந்தக் காளியாப் புள்ளே சொன்னபோது, கண் ணெதிரில் ஆயிரம் கட்டு எலெக் டிரிக் பட்டாஸ் வெடித்ததுபோல் இருந்தது அக்காவுக்கும் தம் பிக்கும்.


"அட பாவி! நீயா கடுதாசுக்கு எழுதிப் போட்டே? ஒன் தலை யிலே இடி விழ!" என்று தமக்கையும் தம்பியும் வாய்விட்டுச் சபித்தார்கள்.

"இடி வுளுணும்னு இப்போ எங்கே வுளப்போவுது? கோடை முளுவதும் களிஞ் சாவணும். இப்போ கையிலே பணம் மட்டும் வுளுந்திருச்சு! பாவம், ஊரு பேரு காயலா வாம்னாலும் போஸ்டாபீசலே அதுக்குச் சோப்பனாங்கிபுரம் என்கிறது தம்பிக்குத் தெரியாது போலேருக்குது! போய் வாரேன், தம்பி! எதோ, ஒனக்குச் சீக்கிரம் கண்ணாலமாவது ஆவட்டும், எனக்குக் கடுதாசு எளுத மறந்துடாதே!" என்று சொல்லிக் கொண்டே காளியாப் பிள்ளை, காலில் உள்ள பழஞ் செருப்பைக் கழற்றி வைத்து, கால்களைச் சுத்தமாகத் தட்டி விட்டு, மறுபடியும் செருப்பை மாட்டிக் கொண்டு நிதானமாக நடந்து போனார்.

அக்காளும் தம்பியும் ஆத்திரமும் அசடும் போட்டி போட்டுக் கொண்டு வழிய, திண்ணையில் உட்கார்ந்தார்கள்.

அதுவரை பேசாமலிருந்த தங்கவேலு, "இந்தமாதிரி சமயத்துக்குச் சரியா ஆயா ஒண்ணும் சொல்லலீங்களா?" என்றான்.

பதில் இல்லை!



விற்பனையாளர்:—இனிமேல் எடுத்துப் போடு வதற்கு எங்கள் கடையில் ஒன்றுமே யில்லை; பார்த்து எடுத்துக் கொள்ளுங்கோ!

மாதரசி:—சரி, எல்லாவற்றையும் எடுத்துப் பழையபடி மேலே போடுங்கோ; தூரப் பார்வைக்கு ஏதாவது பிடிக்கிறதான்னு பார்க்கிறேன்!

நெஞ்சை அடைத்துக் கொண்டு குரலை ஒரு கலக்கு கலக்கிற்று. "தம்பி தலை எழுத்து; ஐயாவும் போய்ட்டாரு. அம்மாவும் போய்ட்டாங்க......" என்பதற்குள், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள நினைத்த தங்கவேலு, "'கண்ணாலம் பேசறப்போ கண்ணு கலங்கக் கூடாது'ன்னு எங்க பாட்டன் சொன்னதாக எங்க ஐயா சொல்லுவாருன்னு எங்க அண்ணன் சொல்லி நானு........." என்று கேலிக் குரலில் பேசிக் கொண்டே போகவே, அக்காளுக்குக் கோபம் வந்துவிட்டது.

"இதோ பாரு, தங்கவேலு! அந்தச் சோப்பனாக்கிபுரத்தாரு எதுருலே இப்படியெல்லாம் பேசாதே, ஆமாம்!" என்று எச்சரிக்கை செய்தாள்.

'சரி தம்பியையாவது வம்புக் கிழுப்போம்' என்று தங்கவேலு திண்ணைப்புறம் திரும்பி "தம்பி...சின்னத்தம்பி! அப்படி ஒரு பக்கமாவே கழுத்தைத் திருப்பிக்கிட்டே: கழுத்து அப்படியே சாஞ்சுகின்னு போவும். கோணைக் கழுத்து மாப்பிள்ளை சமக்கு வாணும்னு சொல்லிப்புட்டுப் போயிருவாரு மாமனாரு!" என்று உரக்கக் கூவினான்.

அதற்குள் அக்கா உள்ளிருந்தபடியே தம்பியை அழைத்து, "தம்பி, நீ வண்டி தெருக் கோடிலே திரும்பினதும் உள்ளே வந்துடு!" என்றாள்.

"ஆமாம் தம்பி, வந்து இந்தாலே குதிரைக்குப் பின்னாலே ஒளிஞ்சுக்க!" என்றான் தங்கவேலு.

"தம்பி, அதோ பார்! வெட்டிக் கரையினே பொரளுது!" என்றாள் அக்கா.

"அடேடே, அதோ பாரு! சட்டைப் பித்தான் தானே கழண்டுக்கிட்டு வருது!" என்றான் தங்கவேலு.

"தலையிலே அப்படி முன்னாலே விட்டுச் சிலிக்கிட்டிருக்கியே தம்பி; அது நல்லாயில்லே! அதைச் சரியா வாரி விட்டுக்க!" என்றாள் அக்கா.

"அப்படியே, கோரைப் புல்லு மாதிரி வளர்ந்து போயிருக்கும் கண்டு மொளுகத்தையும் சுத்தமா நறுக்கி விட்டுக்க!" என்றான் தங்கவேலு.

"தங்கவேலு, நீ சும்மா இருக்க மாட்டே? இப்பத்தானு வேடிக்கை!" என்று அக்கா தங்கவேலுவைப் பார்த்துச் சொல்லவே, "இப்பத்தானே வேடிக்கை?" என்று அவன் பதில் சொன்னான்.

அதற்குள் தெருக்கோடியில் வண்டி வரும் சப்தம் கேட்டது.

"வண்டி வருது!" என்று துள்ளிக் குதித்தான் சின்னத்தம்பி, தெருக்கூத்தில் வரும் கட்டியக்காரனைப்போல!

"தம்பி, நீ உள்ளற வந்துடு! தங்கவேலு, நீ வாசப்படியிலே நின்னுக்கிடு. நானு கதவு மூலையிலே ஓரமா நின்னுக்கிடறேன்" என்று தளபதியின் தோரணையில் உத்தரவு போட்டாள் தமக்கை.

சின்னத்தம்பி உள்ளே வருவதற்கு முன் ஒரு முறை தங்கவேலுவை அழைத்து, "ஏய், தங்கவேலு! அவரு வந்தா மொகம் சிணுங்காமே, சிரிச்சுக்கிட்டே, 'வாங்க, வாங்க'ன்னு கூப்பிடு!" என்று சொல்லிக் கொடுத்தான்.

"எனக்குத் தெரியும்; நீ ஓடு உள்ளே! வண்டி வந்துருச்சு!" என்று தங்கவேலு முடுக்கினான்.

இதற்குள் வண்டி வாசலில் வந்து நின்றது. கீழே இறங்கப்போகும் சோப்பனாக்கிபுரத்தாரின் பாதம் தங்கவேலுவின் திருஷ்டியில் பட்டதுமே, "மருமவப் புள்ளேயே பார்க்க வர்றவரு புது செருப்பாப் போட்டுக்கிட்டு வரக் கூடாது?" என்று முணுமுணுத்துக் கொண்டே, "வாங்க, வாங்க! எங்கே வந்தீங்க? வண்டி மணிக்குச் சரியா வந்துச்சா?" என்று வந்தவரின் முகத்தைப் பார்ப்பதற்கு முன்னாலேயே அவன் வரவேற்பு கூறினான்.

அதற்குள் வண்டியிலிருந்தவர் கீழே இறங்கி விட்டார்.

"ஐயையோ! இது யாரு?" என்று கூவினான் தங்கவேலு.


"தம்பி, தம்பி!" என்று கூவினாள் தமக்கை.

"இவரு மாமா இல்லேயா?" என்று கூவிக்கொண்டே வந்த சின்னத்தம்பி, வந்தவரைப் பார்த்ததும் ஸ்தம்பித்து நின்றான்.

"என் மாமா இல்லே! கண்ணாலங் கட்ட பொண்ணு குடுக்கறவனும் மாமாதான்; கடன் கொடுக்கறவனும் மாமாதான்!" என்றார் வந்தவர்.

"இந்தக் காளியாப் புள்ளே எங்கே வந்துச்சு இப்ப?" என்று தமக்கை முணுமுணுத்தாள்.

"இந்த மூத்தையனை காபலி வைக்கிறேன் பாரு!" என்று பல்லைக் கடித்தான் சின்னத்தம்பி.



கம்பர் தரும் காட்சி

• • •

198. ராமனை வாழ்த்த அல்லவா வேண்டும்!

சுக்கிரீவனோடு போர் செய்வதற்கு வீட்டை விட்டு வாலி புறப்பட்ட போது அவன் மனைவி தாரை தடுத்தான்—ராமன் என்று ஒருவன் துணையாக வந்திருக்கிறான் சுக்கிரீவனுக்கு என்பதாகச் சொல்லி.

வாலி சொல்லுகிறான் :

“ஏதோ பெண்கள் சொன்னார்கள் அதைக் கேட்டுக் கொண்டு நீ தெரியாத்தனமாய்ச் சொல்லுகிறாய். ராமன் யார், அவன் தன்மை எத்தகையது என்பதெல்லாம் உனக்குத் தெரியவா செய்யும்? நான் சொல்லுகிறேன் கேள் : “உலகத்தில் பிறந்தவர்களுக்கெல்லாம் பூர்வ வினையால் எவ்வளவோ கஷ்டம். அந்தப் பூர்வ வினையை நிவர்த்திக்க முடியாதபடி உலகத்தார் எல்லாரும் அலறுகிறார்கள் ; அயர்ந்து போகிறார்கள். அத்தகைய மக்களுக்கெல்லாம் தர்ம மார்க்கம், அதாவது நித்தியமான இன்பத்தைக் கொடுக்கக் கூடிய மார்க்கங்களையெல்லாம் எடுத்துக் காட்டியவனல்லவா ராமன்?”

உழைத்தவல் இருவினைக்(கு)
ஊறு காண்கலா(து)
அழைத்(து) அயர் உலகினுக்(கு)
அறத்தின் ஆறெலாம்
இழைத்தவற்(கு) இயல்பல
இயம்பி என்செய்தாய்!—
பிழைத்தனை பாவி, உன்
பெண்மை யால் என்றான்.

[உழைத்த : செய்து செய்து வரும்; வல் இரு வினைக்கு : நீக்க முடியாத நல்வினை தீவினை ஆகிய இரண்டுக்கும் : ஊறு காண்கலாது : முடிவு காணாதபடி ; அழைத்து அயர் உலகினிற்கு : வாழ் நாள் எல்லாம் அரற்றியும் அயர்ந்தும் கஷ்டப்படும் மக்களுக்கு : அறத்தின் ஆறெலாம் இழைத்தவற்கு : இதுதான் நேரான மார்க்கமென்று பல வழிகளிலும் எடுத்துக் காட்டியவனுக்கு — ராமனுக்கு ; இயல்பல இயம்பி என் செய்தாய் : எவ்விதத்திலும் ஒவ்வாத காரியத்தைச் சொல்லி, அடடா ! என்ன செய்து விட்டாய் ; பிழைத்தனை : பெரிய பிழையே செய்து விட்டாய் ; பாவி : அடி பாதகி!]

உண்மையில் நன்மை தீமை என்ற பாகுபாடு கிடையாது. பூர்வத்தில் செய்து வந்த வினைகளின் பயனைத்தான் அந்த வேறுபாடு. நல்வினை தீவினை இரண்டும் ஒன்றுதான் என்ற தெளிவு வந்தாலொழிய யோக நிலை தென்படாது. இந்த விஷயத்தைக் குறித்துத்தான் ‘உழைத்தவல் இருவினைக்கு ஊறு காண்கலாது’ என்கிறார் கவிஞர்.

• • •

“ராமன் என்றால் இந்த இக வாழ்க்கைக்கு உரிய சத்காரியங்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பவன். அதே சமயத்தில் பர தத்துவத்திலும் ஈடுபட்டு நிற்கிற யோகி. அப்பேர்ப்பட்ட நிலையிலுள்ளவனுக்குச் சுக்கிரீவனோடு சேருவது ஒரு பெருமையா?”

இருமையும் நோக்குறும்
இயல்பி னோர்க்(கு) இது
பெருமையோ! ஈங்கிதில்ப்
பெறுவ(து) என்கொலோ!

அருமையின் நின்(று) உயிர்
அளிக்கும் ஆறுடைத்
தருமமே தவிர்க்குமோ
தன்னைத் தானரோ!

[ஈங்கு இதில் பெறுவது என்கொலோ: இவ்விடம் வந்து நீ சொல்லுகிறமாதிரி நடப்பதில் என்ன லாபம் இருக்கிறது அவனுக்கு: அருமையின் நின்று உயிர் அளிக்கும் ஆறுடைத் தருமமே: ஏதோ ஒரு அற்புதமான முறையில் உயிர் வர்க்கத்தில் எல்லாம் ஆங்காங்கு நின்று அவைகளைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிற தரும தேவதையானது: தவிர்க்குமோ தன்னைத்தான் அரோ: தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளுமோ — ராமன் அக்கிரம வழியில் பிரவேசிப்பது என்பது எவ்விதத்திலும் கருத முடியாத காரியம்.]

•••

"தாரையே! ராமனுடைய சரித்திரம் உனக்குத் தெரியாது. சக்கரவர்த்தித் திருமகனாகவே பிறந்தான். ராஜ்ய மெல்லாம் அவன் கைக்கே வந்தது. மாற்றாந் தாயாகிய கைகேசி சொன்னாள், என் மகன் பரதனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து விடு என்பதாக. அவ்வளவுதான்; ராஜ்யத்தைக் கொடுத்து விட்டான். அத்தகைய ராமனை நீ வாழ்த்த அல்லவா வேண்டும்?"

ஏற்றபேர் உலகெலாம்
எய்தி, ஈன்றவள்
மாற்றவள் ஏவ, மற்(று)
அவன்தன் மைந்தனுக்(கு)
ஆற்றரும் உவகையால்
அளித்த ஐயனைப்
போற்றலை, இன்னன
புகல்தல் பாலையோ!

[ஏற்றபேர் உலகெலாம் எய்தி: பிறப்புரிமை பற்றி இயல்பாக வந்த ராஜ்யம் முழுவதையும் அடைந்து; ஈன்றவள் மாற்றவள் ஏவ: மாற்றாந் தாயான கைகேசி கட்டளையிட; ஆற்றரும் உவகையால் அளித்த: மிக்க மகிழ்ச்சியோடு கொடுத்த — தாங்க முடியாத மகிழ்ச்சியோடு என்றே சொல்ல வேண்டும்; ஆற்றரும்: இதயம் தாங்க முடியாத; போற்றலை: வாழ்த்த வில்லையே நீ; இன்னன புகல்தல் பாலையோ: தம்பியுடன் சேர்ந்து கொண்டு தமையனைக் கொல்ல வந்தவன் என்று எப்படி உனக்குச் சொல்ல நா வந்தது?]

எவ்வளவு உன்னத நிலையில் ராமனை வைத்துப் பார்க்கிறான் வாலி!

ஆகாச வெடி

பிரிட்டிஷ் மன்னரின் தலை இந்திய ஸ்டாம்புகளி லிருந்து எடுபட்டு விடும்.

— புது டெல்லிச் செய்தி.

சுதந்திர இந்திய சர்க்கார் தலையெடுத்து சில மாதங்களுக்குள்ளே பிரிட்டிஷ் மன்னரின் தலையை ஸ்டாம்புகளி லிருந்து எடுக்க ஆரம்பித்து விட்டார்களே!

★

எட்டு லட்சம் ரூபாய்ச் செலவில் ஐந்து தென்னம் பண்ணைகளைச் சென்னை மாகாணத்தில் ஏற்படுத்த இந்திய மத்திய தென்னைக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

—புது டெல்லிச் செய்தி.

ஒரு ரூபாய் கூடச் செலவின்றி மேற்படி ஐந்து தென்னம் பண்ணைகளிலும் குரங்குப் பண்ணை ஏற்படலாம்!

★

"ஒளிவு மறைவு இன்றி நேர்மையுடன் பேசுகிறார்" என்று ஸ்ரீ கிருஷ்ண மேனனை லார்டு பெதிக் லாரன்ஸ் பாராட்டினார்.

—லண்டன் செய்தி.

"ஒளிவு மறைவு இல்லாத பாராட்டுதல் தானே இது?" என்று கேட்கப்படுகிறது.

★

பழம் பதனிடும் தொழிலுக்கு அதிகப்படியாகச் சர்க்கரை அளிக்குமாறு கேட்க, ஒரு தூது கோஷ்டியை அனுப்பத் தீர்மானித்துள்ளது.

— புது டெல்லிச் செய்தி.

தூது கோஷ்டியார் திரும்பி வந்ததும் போன காரியம் 'காயா? பழமா?' என்று அறிவிப்பார்கள் என நம்புகிறோம்.

★

பித்தளைப் பாத்திரங்களைக் குறிப்பிட்ட விலைக்குமேல் விற்றதாக இரண்டு வியாபாரிகள் கடுந் தண்டனைக் குள்ளானார்கள்.

— ஒரு செய்தி.

அவர்களது செய்கை சர்க்கார் நடவடிக்கைக்குப் பாத்திரமாகி விட்டதே!

"வாடகைக் கட்டுப்பாடு இலாகாவில் வேலை செய்யும் விசேஷ ரெவின்யூ ஆபீஸர், கோர்ட்டில் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கையில் திடீரென்று மூர்ச்சை அடைந்தார்."

— பத்திரிகைச் செய்தி.

சாட்சிகளில் யாராவது 'வீடு காலி' என்று சொல்லி யிருப்பார்களோ?

★

"எயிடட் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு அதிகப்படியான கிராண்ட் அளிக்கும் விஷயம் சர்க்கார் ஆலோசனையில் இருக்கிறது."

— அசெம்பிளி.

சர்க்கார் முடிவைத் திடீரென்று வெளியிட்டுவிடக் கூடாது என்று எச்சரிக்கிறோம். அதைக் கேட்டுப் பல ஆசிரியர்கள் மூர்ச்சை அடையக்கூடும்.

★

"ரேஷன் முறை பற்றாக்குறை ஜில்லாக்களில் ரத்து செய்யப்பட்டு விட்டதாக உணவு மந்திரி டாக்டர் ராஜன் அறிவிக்கிறார்."

— சென்னைச் செய்தி.

மகாராஜனாக இருக்கட்டும்!

★

"சர்க்கரை ரேஷனும், பருப்பு ரேஷனும் எடுபட்டதால் சென்னை நகரில் மட்டும் 150 சிப்பந்திகள் வேலை இழந்தனர்."

—பத்திரிகைச் செய்தி.

ஆகவே சர்க்கரை ரேஷன் எடுபட்டது மேற்படி சிப்பந்திகளுக்குக் கசப்பாக இருந்திருக்கும்!


★

"பல்வலிக்கு மருந்து என்ன?"

—ஒரு கேள்வி.

பல்லைக் கடித்துக்கொண்டு வலியைப் பொறுத்துக் கொள்ளுவதுதான்!

பொம்மை வண்டி



லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

பகல் மூன்று மணி இருக்கும்; தெருக்கோடியில் விளையாட்டு வண்டியின் 'டம், டம்' என்ற சத்தம் கேட்டது. பத்து நாட்களுக்கு முன்புதான் அந்தத் தெருவில் அவன் தன் வியாபாரத்தைத் தொடங்கியிருந்தான். வழக்கம்போல் அவன் ஒவ்வொரு வீட்டு வாயிலிலும் நின்று, "அம்மா! குழந்தைகள் விளையாடறத்துக்கு இது நல்ல வண்டி, அம்மா!" என்பான். பிறகு, தன்னை வேடிக்கையாகப் பார்க்க வரும் குழந்தைகளை நோக்கி, "என் ராசாக்களா! இந்த வண்டியிலே நீங்க டெல்லிப் பட்டணம் முழுக்க ஜோரா சுத்தலாம்!" என்று தன் விற்பனைப் பிரசங்கத்தை ஆரம்பித்து, சின்னஞ் சிறு உள்ளங்களை மயக்கிவிடுவான்.

மீனுவும், பசுபதியும் டெல்லிக்கு மாற்றலாகி வந்து நான்கு ஆண்டுகளாகி விட்டன. இருந்தாலும், அந்தத் தெருவுக்கு அவர்கள் அப்பொழுதுதான் புதிதாகக் குடி வந்திருந்தார்கள். அவர்கள் வீட்டு வாயிலிலும் நின்று கிழவன் உரத்துக் கூவினான். ஜன்னல் வழியாக ஓர் உருவம் தென்படவே, அந்தக் கிழவனின் உற்சாகம் அதிகமாயிற்று. ஆவலுடன் போணிக்கு அந்த உருவத்தை அவன் எதிர்பார்த்தான். திடீரென்று வாயில் கதவு திறந்தது. கண்களில் நீர் ததும்பும் ஒரு பெண்ணுருவம், "இந்த வீட்டில் குழந்தைகள் கிடையாது; நீ போ, அப்பா!" என்று ஆத்திரமும், துக்கமும் கலந்த குரலில் சொல்லிவிட்டு, கதவைப் படீரென்று சாத்திக்கொண்டு உள்ளே மறைந்து விட்டது.

இந்தச் சம்பவத்தை அந்தக் கிழவன் மறக்கவேயில்லை. இல்லையென்றால் மறு நாளும் அந்த வீட்டின் வாயிலில் வந்து அவன் நின்றிருக்க மாட்டானே?

• • •

அடுத்த நாள் அதே நேரத்தில் அவன் தெருவில் போய்க் கொண்டிருந்தான். உள்ளே மீனுவும் அவள் கணவன் பசுபதியும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று எங்கிருந்தோ வந்த பொம்மை வண்டியின் சத்தம் அவர்கள் பேச்சில் குறுக்கிட்டது. "அது என்ன சத்தம்?" என்று பசுபதி கேட்டான்.

"அதுவா, குழந்தைகளுக்கான பொம்மை வண்டி! ஒரு சின்ன 'டாங்கா'வில் ஒரு டமாரத்தைச் சேர்த்து வைத்திருக்கிறான்!" என்றாள் மீனு.

இதைக் கேட்டவுடனேயே இத்தனை நேரமும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்த பசுபதியின் முகம் மாறி விட்டதை மீனு உணர்ந்தாள். அதற்குமேல் அதிக நேரம் அவன் அங்கு உட்கார்ந்திருக்கவில்லை. தனக்கு வேலை இருப்பதாகச் சொல்லிவிட்டுப்போய் விட்டான். மீனுவும் அவனைத் தடுத்து நிறுத்தவில்லை. அப்படியே அவன் ஏதாவது சொல்லியிருந்தாலும் வாதப் பிரதிவாதங்கள் பலத்து, கடைசியில் மனப் புயலில்தான் முடியும் என்பதை அவள் அறிந்திருந்தாள்.

2

மீனுவுக்குக் கலியாணமாகி எட்டு வருஷங்களாகி விட்டன. இது வரை புத்திர பாக்கியமே ஏற்படவில்லை. கலியாணம் ஆனதும் ஊருக்குச் செல்வதற்கு முன் மீனுவின் மாமியார் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொள்ளும்பொழுது, "கூடிய சீக்கிரம் எல்லோரும் எங்கள் வீட்டிற்கு வருவீர்கள். இன்னும் ஒரு வருஷத்திற்குள் மீனுவின் சீமந்தம் வருமே அதற்கு வந்து விடுங்கள்!" என்று சொல்லிவிட்டுப் போனாள். பாவம், அவளும் அந்தச் சீமந்தத்தைப் பார்க்காமலேயே பரலோகம் போய்ச் சேர்ந்தாள்.

ஆறு மாதத்திற்கு முன்பு மீனுவின் நாத்தனார் ரங்கம்மாள் வந்திருந்தபொழுது வீட்டில் ஏக ரகளை உண்டாயிற்று. ஒரு நாள் ரங்கம்மாள் தன் தம்பியிடம், "அந்தப் பெண் மலடோ என்னவோ, அதுதான் கொழந்தை பொறக்கலே! சனியனைத் தள்ளி வைச்சுட்டு வேறே நல்ல பெண்ணை

பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோயேன்!' என்று உபதேசித்தாள்.

இதைக் கேட்ட பசுபதி ருத்ராமூர்த்தியானான். "அவள் மலடி இல்லை ரங்கா, நான்தான் மலடு!" என்று அவன் உறுமினான்.

அன்றிரவு தமக்கையை ஊருக்கு அனுப்பிவிட்டுப் பசுபதி திரும்பி வந்தபோது, "அதென்ன, சாயங்காலம் அக்காவிடம் அப்படிக் கோபித்துக் கொண்டீர்களே, அவர் மனம் நோகலாமா?" என்று மீனு கேட்டாள்.

"ஏது, 'ஒரு கன்னத்தில் உன் விரோதி அடித்தால், மற்றொரு கன்னத்தையும் காட்டு' என்றாயே ஏசு, அவரைக்கூட நீ தோற்கடித்து விடுவாய் போலிருக்கிறதே! உன்னைத் தள்ளிவிட்டு இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கொண்ணு அவள் சொல்வதை நான் கேட்டுச் சகிச்சண்டு இருக்கணுமோ? இப்ப நான்தான் மலடுன்னு டாக்டர் சொல்லியாச்சு! அப்படின்னு உனக்கு வேறே கல்யாணம் பண்ணி வைக்க தந்த அக்கா சம்மதிப்பாளா?" என்றான்.

"சரிதான், ரொம்ப சமத்தாப் பேசாதேயுங்கோ! ஏதோ தெரியாமல் சொல்லிவிட்டார். என்ன இருந்தாலும் கூடப் பிறந்த தமக்கை இல்லையா?" என்று அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள் மீனு.

3

ஒரு நாள் மீனுவுக்குத் தன் தோழி பஸந்தி தேவியின் நினைவு வந்தது. அவள் ஒரு 'ஸேவா ஸதன'த்தின் தலைவியாக இருந்தாள். உடனே அவளை 'டெலிபோ'னில் கூப்பிட்டு, "நான் சாயங்காலம் ஒரு முக்கிய விஷயமாக உங்களைக் காண வருகிறேன்" என்று அறிவித்தாள்.

அன்று மாலை ஆசிரமத் தலைவியிடம் தன் ஆசையை வெளியிட்டாள் மீனு. அதைக் கேட்ட பஸந்தி, "சரியான சமயத்தில் வந்தீர்கள், மீனு! பஞ்சாப், எல்லைப்புற மாகாணங்களிலிருந்து எங்கள் ஆசிரமத்திற்கு அகதிக் குழந்தைகள் வந்தவண்ணமாக இருக்கின்றன என்றுதான் உங்களுக்குத் தெரியுமே! நான்கு நாட்களுக்கு முன்னர் இரண்டு குழந்தைகள் வந்திருக்கின்றன. சுமார் மூன்று வயது இருக்கும், இரட்டைகள் போலிருக்கிறது. பாவம், நாங்கள் என்ன சொன்னாலும் சமாதானமடையாமல் அழுகிறதுகள். அதுகள் பேசும் பாஷை எங்களுக்குப் புரியவில்லை. பஞ்சாபி, உருது, பொஷ்து எல்லாம் பேசிப் பார்த்தோம். கடைசியாக உங்களைக் கூப்பிட்டு 'மதராஸிக் குழந்தை'களோ என்னவோ என்று கேட்க வேண்டுமென்றிருந்தேன். அதற்குள் நீங்களே வந்து விட்டீர்கள்!" என்று ஹிந்தியில் சொன்னாள்.



அந்தக் குழந்தைகளைப் பற்றிக் கேட்டவுடனேயே, அவர்களைக் காண விரும்பினாள் மீனா. பஸந்தி தேவி அக்குழந்தைகளின் அழகும், சமர்த்தும் எல்லோரையும் எப்படி வசீகரித்துவிட்டது என்பதை வழியெல்லாம் வர்ணித்துக்கொண்டே வந்தாள். தோட்டத்தின் ஒரு கோடியில் தனியாக நின்று கொண்டிருந்த இரு குழந்தைகளைக் காட்டி, "நான் சொன்ன குழந்தைகள் இவர்கள்தான்!" என்றாள்.

கண்ணீர்க் கறை படர்ந்திருந்த இரு முகங்கள் விளையாட்டில் லயித்திருப்பதைக் கண்ட மீனாவின் உள்ளம் உடனே அவர்களிடம் தாவியது. குழந்தைகளை அணைக்க அவள் கைகள் துடித்தன. "என்ன கண்ணே, என்ன வேணும்மா? உன் பெயரென்ன பாப்பா?" என்று அவள் தங்களுக்குப் பரிச்சயமான பாஷையில் பேசவே, குழந்தைகளின் முகவாட்டம் மறைந்தது. பெண் குழந்தை, "நா தம்மூ, இது தியாகு!" என்றது.

"சரி, அசல் தமிழ்ப் பெயர்கள்தான்! தர்மாம்பாளும், தியாகராஜனும்!" என்று பஸந்தி தேவியிடம் கூறினாள் மீனா.

சிறிது நேரம் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்ததில் மீனாவுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. திடீரென்று கைக் கடிகாரத்தைப் பார்த்ததும், "மணி ஏழு. அவர் வரும் நேரமாகி விட்டது; நான் என்னுடனேயே குழந்தைகளை அழைத்துக் கொண்டு போகலாமா?" என்று வினவினாள் மீனா.

அதற்குப் பஸந்தி, "அம்மா, எங்கள் ஆசிரம விதிப்படி சுவீகாரம் எடுத்துக் கொள்பவர்கள் சில பத்திரங்களில் கையெழுத்திட்டு, குழந்தைகளைச் சரியாகக் கவனித்துக் கொள்கிறோம் என்று எழுதிக் கொடுக்கவேண்டும். உங்கள் கணவரும் கையெழுத்திட வேண்டும். ஆதலால், நீங்கள் நாளைக் காலை வாருங்கள்; அதற்குள் வேண்டிய ஏற்பாடெல்லாம் நான் செய்து வைக்கிறேன்" என்றாள்.

"சரி, நாளை பொழுது விடிந்தவுடன் நான் வந்துவிடுகிறேன்" என்று மீனா சொன்னாள்.

தம்மூ, மீனா போவதைக் கண்டதும், "அம்மா, போகாதே! நானும் ......" என்று அழத் தொடங்கிவிட்டாள்.



அதைக் கேட்ட மீனாவின் உள்ளம் உருகி விட்டது. "நாளைக் காலையில் வந்து அழைத்துப் போறேண்டி, கண்ணு!" என்று தேறுதல் சொல்லிவிட்டு வந்தாள். இன்னும் சரியாக இரண்டு மணி நேரம்கூட ஆகவில்லை, அதற்குள் தம்மூவைப் பிரிவதென்றால் மீனாவுக்கு எவ்வளவு வேதனை!

4

இன்னும் இரண்டு நாள் சென்றால் தீபாவளி. ஆனால் அதைக் கொண்டாட மீனா அன்று வரை ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. ஆனால், இன்றோ வீட்டிற்குள் நுழைந்தவுடன் சமையற்காரனைக் கூப்பிட்டு தீபாவளியன்றைக்கு நிறையப் பக்ஷணங்கள் செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டாள். வேலைக்காரனை வைத்துக் கொண்டு இதுவரை பூட்டிக் கிடந்த மாடி அறையை ஒழித்துச் சுத்தம் செய்தாள். நாளை தியாகுவும், தம்மூவும் இதில்தானே விளையாடப் போகிறார்கள்? வீடு முழு

வதும் தானே மாக்கோலம் போட்டான். ஜவுளிக் கடைக்குப் 'போன்' செய்து, மூன்று வயதுக் குழந்தைகளுக்குச் சரியான அளவில் பட்டாடைகள் அனுப்பச் சொன்னாள். இவள் இந்த ஏற்பாடெல்லாம் செய்வதற்குள் பசுபதியின் மோட்டார் 'ஹார்ன்' சத்தமும் கேட்டது.

எங்கு பார்த்தாலும் விளக்கும், கோலமும், மாவிலையும், தோரணமும், தாங்கமுடியாத ஆனந்தத்தால் துள்ளிக் குதிக்கும் மனைவியையும் கண்ட பசுபதிக்கு ஒன்றும் புரியவே யில்லை. "உள்ளே வாருங்கள், எல்லாம் சொல்லுகிறேன்" என்றாள் மீனா.

அவனுக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்து கொண்டே எல்லாவற்றையும் ஆதியிலிருந்து சொன்னாள் மீனா. இந்தச் செய்தியைக் கேட்டால் கணவனும் சந்தோஷத்தால் குதிப்பான் என்று எதிர் பார்த்த மீனாவுக்கு, பசுபதியின் மௌனமும் யோசனையில் ஆழ்ந்த முகமும் சற்று ஏமாற்றமளித்தன.

"மீனா! இதை நீ எனக்காகச் செய்ய முன் வந்தாயா? வேண்டாம், வீண் தொந்தரவு! இதனால் எவ்வளவு சிரமம் உண்டாகுமென்று யோசித்துப் பார்த்தாயா? ஒரு சிறு குழந்தையை வளர்ப்பதே கஷ்டம், இரண்டு குழந்தைகளென்றால் உன்னால் முடியாது!"

"நன்றாய்ச் சொன்னீர்கள்! உங்களுக்காக என்றால், இந்தக் காரியத்தை இரண்டு வருஷங்களுக்கு முன்னேயே செய்திருக்க மாட்டேனா? இப்பொழுது மாத்திரம் என்ன, நானாகவேதான் விரும்பிச் செய்கிறேன். குழந்தை மாத்திரம் வேண்டும், தேகம் நலுங்கக் கூடாது என்றால் எப்படி முடியும்?" என்று எதிர்க் கேள்விகளினால் அவனை மடக்கினாள் மீனா.

அன்றிரவு முழுவதும் மீனா குழந்தைகளைப் பற்றியேதான் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தாள். கணவன் களைப்பு மிகுதியால் தன்னையும் அறியாமல் தூங்கி விட்டான் என்று அறிந்த பிறகே அவளும் சற்றுக் கண்ணயர்ந்தாள்.

மறுநாள் காலை எட்டு மணிக்குள் இருவரும் ஆசிரமத்தை அடைந்தார்கள். அங்கு விளையாடிக் கொண்டிருந்த தம்முவும், தியாகுவும் மீனாவைக் கண்ட மாத்திரத்தில், "அம்மா" என்று கூவிக் கொண்டே, அவள் காலைக் கட்டிக் கொண்டார்கள். பக்கத்தில் ஒரு மாமா நிற்பதைப் பார்த்ததும் தியாகுவுக்குக் கொஞ்சம் சங்கோசமாக இருந்தது. பக்தி தேவியும் இவர்கள் வரவை அறிந்து அங்கு வந்தாள்.

குழந்தைகளை நேரில் கண்ட பசுபதிக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் போய்விட்டது. எப்பொழுது அவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போகலாமென்று அவனுக்கு ஆத்திரமாக இருந்தது. கையெழுத்துப் போடவேண்டியதெல்லாம் போட்டு, பக்தி தேவியிடம் விடை பெற்றுக் கொண்டு இருவரும் குழந்தைகளுடன் வீடு திரும்பினார்கள்.

வீடு வந்ததும் பசுபதியிடம், "குழந்தைகளைக் கொஞ்சம் கவனிச்சுக்குங்கோ, இதோ வந்துடறேன்!" என்று கூறி மீனா உள்ளே போனாள். கால் மணி நேரம் கழித்து அவள் வந்து பார்த்த பொழுது, ட்ராயிங் ஹாலில் ஏகக் கூச்சல்! நாற்காலிகளெல்லாம் ஒரு ஓரமாகத் தள்ளப்பட்டிருந்தன. பசுபதி கீழே தவழ்ந்து கொண்டிருந்தான். அவன்மேல் தம்மு உட்கார்ந்திருந்தாள். குழந்தைகள் இருவரும், "ஏ, யானை! போ, போ!" என்று உற்சாகமாகக் கத்திக் கொண்டிருந்தார்கள்.

"சரி, விளையாடினது போதும்! குளிக்க வாங்கோ!" என்ற மீனாவின் குரல் கேட்ட பின்னரே, குழந்தைகளின் உலகில் தன்னை மறந்திருந்த பசுபதியும் அவளைத் திரும்பிப் பார்த்தான்.


அவள் முகம் தாய்மைப் பெருமையால் பிரகாசிப்பதைக் கண்ட அவன் முகமும் மலர்ந்தது.

* * *

கடிகாரத்தில் மணி மூன்று அடிப்பதற்கும் தெருக்கோடியில் பொம்மை வண்டியின் சத்தம் கேட்பதற்கும் சரியாக இருந்தது. இதுவரை அவன் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்த மீனாவும் வாசலுக்கு ஓடோடியும் வந்தாள்.

இவர்களுடைய வீட்டிற்கு மேலண்டை வீட்டில் வியாபாரம் செய்துவிட்டு, கீழண்டை வீட்டிற்குப் போகத் தொடங்கினான் அந்தக் கிழவன். மீனா அவனைக் கை தட்டி அழைத்து, "இங்கே வாப்பா, இரண்டு பொம்மை வண்டிகள் கொடு! எங்கள் வீட்டிலேயும் குழந்தைகள் இருக்கு!" என்றாள் பெருமை பொங்க.

அவள் அவ்வாறு சொன்னதைக் கேட்ட கிழவன், பிரமித்து அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.



முப்பத்தாறாம் அத்தியாயம்
சாட்சியம் முடிந்தது!

தேவீதீன் அன்று முதல் தேநீர்க் கடையை மூடிவிட்டு, அந்தக் கொலை வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த நியாய ஸ்தலத்திலேயே பகல் பூராவும் பழி கிடக்கலானான். மூன்று நாட்கள் தொடர்ந்தாற்போல ரமாநாதனைச் சாட்சியாக விசாரித்தனர். அந்த மூன்று நாட்களும் தேவீதீனுக்கு உண்ணவோ, உறங்கவோ பொழுதேயில்லை. எப்பொழுது பார்த்தாலும் அவனுக்கு ரமாநாதனின் ஸ்மரணையே தான். அன்று கோர்ட்டு முடிந்து திரும்பி வந்ததும், அவன் சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு விசிறியை எடுத்து விசிறிக் கொள்ளலானான். அப்பொழுது பங்குனி மாதம் பிறந்து இளங்கோடையும் ஆரம்பித்திருந்தது. ஆனால் வியர்த்து விருவிருக்கக் கூடிய புழுக்கம் ஏற்பட்டு விடவில்லை; ஆபீஸர்கள் எல்லோரும் குளிர்காலத்து ஆடைகளைத்தான் அணிந்திருந்தனர். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை; தேவீதீனுக்கு மட்டும் சொட்டச் சொட்ட வியர்த்து விட்டிருந்தது. நிஷ்களங்கமான கிழட்டுத்தனம் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த அவனுடைய முகம், செக்கு மாடு மாதிரி உழைத்து உழைத்து ஓடாகத் தேய்ந்து போயிருப்பவனுடைய முகத்தைப் போலக் களையிழந்து வாட்டமுற்றிருந்தது.

கிழவி ஒரு லோட்டாவில் தண்ணீரை எடுத்துக்கொண்டு வந்து அவன் முன்னிலையில் வைத்து, "ஹுக்கா கொண்டு வரட்டுமா?" என்று பரிவுடன் கேட்டாள். இரண்டு மூன்று நாட்களாகத்தான் அவனுக்கு இந்தச் சைத்தியோபசாரங்கள் எல்லாம் நடந்து வந்தன. இதற்கு முன்பெல்லாம் கிழவி அவனைப் பார்த்து, "இருக்கிறாயா?" என்றுகூடக் கேட்டதில்லை. இப்பொழுது கிழவி தன் மீது காட்டும் இந்தக் கரிசனத்துக்குக் காரணம் அவனுக்கு விளங்காமற் போகவில்லை. அவன் கிழவியைக் கருணை தோய்ந்த பார்வையுடன் பார்த்தவாறே, "இருக்கட்டும், இப்பொழுது வேண்டாம்" என்றான்.

"அப்படியானால் முதலில் கைகால்களைக் கழுவிக்கொண்டு வாருங்களேன்! முகத்தில் ஓரேயடியாகத் தூசி படிந்து கிடக்கிறதே!" என்றாள் கிழவி.

"கழுவிக் கொள்ளுகிறேன். அவசரம் என்ன?"

கிழவிக்கு அன்று நடந்தவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்று அளவிலா ஆவல். களைப்பு மேலிட்டதால் தேவீதீன் எரிந்து விழுவானோ என்று அவளுக்கு உள்ளூற பயம். ஆகவேதான் அவள் முதலில்

அவனுடைய களைப்பைப் போக்க விரும்பினான். களைப்பை நீக்கிவிட்டால் தானாகவே அவன் விஷயத்தைச் சொல்லி விடுவான் என்பது அவளுடைய அந்தரங்க எண்ணம்.

"கை கால்களை அலம்பிக் கொண்டு வந்தால் ஏதாவது சாப்பிடலாம். பகலில் கூட நீங்கள் சாப்பிடவில்லையே! — சரி, அந்த விசிறியை இப்படி கொடுங்கள், நான் விசிறுகிறேன்!" என்றாள் கிழவி.

தேவீதின் அவள் கையில் விசிறியைக் கொடுத்தான். கிழவி விசிறலானாள். இரண்டு மூன்று நிமிஷங்கள் கண்களை இறுக மூடிக் கொண்டிருந்து விட்டு, "இன்றோடு தம்பியின் சாட்சியம் முடிந்து விட்டது" என்றான் தேவீதின்.

கிழவி விசிறுவதை நிறுத்திவிட்டாள். "என்ன! அப்படியானால் தம்பி நாளைக் காலை வீட்டுக்கு வந்து விடுவானா?" என்று குரலில் ஆதாரம் தொனிக்கக் கேட்டாள்.

"இப்பொழுதே விட்டுவிடுவார்களா? இன்னும் ஹைகோர்ட்டுக்குப் போய் வேறு அவன சாட்சியம் சொல்லியாக வேண்டும். அப்புறம் அவன் எதற்காக இங்கே வரப் போகிறான்? எங்கேயாவது நல்ல வேலை கிடைத்துவிடும். அப்புறம் அவனுக்கென்ன குறைச்சல்? ஆனாலும் நான் அவனைப் போலத் தன்னலக்கார மனுஷனைப் பார்த்ததே யில்லை. அவனுக்குத் தன் காரியம் ஆனால் சரி. பிறர் எக்கேடு கெட்டுப் போனாலும் அக்கறை யில்லை. நிரபராதிகளான பதினைந்து ஆட்களை மாட்டி வைத்து விட்டான். ஐந்தாறு பேருக்குத் தண்டனையே கிடைத்து விடுமாம். பாக்கிப் பேருக்குத் தலா பத்து வருஷம் பன்னிரண்டு வருஷம் என்று கடுங் காவல் தண்டனை கிடைக்குமாம். அவன் சாட்சியத்தினால்தான் வழக்குப் பலப் பட்டது என்று கூட ஜனங்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். இனிமேல் அவன் எத்தனை எர்வாதம் செய்தாலும் கோர்ட் டார் காதில் ஏறுதாம். ஒருத்தன் பாக்கி யில்லாமல் எல்லாருக்குமே தண்டனை கிடைத்து விடுமாம். குற்றம் செய்தவனை யும் செய்யாதவனையும் யார் கண்டார்கள்? தெய்வத்துக்குக் கூடத் தெரியுமோ, தெரியாதோ? — சர்க்கார் பணத்தை 'அபேஸ்' செய்துகொண்டு ஓடி வந்தவன்தானே! அவனை நம்பினோமே, நாம்தான் முட் டாள்கள்!" என்றான் தேவீதின்.

கிழவி அவனை இலேசாகக் கண்டிக்கும் முறையில், "அவனவன் நல்லது கெட்டது அவனவனுடன்! அதைப்பற்றிப் பேச நாம் யார்? — உலகத்தில் தன்னலமில்லாதவன் யார் இருக்கிறான்? எவன்தான் பிறருக் காகச் சாகத் துணிவான்?" என்றாள்.

தேவீதின் குரலில் கடுமை தொனிக்க, "தன்னலத்தைப் பூர்த்தி செய்து கொள்ளு வதற்காகப் பிறர் கழுத்தைத் திருகும் ஆசாமியை விஷம் கொடுத்துக் கொன்றா லும் பாவம் இல்லை என்பேன்!" என்று கர்ஜித்தான்.

அவன் இப்படிக் கூறிக் கொண்டிருக் கும்பொழுது அவன் வீட்டு வாசலில் இருவர் வந்து நின்றனர். ஒருவன் நல்ல சிவப்பு; களை சொட்டும் முகம்; வயது பதினைந்து—பதினாறுக்குள்ளிருக்கும். இன் னொருவன் கடுத்த வயதினன். பார்ப் பதற்கு ஏதோ ஒரு ஆபீஸ் சேவகன் போலத் தோற்றமளித்தான்.

"யாரை யப்பா பார்க்கிறாய்?" என்று தேவீதின் அவர்களைப் பார்த்துக் கேட்டான்.

"உங்கள் பெயர்தானே தேவீதின் என் பது? நான் 'பிரஜாமித்திரன்' காரியால யத்திலிருந்து வருகிறேன். சதுரங்கப் போட்டியில் பரிசு கிடைத்ததே, அந்த ரமாநாதபாபுவுக்கு இவர் தம்பியாம். அவரைத் தேடிக்கொண்டு நம் ஆபீஸுக்கு இவர் வந்திருந்தார். ஆசிரியர் இவரை உங்களிடம் அனுப்பி வைத்தார். நான் போய் வரட்டுமா?" என்று சொல்லிவிட்டு, அந்தச் சேவகன் அங்கிருந்து சென்றான்.

தேவீதின் காலிலிருந்து தலைவரை கோபிநாத்தை ஒருமுறை உற்றுப் பார்த் தான். ரமாநாதன் சாயலாகவே இருந் தது. "வா அப்பா, உட்காரு! வெளி லிருந்து எப்பொழுது வந்தாய்?" என்று விசாரித்து தேவீதின் அவனை அன்புடன் உள்ளே அழைத்தான்.

கோபிநாத் அவன் சடையில் உட்காரு வது தன் கௌரவத்துக்கு உகந்ததல்ல என்று எண்ணினான் போலும்! ஆகவே அவன் வாசலில் நின்றவண்ணமே, "இன் றைக்குத்தான் வந்தோம். மன்னியும் கூட வந்திருக்கிறாள். ஒரு தர்மசத்திரத் தில் இறங்கியிருக்கிறோம்" என்றான்.

தேவீதின் எழுந்து நின்று, "அப்படியா? தர்ம சத்திரத்தில் போய்த் தங்கு வானேன்? மேலேதான் ரமாபாபுவின்


அறை யிருக்கிறது. அதில் வந்து தங்கலாமே! போய் அம்மாளை இங்கே அழைத்து வா......இல்லை, இரு; நானே அழைத்து வருவதற்கு வருகிறேன்!'' என்றான்.

பிறகு அவன் கிழவியைக் கூப்பிட்டு ரமாகாந்தின் அறையைப் பெருக்கிச் சுத்தம் செய்து வைக்கச் சொல்லிவிட்டுக் கோபிகாந்துடன் புறப்பட்டான். கிழவி உடனே அந்த அறையைச் சுத்தம் செய்தாள். பக்கத்து மிட்டாய்க் கடைக்குச் சென்று தின்பண்டங்களும் தயிரும் வாங்கிக் கொண்டு வந்தாள்; அதற்கப்புறம் கூஜாவில் தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்து வைத்தாள். பிறகு தன் முகத்தை நன்றாகக் கழுவிக் கொண்டு, நல்ல புடவை ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டாள். அப்புறம் நகைகளையெல்லாம் எடுத்து அணிந்து கொண்டு தன் மாட்டுப் பெண்ணை — அதாவது, ரமாகாந்தின் மனைவி பத்மாவை வரவேற்பதற்காக வழிமேல் விழி வைத்த வண்ணம் வாசற்படியில் வந்து தயாராக நின்றாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு கோச்சு வண்டி வாசலில் வந்து நின்றது. கிழவி ஓடோடியும் வந்து பத்மாவை வண்டியிலிருந்து இறக்கி வரவேற்றாள். காய்கறிக் கடையைப் பார்த்ததும் பத்மா முதலில் சற்றுத் தயங்கினாள். கிழவி காட்டும் அன்பையும் ஆதரவையும் கண்டதும், அவளுடைய தயக்கம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. பிறகு கிழவியுடன் கூடவே மாடி யேறிச் சென்றாள். மாடியறை மிகவும் சுத்தமாக இருப்பதைக் கண்டதும், அவளுக்கு ஒரே வியப்பாகப் போய்விட்டது.

கிழவி அவளுக்கு எதிரே ஒரு லோட்டாவில் தண்ணீரை எடுத்து வைத்துவிட்டு, ''இந்த வீட்டில்தான் தம்பி தங்கியிருந்தான். இன்றைக்குப் பதினைந்து நாட்களாகத் தம்பி யில்லாமல் வீடு வெறிச்சென்றிருக்கிறது. கைகால்களைக் கழுவிக் கொண்டு கொஞ்சம் ஆகாரம் பண்ணு. உனக்குத் தம்பியைப் பற்றின சமாசாரம் ஒன்றும் தெரியாதே, அம்மா?'' என்றாள்.

பத்மா தலையசைத்து, ''சமாசாரம் முழுவதும் தெரியாது. ஆனால் அந்தப் பத்திரிகை ஆபீஸுக்குப் போயிருந்தேனே, இல்லையோ? அங்கே 'போலீஸ் அவரைக் கைது செய்திருக்கிறது' என்று சொன்னார்கள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்'' என்றாள்.



இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டே மேலே ஏறி வந்த தேவீதின், ''கைது செய்தது உண்மைதான். இப்பொழுது அவர் ஏதோ ஒரு வழக்குக்குச் சர்க்கார்தரப்பில் சாட்சியம் சொல்ல ஒப்புக் கொண்டிருக்கிறாராம். அதனால் பிரயாகையில் அவர் மீது இனிமேல் ஒரு வழக்கும் நடக்காது. ஒருக்கால் அவருக்கு

ஏதாவது நல்ல வேலை கிடைத்தாலும் கிடைக்கலாம்" என்றான்.

"இதற்குப் பயந்துதானா அவர் சர்க்கார் தரப்பில் சாட்சி சொல்லுவதற்குச் சம்மதித்து விட்டார்! அவர் என்ன, அப்படிப் பெரிய குற்றம் செய்து விட்டார்? எதற்காக அவர் மேல் வழக்கு நடக்குமாம்?" என்று கர்வம் தொனிக்கும் குரலில் கேட்டாள் பத்மா.

"ஆபீஸ் பணத்தைக் கையாடி விட்டாராமே!"

தேவீதின் அந்தப் பழைய குப்பையைக் கிளறுவதைக் கண்டதும் பத்மாவுக்குக் கொஞ்சம் சிரமமாய்த்தானிருந்தது. இருந்தாலும் அவள் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல், "அவர் ஆபீஸ் பணத்தைக் கையாடினது என்னவோ உண்மைதான். ஆனால் எங்களுக்கு விஷயம் தெரிந்ததும், நாங்கள் காதோடு காது வைத்தாற் போல அந்தப் பணத்தைக் கொண்டு போய்க் கட்டி விட்டு வந்து விட்டோம். அவர் வீண் பீதியடைந்து ஓடி வந்து விட்டாரே யொழிய வேறொன்றுமில்லை. அதற்கப்புறம் அவர் எங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தால் இம்மாதிரி அவஸ்தைகளுக்கெல்லாம் ஆளாக வேண்டி யிருக்கிராது!" என்றாள்.

மாபெரும் வேதனைக் குட்பட்டவருக்கு அந்த வேதனை விலகினால் முகத்தில் சற்றுத் தெளிவு கொடுக்கும் அல்லவா? அதே போலத் தேவீதினுடைய முகம் பத்மாவின் வார்த்தைகளைக் கேட்டதும் சற்று மலர்ந்தது. "அப்படியா சமாசாரம்? எங்களுக்கு இதெல்லாம் தெரியுமா, அம்மா! நாங்கள் 'வீட்டுக்குக் கடிதம் எழுது; வீட்டில் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்!' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டோம். அவர் கேட்க வில்லை. பிரயாகைக் கோர்ட்டில் தன் பேரில் வழக்கு நடந்தால் என்ன செய்வது என்று வெறு பயந்தார். இதெல்லாம் அவருக்குத் தெரிந்திருந்தால் சர்க்கார் தரப்புச் சாட்சி யாவாரா, அம்மா?' என்றான்.

'சர்க்கார் தரப்புச் சாட்சி' என்றால் என்ன என்பது பத்மாவுக்கு விளங்காமல் இல்லை. 'சமூகம் அவர்களை நிந்திக்கிறது; அவமானப் படுத்துகிறது' என்ற விஷயமும் அவளுக்குத் தெரியாத தல்ல. 'சர்க்கார் தரப்புச் சாட்சிகள் எதற்காக ஏற்படுத்தப் படுகிறார்கள்; அவர்களுக்கு என்னென்ன ஆசைகள் எல்லாம் காட்டப்படுகின்றன; எப்படி எப்படியெல்லாம் அவர்கள் போலீஸாரின் கைப் பொம்மைகளாக மாறி, தன் ஆப்த நண்பர்களின் கழுத்தையும் நெருக்கத் தொடங்கி விடுகிறார்கள்' என்பது போன்ற விஷயங்களையும் பத்மா நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தாள்.

ஒரு மனிதன் தன் துர் நடத்தைக்காக வருந்தி வெட்கமுற்று உண்மையை ஒப்புக் கொண்டால், வெகு நாட்களாகவே தான் மூடி வைத்திருந்த கபட நாடகங்களையும், ஏமாற்று வித்தைகளையும் தைரியமாக வெளியிட முன் வந்தால், அவனைப் பெருந்தன்மை வாய்ந்தவன் என்று தயங்காமல் கூறிவிடலாம். அவனுடைய துணிச்சலையும் நேர்ச் செயலையும் எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். ஆனால் ஒன்று; அவன் தன் கோஷ்டி அனுபவிக்கும் பலாபலன்களையெல்லாம் தயக்கமின்றி அனுபவிக்கத் தயாரா யிருக்க வேண்டும்; தூக்குத்



தண்டனையே கிடைப்பதாயிருந்தாலும் சரி, தானும் அதைப் பெருமையுடன் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டும். அவனைத்தான் நாம் உண்மையில் வீரன், தீரன் என்று சொல்லுவோம். ஆனால் எவனொருவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகத் தன் சுயநலத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும் நீசத்தனமான கருத்துடன் தனக்குக் கிட்டப் போகும் கடுந் தண்டனைக்கு அஞ்சி, தன் தோழர்களுக்கே தீங்கு இழைக்க முற்படுகிறானோ, பால் வார்த்தாலும் பாம்பு தன் குணத்தை விடாமல் கடிப்பது போலத் தன் நண்பர்களுக்கே நம்பிக்கைத் துரோகம் செய்கிறானோ, அவனைப் பயந்தாங்கொள்ளி, மானங்கெட்டவன், நீசன், அற்பன் என்பது போன்ற அடைமொழிகளால்தான் நாம் கௌரவிக்க முடியும். சமூகத்தின் மற்றத் துறைகளில் எண்ணப்படுவது போலவே, நம்பிக்கைத் துரோகம் என்பது கொள்ளைக் கூட்டத்தார்களிடையேயும் சரி, சமூகத் துரோகிகளிடையேயும் சரி, ஐந்தாம் படை வேலையாக—மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாக—மானங் கெட்ட பிழைப்பாகத்தான் மதிக்கப் படுகிறது. அம்மாதிரியான ஆட்களுக்குச் சமூகத்தில் மன்னிப்பு என்பதே கிடையாது.

இது போன்ற விஷயங்களையும் பத்மா நன்கு உணர்ந்திருந்தாள். ஆனால் ரமாகாந்தைப் பொறுத்த வரையிலோ விஷயம் முற்றிலும் மாறுபட்டிருந்தது; இன்னும் மோசமான பிரசினையாக இருந்தது. தனக்குத் தண்டனை கிடைத்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் அவன் தான் செய்த குற்றத்தை மறைக்க முயன்றிருந்தாலோ, அல்லது இப்பொழுது அவன் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பில் சிறிதாவது உண்மைக் கலப்பு இருந்தாலோ, போனால் போகிறது என்று சொல்லி விடலாம். ஆனால் அவன் துளிக்கூடச் சம்பந்தப்படாத ஒரு வழக்கில், சர்க்கார் தரப்புச் சாட்சியாகச் சம்மதித்ததைக் கேள்விப்பட்டதும், அவளுக்கு முதலில் நம்பிக்கையே உண்டாகவில்லை. வேறு ஏதாவது தப்புத் தண்டாக் காரியங்களில் அவன் ஈடுபட்டிருக்க வேண்டும்; அதனால்தான் வேறு வழியின்றிச் சர்க்கார் தரப்பில் சாட்சி சொல்லுவதற்கு அவன் சம்மதித்திருக்க வேண்டும் என அவள் எண்ணினாள். ஆகையால் மிகவும் சங்கோசப்பட்டுக் கொண்டே, "ஆமாம்... இங்கேயும் அவர் ஏதாவது 'கோல்மால்' வேலை......" என்று முழு வாக்கியத்தையும் முடிக்காமலேயே நிறுத்தினாள்.

தேவீதீன் அவளுடைய மனத்தில் ஏற்பட்டிருக்கும் வேதனையை ஒருவாறு புரிந்து கொண்டவனாய், "அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. என்னுடன் சேர்ந்துதான் அவர் பிரயாகையிலிருந்து இங்கே வந்தார். வந்தது முதல் அவர் வீட்டை விட்டு எங்கேயும் வெளியே போனதே கிடையாது. ஒரே ஒரு நாள் நாடகம் பார்க்கும் ஆசையில் புறப்பட்டார். அன்றைக்கே போலீஸாரின் கையில் மாட்டிக்கொண்டும் விட்டார். காரணம் என்னவென்றால், அவர் ஒரு போலீஸ்காரனைப் பார்த்ததும், அவன் தன்னைத்தான் பிடிக்க வருகிறானோ என்று எண்ணிப் பயந்து ஓடினார். போலீஸ்காரனுக்குச் சந்தேகம் தட்டியது. ஆகவே அவன் அவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விட்டான். நான் அவரை எப்படியாவது விடுவிப்பது என்று எண்ணிப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூடப் போனேன். முதலில் இன்ஸ்பெக்டர் லஞ்சம் கொடுத்தால் அவரை விட்டு விடுவதாகத்தான் சொன்னார். ஆனால் நான் வீட்டுக்கு வந்து பணம் கொண்டு போவதற்குள் அவருடைய மனது ஏனோ மாறி விட்டது. ஆபீஸர்களுக்குள் என்ன பேச்சு நடந்ததோ, தெரியாது. அவரைச் சர்க்கார் தரப்புச் சாட்சி ஆக்கத் தீர்மானித்து விட்டார்கள். அப்புறம் தம்பியைக் கண்டு பேசிக் கொண்டிருந்தேன். 'இந்த வழக்கில் பொய்யே பேச வேண்டியதில்லை. போலீஸாரின் வழக்கு உண்மையானதுதான்' என்று தம்பி சொல்லவே, 'உண்மையைச் சொல்லுவதில் என்ன தப்பு?' என்று எண்ணிப் பேசாமல் இருந்துவிட்டேன். நான் அதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும், அம்மா?" என்றான்.

"எல்லாரும் சேர்ந்து தம்பிக்கு எப்படித்தான் சொக்குப் பொடி போட்டு மயக்கினார்களோ, தெரியவில்லை. தம்பி அப்படியெல்லாம் போகக் கூடியவனே யில்லை. என்னை 'அம்மா, அம்மா!' என்று எவ்வளவு அன்புடன் கூப்பிடுவான். தெரியுமா? அவனுக்கு என்னிடம் உயிர். கடைக்கு எத்தனையோ ஜனங்கள் வந்து போவதுண்டு. ஆண் பிள்ளைகளும் வருவார்கள்; பெண் பிள்ளைகளும் வருவார்கள். யாரையும் தம்பி கண்ணெடுத்துக்கூடப் பார்த்ததில்லை. தங்கமான பிள்ளை! இந்தமாதிரிப் பிள்ளையை என் ஆயுசிலே நான் பார்த்த

தில்லை, அம்மா!'' என்று கிழவி ரமாநாத்தை வாயாரப் புகழ்ந்தாள்.

"ஆமாம், தம்பி ஒரு தப்புத் தண்டா வியாபாரத்துக்கும் போனதே யில்லை. அந்த மாதிரிப் பிள்ளை ஆயிரத்தில் ஒன்றுகூடக் கிடையாது!'' என்று தேவிநின் கிழவியுடன் சேர்ந்து முத்தாய்ப்பு வைத்தான்.

பத்மா ஒரு நிமிஷம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்துவிட்டு, "ஆமாம், அவருடைய சாட்சியம் எல்லாம் முடிந்துவிட்டதா?'' என்று கேட்டாள்.

"ஹும்......மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல விசாரித்தார்கள். இன்றுதான் முடிந்தது!'' என்றான் தேவிநின்.

பத்மா கலக்கத்துடன், "அப்படியானால் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லுங்கள். அதிருக்கட்டும், நான் ஒருமுறை எப்படியாவது அவரைப் பார்த்துப் பேச முடியுமோ?'' என்று கேட்டாள்.

இந்தக் கேள்வியைக் கேட்ட தேவிநின் இலேசாகச் சிரித்துக் கொண்டே, "நன்றாய்க் கேட்டாய்? போலீஸ்காரர்களா அதற்கு இடம் கொடுப்பார்கள்? அவர்கள் ஒன்றும் அவ்வளவு மூளை கெட்ட மூட்டாள்கள் இல்லை, தெரியுமா? இப்பொழுது யாருமே தம்பியைப் பார்க்க முடியாது. அவ்வளவு கடுங்காவலில் வைத்திருக்கிறார்களாக்கும்!'' என்றான்.

இந்தச் சமயத்தில் கோபிநாத் அங்கே இல்லாமலிருக்கவே, பத்மா அவனைக் கூப்பிட்டாள். அவன் அப்போது மொட்டை மாடியில் ஏறி நின்று கொண்டு, தெரு வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். பத்மா கூப்பிட்டதும், புக்ககத்துக்கு வந்த புது மாட்டுப் பெண்ணைப் போல அவன் நாணிக் கோணிக் கொண்டு வந்து நின்றான்.

"கை கால்களை அலம்பிக்கொண்டு வா, ஏதாவது கொஞ்சம் ஆகாரம் செய்வதற்கு. உனக்குத்தான் தயிர் என்றால் ரொம்பப் பிடிக்குமே!'' என்றாள் பத்மா.

கோபிநாத் தலையைக் கவிழ்ந்துகொண்டு மறுபடியும் வெளியே புறப்பட்டான்.

தேவிநின் சிரித்துக் கொண்டே, "நம்மெதிரில் சாப்பிட மாட்டார் போலிருக்கிறது. அப்படியானால் நாங்கள் இருவரும் வெளியே போய் விடுகிறோம். ஏதாவது வேண்டியிருந்தால் சொல்லு, அம்மா! இந்த வீட்டையும் உன் வீடுபோல எண்ணு; சங்கோசப்படாதே! தம்பி எங்கள் பிள்ளையாட்டம் உயிருக்குயிராயிருந்தார். தம்பியை விட்டால் எங்களுக்கு வேறு யார் இருக்கிறார்கள்?'' என்று தந்தையின் பரிவுடன் கூறினான்.

கிழவியும் தன் குரலில் பெருமை பூரிக்க, "தம்பிக்கு என் கைச் சாப்பாடு என்றால் ரொம்பப் பிடிக்கும். அவன் ஆசாரம்-கிசாரம் பார்ப்பதேயில்லை!'' என்றாள்.

பத்மா புன்முறுவலுடன், "அம்மா, இனிமேல் உனக்குச் சமைக்க வேண்டிய கஷ்டம் இல்லை! நான் இருக்கிறேன், சமைப்பதற்கு!'' என்றாள்.

"எங்கள் சாதியில் பிறருடைய கைச் சமையலைச் சாப்பிடக் கூடாது, அம்மா! நான் இருக்கப்போவது இன்னும் இரண்டு நாளோ, நாலு நாளோ! இந்தத் தள்ளாத வயதிலே எதற்கு இந்தச் சாதிப் பூசலை விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும்? அதெல்லாம் வேண்டாம், அம்மா!'' என்று கிழவி ஆட்சேபித்தாள்.

"எங்கள் சாதியிலும் தான் பிறர் கைச் சமையலைச் சாப்பிடக் கூடாது என்கிறார்கள்!''

"உன்னை இத்தனை தூரம் வந்து யார் பார்க்கப் போகிறார்கள்? இன்னும் ஒன்று என்னவென்றால், படித்தவர்கள் எல்லாம் எங்களைப் போல ஆசாரம்-கிசாரம் பார்ப்பதில்லை. எங்கள் சாதி ஜனம்தான் மூட்டாள் ஜனம். உங்களுக்கெல்லாம் தோஷமில்லை, அம்மா!'' என்றாள் கிழவி.

"அம்மா, நீ சமைத்து நான் சாப்பிடுவது என்றால், அது தனிக்கூட நன்றாயிராது. இன்னுமொன்று என்னவென்றால், நீயோ அவரை உன் பிள்ளையாகப் பாவிக்கிறாய்! உன் பிள்ளைக்குப் பெண்டாட்டி உன் மாட்டுப் பெண்தானே? மாட்டுப் பெண் கைச் சமையலைச் சாப்பிடக்கூடாது என்று எந்த சாஸ்திரமும் சொல்லவில்லையே!'' என்று பத்மா ஒரு போடு போட்டாள்.

இதைக் கேட்டதும் தேவிநினுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அவன் மிகவும் பெருமிதத்துடன், "கேட்டாயா, உன் மாட்டுப் பெண் சொன்னதை! என்ன இருந்தாலும் உன் மாட்டுப் பெண் ரொம்பக் கெட்டிக்காரி. உன் ஆத்தான் வந்தாலும் இதற்குப் பதில் சொல்ல முடியாது! உன் மாட்டுப் பெண் கேட்ட கேள்வி நல்ல கேள்வி!......சரி, அவர்கள் சிறிது நேரம் களைப்பாறட்டும்; பாக்கியை அப்புறம் பேசிக் கொள்ளுவோம், வா!'' என்று கிழவியை அழைத்தான்.

இருவரும் கீழே இறங்கிச் சென்றதும் கோபிநாத், பத்மாவின் அருகில் வந்து, "ஆமாம், நம் அண்ணு இவர்கள் வீட்டிலா இருந்தார்? இவர்கள் சாதியில்..." என்று ஆரம்பித்தான்.

அவன் வாக்கியத்தை முடிப்பதற்குள்ளேயே, பத்மா, "இவர்கள் என்ன சாதியாயிருந்தால் நமக்கென்ன? உன்னையும் என்னையும் விட எத்தனையோ மடங்கு உயர்ந்தவர்கள். முன்பின் அறியாத ஒரு அயலூர்க்காரனை ஆறு மாதத்துக்கு மேலாகத் தங்கள் வீட்டில் வைத்துக் கொண்டு சோறு போட எவனுக்காவது மனம் வருமா? நீயே சொல்லு. நமக்கெல்லாம் அந்தத் தைரியம் ஏது? ஒருவன் ஒருநாள் வந்து தங்கிவிட்டாலே நாம் முணுமுணுக்க ஆரம்பித்து விடுகிறோமே! யாராவது வந்து விட்டால் நம் தலைக்குப் பாரமாக அல்லவா அவரை எண்ணி விடுகிறோம்! பரோபகாரச் சிந்தனையுள்ள இவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொன்னால், நம்மைத் தாழ்ந்தவர்களிலும் தாழ்ந்தவர்கள் என்றல்லவா சொல்ல வேண்டும்!" என்றாள்.

கோபிநாத் கை கால்களைக் கழுவிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தவாறே, "ஒருவனைத் தன் வீட்டில் தங்க வைத்துக் கொண்டு விட்டதனால் ஒருவன் உயர்ந்த சாதிக்காரனாக ஆகிவிட மாட்டான். சாதியில் சக்கிலியனாக இருப்பவன் எத்தனை புண்ணியங்கள்தான் செய்யட்டுமே, அதற்காக அவன் உயர்ந்த சாதிக்காரனாக ஆகிவிட மாட்டான். சக்கிலியன், சக்கிலியன்தான். இதை யாரும் மறுக்க முடியாது!" என்று வாதம் செய்யத் தொடங்கி விட்டான்.

"பிறர் பணத்தைப் பறித்துத் தின்னும் இந்தப் பிராமணப் பண்டிதர்களைவிட, பறையனைத்தான் நான் மேலானவனாக எண்ணுவேன்!" என்று பத்மா அழுத்தம் திருத்தமாகப் பதில் அளித்தாள்.

கோபிநாத் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. ஆகாரத்தை முடித்துக் கொண்டு பேசாமல் அவன் கீழே இறங்கிச் சென்று விட்டான். அவனுக்கு ஊரைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆவல். பத்மாவுக்கோ சாப்பிட வேண்டும் என்றே தோன்றவில்லை. 'ரமாநாதத்தை அந்தச் சகதியிலிருந்து எப்படிக் கரையேற்றுவது?' என்ற தீராத பிரச்னைதான் அவளுடைய மூளையில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவளுக்குக் கிட்டப் போகும் கிந்தனைகளையும் எனைங்களையும் கற்பனை செய்த மாத்திரத்திலேயே அவளுக்குத் தன் குல கௌரவங்களெல்லாம் குட்டிச்சுவராய்ப் போய் விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. நாலு பேருக்கு நேரே நிமிர்ந்து பேசக்கூட அவன் லாயக்கற்றவனாகி விடுவானே என்று அவள் மிகவும் மனம் வருந்தினாள்.

அது மட்டும் அல்ல; குற்றமற்றவர்களைக் கொலை செய்த பாவம் யாரைச் சாரும்? குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குள் யார் குற்றவாளி, யார் நிரபராதி என்றெல்லாம் யாருக்குத் தெரியும்? எல்லோருக்குமே யல்லவா தண்டனை கிடைக்கும்? நான்கைந்து பேருக்குத் தூக்குத் தண்டனையே கிடைக்கலாம். அந்தப் பாவங்கள் எல்லாம் யாருடைய தலைமேல் ஏறுமோ?

என்ன இருந்தாலும் ஒருவன் தன் சுயநலத்துக்காக இப்படியெல்லாம் செய்வதா?—சீ! என்ன பேடித்தனம்! இந்தக் காரியத்தை ஒப்புக்கொள்ள அவருக்கு ஏன் தான் இப்படி மூளை போயிற்றோ? முனிஸிபாலிடி அப்படியே அவர்மீது வழக்குத் தொடர்ந்தால்தான் என்ன? நான்கைந்து வருஷம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டி நேரிடலாம். அவ்வளவுதானே! அந்தச் சிறைத் தண்டனையிலிருந்து தப்புவதற்காக மனச்சாட்சிக்கு விரோதமாக இவ்வளவு நீசத்தனமான காரியம் செய்வதா? அப்பப்பா! நினைத்தாலே மனம் கூசுகிறதே!

முனிஸிபாலிடி தன்னை ஒன்றும் செய்து விட முடியாது என்று தெரிந்தாலும்தான் இனிமேல் அவரால் என்ன செய்துவிட முடியும்? சொல்ல வேண்டிய சாட்சியத்தைத்தான் சொல்லித் தீர்த்து விட்டாரே!......

இம்மாதிரி யோசனையில் ஆழ்ந்திருந்த பொழுது, அவளுக்குத் திடீரென ஒரு யோசனை தோன்றிற்று. 'அவர் தன் சாட்சியத்தை ஏன் மாற்றிக் கொண்டு விடக் கூடாது? முனிஸிபாலிடி அவர் மீது வழக்குத் தொடராது என்பது தெரிந்துவிட்டால் அவர் தைரியமாகத் தன் சாட்சியத்தை மாற்றிக் கொண்டுவிடலாம் அல்லவா! அந்த விஷயத்தை அவருக்கு எப்படித் தெரிவிப்பது? அதற்கு ஒரு வழி தோன்றினால் காரியம் கைகூடலாமே!

இவ்விதம் எண்ணமிட்டுக் கொண்டே அவள் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள்.

(தொடரும்)

காணமற்போன ராஜகுமாரி



சீனு

மங்களபுரி மன்னனுடைய அரண்மனை அல்லோல கல்லோலப்பட்டது. அரசனுடைய ஒரே குமாரியான ரத்னா திடீரென்று காணமற்போனது தான் காரணம். அரசனுடைய உத்தரவின் பேரில் அரண்மனைச் சேவகர்கள் நாடு பூராவும் சல்லடை போட்டுச் சலிக்கத் தொடங்கினார்கள். ராஜகுமாரியைக் கண்டு பிடித்துத் தருபவருக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுப்பதோடல்லாமல், தனக்குப் பின் தனது பட்டத்தை அளிப்பதாகவும் அரசன் பறை சாற்றுவித்தான். ஆனாலும் ரத்னா அகப்படவேயில்லை.

விஜயபுரி அரசனுடைய ஒரே புதல்வன் வீரசிம்மன். அவன் தன் சிறு வயதிலிருந்து அரண்மனை நந்தவனத்தில் வசித்து வந்த ஒரு தேவதையுடன் நட்புக் கொண்டிருந்தான். அந்தத் தேவதை வீரசிம்மனிடம் உயிரை வைத்திருந்தது. நாட்கள் செல்லச் செல்ல, தேவதையின் மனதில் ஓர் எண்ணம் தோன்றி, அது பலமாக வேரூன்றி வந்தது. ராஜகுமாரனுடைய குணத்திற்கும், ரூபத்திற்கும் ஏற்ற ஓர் ராஜகுமாரியைத் தேடிப் பிடித்து அவனுக்கு மணம் செய்விப்பது என்பதுதான் அது. இதே கவலையாக ஓர் அரசகுமாரியைத் தேடி யலைந்தது தேவதை. இதெல்லாம் இளவரசன் வீரசிம்மனுக்குத் தெரியாது.



அவசர அவசரமாக ஒருநாள் வீரசிம்மனைத் தேடிக்கொண்டு வந்த தேவதை, அவனைத் தன் அருகில் அழைத்து அன்புடன் தடவிக் கொடுத்தது. அவ்வளவுதான்; அடுத்த கணம் வீரசிம்மன் ஓர் அழகிய வண்டாக மாறிவிட்டான். தேவதை வண்டை அன்புடன் நோக்கி, "குழந்தாய், நான் உனக்குத் துரோகம் இழைத்து விட்டேன் என்று எண்ணி வருந்தாதே! எல்லாம் உன்னுடைய நன்மைக்காகவே செய்கிறேன்! நீ தாமதியாமல் உடனே பறந்து சென்று, மங்களபுரி அரண்மனைக்குப் போ! அங்கே உனக்கு ஒரு பெரிய அதிசயம் காத்திருக்கிறது. உன்னுடைய உருவத்தைத் திடீரென்று நான் மாற்றியதின் காரணம் அப்பொழுது உனக்கு விளங்கும்" என்று கூறிவிட்டு மறைந்தது.

மங்களபுரி அரண்மனையை நோக்கி வண்டு விரைந்தது. அரண்மனைத் தோட்டத்தில் நுழைந்த வண்டை, அங்கே பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த ஒரு ரோஜாச் செடி காற்றில் ஒய்யாரமாக அசைந்து கொண்டு வரவேற்பதுபோல் காட்சியளித்தது. அந்தச் செடியில் மிகப் பொலிவுடன் காணப்பட்ட ஒரு ரோஜா, வண்டைத் தன்பால் ஆகர்ஷித்தது. வண்டு அப் புஷ்பத்தை நோக்கிப் பறந்து

சென்று அதன்மேல் அமர்ந்ததுதான் தாமதம்; அந்த ரோஜாச் செடி இருந்த விடத்தில் ஓர் அழகிய ராஜ குமாரி நின்றாள். ரத்னாதான் அந்த ராஜகுமாரி!

அதே சமயத்தில், வண்டும் ராஜ குமாரன் வீரசிம்மனாக மாறிவிட்டது. அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள் ராஜகுமாரி. ராஜகுமாரனும் அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். இருவர் கண்களும் ஒரு விநாடி ஏதோ பேசிக் கொண்டன. பிறகு, "தாங்கள் யார்? இங்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள்?" என்று ஆச்சரிய மேலீட்டால் கேள்விகளை யடுக்கினாள் ராஜகுமாரி.

"பெண்ணே! முதலில் நீ யார் என்பதையும், இந்தத் தோட்டத்தில் பூ வுருவத்தில் மாறி நின்ற விவரத்தையும் கூறு!" என்று வீரசிம்மன் கேட்டான்.

ரத்னா நாணத்தினால் தலை குனிந்தவாறே பேசலானாள்:

"சில தினங்களுக்கு முன், தோட்டத்தில் நான் ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்கையில், இங்கு சோர்வுடன் படுத்து உறங்கிக் கொண்டிருந்த ஒரு தேவதையின் தூக்கத்தைக் கலைத்து விட்டேன். அத் தேவதை என்மேல் கோபங் கொண்டு, ரோஜாப் பூவாக மாறும்படி என்னைச் சபித்து விட்டது. நான் அதற்காக வருந்தி கண்ணீர் விட்ட பொழுது, அந்தத் தேவதை என்னை நோக்கி, 'உனக்கு எவ்விதத்திலும் கெடுதி செய்ய வேண்டும் என்பது என்னுடைய நோக்கமில்லை. உன் நன்மைக்காகவே உனது உருவத்தை மாற்றியிருக்கிறேன். சீக்கிரத்திலேயே ஓர் அழகிய வண்டு உன்னை வந்தடையும். அப்பொழுது நீ சுயரூபத்தை யடைவாய்; ஓர் அழகிய ராஜகுமாரனையும் மணாளனாகப் பெறுவாய்!' என்று கூறி மறைந்து விட்டது. அந்தத் தேவதை என்னைச் சபித்தபொழுது, அது இவ்வளவு நல்ல தேவதையாக இருக்கும் என்று நான் எண்ணவேயில்லை!" என்றாள்.

ரத்னா மூச்சு விடாமல் கூறி வந்த இவ்வரலாற்றைக் கேட்ட வீரசிம்மன் கண்களை அகல விரித்தான். ஆம்; அவனுடன் பழகி, அவனுக்கு நன்மை புரிந்தஅதே தேவதைதான் ரத்னாவின் உருவத்தை மாற்றிய தேவதையும்!

பின் இருவரும் அரண்மனையை நோக்கி நடந்தனர். எதிர்பாராத விதமாய்த் தங்களது பெண்ணைக் கண்ட மங்கள வர்மனுக்கும், ராணிக்கும் மகிழ்ச்சிப் பெருக்கால் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. சீக்கிரத்திலேயே அவர்களுடைய திருமணமும் விமரிசையாக நடந்தேறியது.



பாதி சரி!

எஸ்.வி.எஸ்.

தில்லைவனம் என் நெடு நாளைய நண்பன். ஆனால் அவன் வெளியூரிலிருந்ததால் மாதத்துக்கு ஒரு தடவை கடிதத்தில் சந்திப்போமே தவிர, நேரில் சந்திப்பது ரொம்ப அபூர்வமாக இருந்தது. அப்படிப் பட்ட அபூர்வமான சந்தர்ப்பம் சமீபத்தில் எனக்கு வாய்த்தது. தில்லைவனம் ஒரு நாள் காலை கையில் ஒரு புஷ்பப் பொட்டலத்துடன் என் வீட்டுக்குள் திடும் பிரவேசமாக நுழைந்தான்.

நான் "தில்லைவனமா? வா, வா! ரொம்ப நாளாகிவிட்டதே, உன்னைப் பார்த்து!" என்று சொல்லி அவனை வரவேற்றேன். பிறகு ஊர் விஷயங்களும் உலக விஷயங்களும் பற்றிப் பேசிவிட்டு, 'அவன் எங்கே வந்தான், எதற்காக வந்தான்?' என்றும் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

ஆமாம், நான் நினைத்தபடி அவன் தன்னுடைய கம்பெனியின் வேலையை முன்னிட்டுச் சென்னைக்கு வந்திருப்பதாகத் தெரிவித்தான். ஆனால் அது அவனுக்கு அவ்வளவு முக்கியமாகப் படவில்லை. அவன் மனைவி சொல்லி யனுப்பிய காரியந்தான் ரொம்ப முக்கியமாகப் பட்டது. அந்தக் காரியத்தை முதற் காரியமாகவும், வெற்றிகரமாகவும் செய்து முடிக்க வேண்டுமே என்ற கவலைதான் அவனுக்குத் தீராத கவலையாக இருந்தது.

அவன் மனைவியின் தோழி கமலம் மாம்பலத்தில் எங்கேயோ குடியிருக்கிறாளாம். அவளுடைய வீட்டுக்குப் போய், தன் மனைவி கொடுத்தனுப்பியிருக்கும் சண்பகப் பூப் பொட்டலத்தை, அந்தப் புஷ்பங்கள் வாடி வதங்கி விடுவதற்கு முன் அவன் கொடுத்து விட்டு வரவேண்டுமாம்.

இதைக் கேட்டவுடனேயே மனசுக்குள் வேலையற்ற வேலை ஒன்று வந்ததே என்று நான் எண்ணிக்கொண்டேன். இருந்தாலும், "தில்லைவனத்தின் மனைவியின் தோழி வீடு என்றால் மாம்பலத்தில் அகப்பட்டு விடுமா? அவளுடைய புருஷன் பெயர், தெருப் பெயர் ஒன்றும் வேண்டாமா?" என்றேன்.

"எல்லாம் இருக்கு, அப்பா! அந்த விலாசத்தை எழுதி எங்கேயோ வைத்தேன். சற்று இரு, தேடி எடுக்கிறேன்!" என்று சொல்லி விட்டுத் தன் கோட்டுப் பைகளைத் தேட ஆரம்பித்தான் அவன். அவ்வளவு தான்; தில்லைவனம் தேடிக் கொண்டேயிருந்தான். விலாசம் கிடைக்கவேயில்லை. ஆகவே நான் அவனுடைய ஞாபகசக்தியில் தேட ஆரம்பித்தேன்.

"என்னப்பா, கமலத்தின் கணவர் பெயர் உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

"பெயர் முழுதும் ஞாபகமில்லை. ஆனால் அவருடைய பெயர் என்னவோ நாதன் என்று வரும்!" என்று இழுத்தாற்போல் சொன்னான்.

நான் கடைசியில் நாதன் என்று வரும் பெயர்களின் ஜாபிதா ஒன்று கொடுத்தேன்:

சாமிநாதன்,
ராமநாதன்
ரகுநாதன்,
விசுவநாதன்
மனத்துணைநாதன்......

ஒரு கணம் தில்லைவனம் யோசித்தான். "ராமநாதன் போலிருக்கிறது... இல்லை... ...இல்லை; ரகுநாதன்......ரகுநாதனு...! இல்லை......சாமிநாதன் போலிருக்கிறது!" என்று தொடர்ந்தாற்போல் அவன் யோசிக்க ஆரம்பித்து விட்டான்.

"இதோ பார், தில்லைவனம்! ராமநாதனு, ரகுநாதனு, சாமிநாதனு—எதாகிலும் ஒன்றை நிச்சயமாகச் சொல்லு!" என்றேன்.

"சாமிநாதன் என்றுதான் நிச்சயமாகச் சொல்லுகிறேனே!"

"எங்கே இருக்கிறானும்? தெருப்பெயர் ஞாபகமிருக்கிறதா?"

"அந்தத் தெருப் பெயரில் நாராயண என்று வரும்......"

"ஓ! மாம்பலத்தில் வெங்கடநாராயண ரோடு என்று ஒன்று உண்டு. அதுவோ?"

"ஆமாம்; ஆமாம். அதுவேதான்!"

தில்லைவனம் வெகு உற்சாகமாக ஆமோதித்துவிட்டாலும் எனக்குப் 'பகீர்' என்றது.

"அதுவா! அந்தத் தெருவின் நீளமே ஒன்றரை மைல் ஆயிற்றே! அதில் எங்கே உன் சாமிநாதனைத் தேடிக் கண்டு பிடிப்பது?" என்று அங்கலாய்த்தேன்.

"வீட்டு நம்பர்கூட நினைவிருக்கது. இரு. சொல்லுகிறேன்!" என்று அவன் தலையைச் சொறிந்த வண்ணம் யோசித்தான். கொஞ்ச நாழிகைக்குப் பிறகு, "இரண்டு இலக்கமுள்ள எண். இரண்டையும் கூட்டினால் ஏழு வந்ததாக ஞாபகம்" என்றான்.

"அடேயப்பா! உனக்குக்கூட ஞாபகமிருக்கிறதே!" என்று அவனை வியந்தேன்.

"கூட்டினால் ஏழு என்று ஞாபகமிருக்கிறதே தவிர, என்ன எண் என்று ஞாபகமில்லையே!" என்றான் தில்லைவனம்.

நான் "ஐம்பத்திரண்டா?" என்றேன்.

"இல்லை."

"25!"

"இல்லை."

"43?"

"இல்லவே இல்லை! அந்த எண்ணில் ஒன்று வரும்!"

"ஒகோ! பதினாறு?"

"ஆமாம்; ஆமாம். அதேதான்!"

இவ்வாறு நாங்கள் ஸ்ரீமதி தில்லைவனத்தின் தோழி கமலத்தின் கணவன் விலாசம் இன்னதென்று தெரிந்து கொண்டது இதுதான்:—

ஸ்ரீ சாமிநாதன்,
16, வெங்கடநாராயணா ரோடு,
மாம்பலம்.

இந்த விலாசத்தை ஒரு தடவை நினைத்துப் பார்த்தவுடனேயே, "ஐயோ! அவ்வளவு நீண்ட தெருவில் 16 எந்த மூலையில் இருக்கிறதோ! இன்றைக்குக் கால் ஒடிந்து விடப்போகிறதே?" என்று எனக்கு ஒரே பயமாகப் போய் விட்டது.

ஆனால், என்ன ஆச்சர்யம்! மாம்பலத்தில் வெங்கட நாராயணா ரோடில் நுழைந்து நாலு வீடு கடந்ததுமே 16-ம் நம்பர் வீடு அகப்பட்டு விட்டது.

('நாலு வீடு தாண்டியவுடன் எப்படி 16-ம் நம்பர் வந்தது?' என்று கேட்காதீர்கள். மாம்பலத்தில் எப்படியோ வரும்!)

என் சந்தோஷத்திற்குக் கேட்க வேண்டுமா?

அந்த வீட்டு வாசலில் ஒரு அம்மாள் உருவத்தில் சதேஹ நிரனுடன் போட்டியிட்டுக் கொண்டிருந்தாள். அந்த அம்மையாரை, "இங்கே சாமிநாதன் என்று யாராகிலும் இருக்கிறார்களா?" என்று தில்லைவனம் விசாரித்தான்

"ஓ! இருக்கிறார்கள்!" என்றார் அந்த அம்மையார்.

இதைக் கேட்டதும் எனக்குண்டான ஆச்சரியத்துக்கு அளவில்லை.

தில்லைவனம், "நாங்கள் அவரைப் பார்க்க வேண்டும்" என்றான்.

"அவர் வெளியே போய் விட்டாரே!"

"அவர் வீட்டில் அவருடைய சம்சாரம் அல்லது வேறு......" என்று தில்லைவனம் இழுத்தான்.

"நான்தான் அவர் சம்சாரம். உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றாள்.

இதைக் கேட்டதும் தில்லைவனத்துக்குத் தலை கிறுகிறு என்று சுற்ற ஆரம்பித்து விட்டது. எனக்குக் கண்கள் இருண்டு வந்தது. ஆனால் தில்லைவனம், "என்ன, நீங்களா! அவன் மனைவி கமலம் அல்லவா, ஒல்லியா யிருப்பாளே!" என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தான்.

எனக்கோ ஒரே பயம்—அந்த அம்மாள் தன்னைக் கேலி பண்ணுவதற்காக வந்த விஷமிகள் என்று நினைத்துத் திட்ட ஆரம்பித்து விடுவாளே என்று. அந்தப் பயத்தில் உடம்பு முழுதும் ஒரு தரம் எனக்கு வியர்த்து விட்டது.



அந்த எல்லையை விட்டு வெளியே வந்த போது, "என்ன, தில்லைவனம்! உனக்குக் கொஞ்சங்கூடப் போதாது!" என்றேன்.

இவ்விதம் பேசிக் கொண்டே நாங்கள் ஒரு பெரிய ஹோட்டல் வாசலில் வந்து நின்றோம்.

"போதுமோ, போதாதோ! இங்கே ஒரு கப் காப்பி சாப்பிட்டு விட்டுப் போவோம் வா!" என்றான் அவன்.

காப்பி சாப்பிட்டு விட்டுப் பில் கொடுப்பதற்காகத் தில்லைவனம் தன் 'பர்ஸை'த் திறந்தான். அதிலிருந்து ஒரு ரூபாய் நோட்டுடன் ஒரு சிறு காகிதத் துண்டும் வந்தது. பணத்தைக் கொடுத்து விட்டு அந்தக் காகிதத் துண்டைப் பிரித்துப் பார்த்தான்.

"அடே, இதோ இருக்கிறது, கமலத்தின் விலாசம்!" என்று சொல்லி என்னிடம் நீட்டினான்!

அதில், கமலத்தின் புருஷன் பெயர் தில்லைவனம் சொன்னாற்போல், சாமிநாதனாக இருக்கவில்லை; விசுவநாதனாக இருந்தது. தெருப் பெயரும், தில்லைவனம் சொன்னாற்போல் வெங்கட நாராயண ரோடாக இருக்கவில்லை. கோபதி நாராயணசாமி செட்டி ரோடாக இருந்தது. வீட்டு நம்பரும் 16-ஆக இருக்கவில்லை; 61-ஆக இருந்தது!

"என்ன, தில்லைவனம் இந்த விலாசத்துக்கும் நீ சொன்ன விலாசத்துக்கும் சம்பந்தமே இல்லையே, அப்பா!" என்றேன்.

'இருந்தாலும் இந்த விலாசத்தில் நான் பாதியாகச் சொன்னேன் இல்லையா? அதை நீ ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்!" என்றான் தில்லைவனம்.

"ரொம்ப அழகுதான் போ!" என்றேன் நான்.

• • •

ஆனால் ஒரு விதத்தில் தில்லைவனத்தின் மேதையை என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

கமலத்தின் விலாசத்தைத் தவறாகச் சொன்னான் என்றாலும், அந்த அம்மையாரின் விலாசத்தை எவ்வளவு சரியாகச் சொன்னான். அவர் கணவர் பெயர் தெருப் பெயர், வீட்டு இலக்கம் எல்லாமே எவ்வளவு சரியாகச் சொல்லியிருக்கிறான்!

எத்தனையோ பேரைப்போல தில்லைவனம், தெரிந்த விஷயங்களை விட தெரியாத விஷயங்களில் நிபுணன் போலும்!

காலக்ஷேபம்

அதுதான் சரி!

தாயார் (விஷமப் பிள்ளையிடம்):—பிடிவாதம் பிடித்து அடம் பண்ணினாயோ, உன்னைப் போலீஸ்காரனிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன். என்ன, கூப்பிடட்டுமா?

பிள்ளை:—கூப்பிடேன், அப்பா சைகிளுக்கு லைசென்ஸ் வாங்காததைச் சொல்லி விடுகிறேன்!

★

வேலைத் தொந்தரவு

அவள்:—என் புருஷனுக்கு நாளுக்கு நாள் பலஹீனமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

இவள்:—வேலைத் தொந்தரவாயிருக்கலாம்.

அவள்:—ஊஹூம்! இப்போதுதானே வேலை போச்சு!

★

ரொம்ப தாராளம்!

எஜமான்:—முனியா, செடிக்கு ரொம்ப தாராளமாகத் தண்ணீர் ஊற்றுகிறாயே! செடி என்னத்துக்கு ஆகும்!

முனியன்:—மன்னிக்கணுங்க. தோட்ட வேலை எனக்கு அவ்வளவு பழக்கமில்லீங்க!

எஜமான்:—இதற்குமுன் நீ என்ன வேலை செய்தாய்?

முனியன்:—பால் வியாபாரம் செய்துகிட்டு இருந்தேனுங்க!

சரிதான்!

பெரியவர்:—அப்பா உள்ளே இருக்கிறாரா, அம்பி?

பையன்:—இதென்ன கேள்வி, மாமா? இல்லாமப் போனா, ஞாயிற்றுக்கிழமையிலே சாயந்திர வேளையிலே இந்தப் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு இப்படி அழுவேனா?

★

உண்மை!

கணவன்:—போன மாதம் எனக்குப் பல் கட்டினீர்களே?

பல் வைத்தியர்:—ஆமாம்; ஞாபகமிருக்கிறது.

கணவன்:—அது ரொம்ப வலித்து உபத்திரவம் செய்கிறதே!

பல் வைத்தியர்:—நான்தான் சொன்னேனே,—அது நிஜப்பல் மாதிரி இருக்கும் என்று!

★

தெரிந்ததுதான்!

அம்மா:—கிட்டு. இப்படிப் பரட்டைத் தலையும் அழுக்குத் துணியுமாய் நின்று கொண்டிருந்தால் உன்னை அப்பா பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப மாட்டார்.

கிட்டு:—தெரியும், அம்மா. அதற்காகத்தான் நான் இப்படி இருக்கிறேன்!



ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், உங்கள் கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்புளுயன்ஸா' முதலிய விஷஜுரங்களானாலும் சரி, சூடு காரணமாகவே மயிர் அபிரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர சமயங்களில் உஷ்ணம் அதிகமாக ஏறி விடினும், மயிர் உதிர்வது மட்டும் தவறுவதே யில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சை செய்து தடுக்காம லிருந்து விட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய் விடும்.

வெள்ளம் வந்த பிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கு முன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரை பங்கு கால் பங்காகக் குறைந்து விட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்தி செய்து பூர்ணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப் பரிக்ஷைகளும் செய்தான பிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச் சிறந்தது என்று தெரியவர்தால், கேசவர்த்தினியை முதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்

"எவர்ஸில்வர்"

பாத்திரங்கள்

வெள்ளியின் அந்தமும் இரும்பின் உறுதியும் ஒருங்கே கொண்டவை

(பம்பாய் தேவிதயாள் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டவை)

★

தென்னிந்தியாவிற்குப் பூரண விநியோகஸ்தர்கள்:

ஸாம்ஸன் & கோ.

எஞ்சின், எலெக்ட்ரிக் மோட்டார், பம்பு ஸெட் டீலர்கள்

8/22, பிராட்வே, மதராஸ்

தந்தி: "BARAPASH"] [போன்: 4521

★

வெளியூரில் கிடைக்குமிடம்:

புதுக்கோட்டை ஸ்டேட்டிற்கு:

ஜெனரல் கமர்ஷியல் கார்ப்பொரேஷன்

"ஸ்ரீநிலையம்", கிழக்கு மெயின் வீதி

புதுக்கோட்டை

இராமனாதபுரம் ஜில்லாவிற்கு:

ஜெனரல் கமர்ஷியல் கார்ப்பொரேஷன்

(AL. PR. ராமனாதன் செட்டியார் வீடு)

புது மார்க்கெட் தெரு, காரைக்குடி

மதுரைக்கு:

ஸ்டீவா & கம்பெனி

9, சின்னகடை தெரு, தெற்கு வாசல், மதுரை

தென்னாற்காடு ஜில்லாவிற்கு:

C. T. சோமையா செட்டியார்

c/o Y. PR. KR. ST. பாங்க்

பன்ருட்டி (தென்னாற்காடு ஜில்லா)

சித்தூர், செங்கல்பட்டு, வட ஆற்காடு, திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களுக்கும், சுதேச சமஸ்தானங்கள், இலங்கை ஆகிய இடங்களுக்கும் சப்-டீலர்களாக விரும்புவோர் எழுதவும்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI ஜனவரி 4, 1948

4 அணா

3 பொக்கிஷங்கள்



ஏஜண்டுகள்: — சாஜன் டிரக் ஸ்டோர்ஸ், தனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா, பெர்ஹாம்பூர் & செகந்திராபாத்; ஸ்ரீ ஜா கமடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி

சிலோன் ஏஜண்டுகள். — M.O.A. கனி & கோ., 96, தாம்ஸ் ரோடு, கோட்டை, கொழும்பு



மதராஸ் ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு:
B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment

